
# செய்குத்தம்பிப் பாவலர்

மு. அப்துல்கரீம்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

# செய்குத்தம்பிப் பாவலர்

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# செய்குத்தம்பிப் பாவலர்

ஆக்கியோன்
மு. அப்துல்கறீம்

சாகித்ய அகாதெமி

*Seiguthambi Paavalar* : Monograph in Tamil by M. Abdul Kareem
Sahitya Akademi, New Delhi, Reprint (2004) Rs. 25


முதல் வெளியீடு : 2001
இரண்டாம் வெளியீடு : 2003
மூன்றாம் வெளியீடு : 2004
ISBN 81-260-1248-X

**சாகித்திய அகாதெமி**
தலைமை அலுவலகம்:
இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110 001.

விற்பனை:

ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டடம்,
டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001.

443, குணா காம்பளக்ஸ் (பழைய எண். 303),
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018.

172, மும்பை மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பை 400 014.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கொல்கத்தா 700 053.

விலை ரூ. 25

அச்சிட்டோர் : ராஜ் எண்டர்பிரைசஸ், சென்னை-14.

# பொருளடக்கம்

# முன்னுரை

**நா**ஞ்சில் நாடு எனவும் வேள்நாடு எனவும் தமிழகத்தில் முன்னர் குறிக்கப்பட்டு வந்த கோட்டாறு என்னும் பகுதி பிற்காலத்தில் நாகர்கோவில் என வழங்கப்பட்டது. கோட்டாற்றின் ஒரு பகுதி இடலாக்குடி (இடர்இலாக்குடி) யாகும். அச்சிற்றூரில் 1874-ஆம் ஆண்டில் செய்குத்தம்பி பிறந்தார். பக்கீர்மீரான் ஆமினா அம்மையார் எனப்பெயர் பெற்றிருந்த தம்பதியருக்கு மூன்றாவது பிள்ளையாகப் பிறந்தார். நெசவுத் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்த எளிய குடும்பத்தில் பிறந்தவர்; கல்வி ஞானத்தில் பாரம்பரியப் பெருமைமிக்க குடும்பம் அது.

இளமையிலேயே வியத்தகு நினைவாற்றலும் அறிவுத் திறமும் கொண்டு கருவிலேயே திருப்பெற்றிருந்த செய்குத் தம்பியின் உள்ளம் கற்ற இலக்கியங்கள் அனைத்தையும் கற்றவாறே உள்ளத்தில் அமைந்துவிடும் உயர்வு பெற்றிருந்தது. சிறந்த ஆசான்வழித் தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் தெளிவாகக் கற்றுப்பெரும் புலமை பெற்றிருந்தார்.

இந்தியத் திருநாட்டின் தென்கோடிக் கடற்கரையில் வாழ்ந்த செய்குத்தம்பி தம்சீரிய செந்தமிழ்ப் புலமையாலும் சிந்தனைத் திறத்தாலும் நாவன்மையாலும் அக்காலத் தமிழகம் அறிந்து போற்றிக் கொண்டாடும் அரிய வாய்ப்பினைப் பெற்றார். தமிழ் இலக்கியங்கள் சார்ந்த சமயத்தைப் பாராது அவ்விலக்கியப் பயன் ஓர்ந்து அவை இந்திய நாட்டின் பொதுச் செல்வங்கள் எனக் கருதிப் போற்றிக் கொண்டார். ஆன்மநேய ஒருமைப்பாடு பேசிய இராமலிங்க வள்ளலாரிடத்துப் பேரீடுபாடு கொண்டு அவரது பாடல்கள் அருட்பாக்களே எனப் பேசித் தமிழ் மக்கள் உள்ளங்களில் உயர்ந்த இடத்தைப் பெற்றார். செய்குத்தம்பிப் பாவலர் கம்பனிடத்துக் கொண்டிருந்த ஈடுபாடு குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழ்மக்கள் உள்ளங்களில் பாவலராக வீற்றிருந்த செய்குத்தம்பியார் தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், சதாவதானி, மகாமதி, அல்லாமா ஆகிய புகழ்ப் பெயர்களை ஈட்டிப் புகழ் வாழ்வு வாழ்ந்தார். நாட்டு நலத்தில் நாட்டங்க கொண்ட பாவலர் நாட்டு விடுதலையில் பங்கேற்றி இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் காந்தியடிகள் தலைமையில்

காங்கிரஸ் இயக்கத்தில் காந்தியடிகள் தலைமையில் தொண்டாற்றினார். வாழ்நாள் இறுதிவரை கதராடையே அணிந்து நாட்டன்பராக வாழ்ந்தார். இன்று இந்தியத்திருநாட்டிற்கு இன்றியமையாது தேவைப்படும் சமூக நல்லிணக்கத்தில் பேரார்வம் கொண்டு செயல்பட்டார். சதாவதானிப் பாவலர் அவர்களது சமூக நல்லிணக்கப்பணி இன்றும் வழிகாட்டும் ஒளிவிளக்காக விளங்கி வருகின்றது.

ஒப்பிலக்கிய வழி இந்தியத் திருநாட்டு மக்கள் உள்ளங்களில் ஒருமைப்பாட்டை உருவாக்க நற்பணியாற்றி வருகின்ற சாகித்திய அகாடமி பாவலர் பற்றிய இந்நூலை வெளியிடுவது பொருத்தம் மிக்கதாகும். என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டுக்கல்.
2.8.2001

மு. அப்துல்கரீம்

# இளமைக்கல்வி

சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் 1874-ஆம் ஆண்டில் நாஞ்சில் நாட்டில் இளங்கடை என்ற சிற்றூரில் பிறந்தார். நன்செய் நிலம் நிறைந்த பகுதி ஆகையால் அது நாஞ்சில் நாடு என வழங்கப் பட்டது. தமிழ் வேளிர் குல மன்னர்களால் ஆளப் பட்டமையின் அது வேணாடு (வேள்நாடு) எனவும் அழைக்கப்பட்டது. பின்னர் திருவாங்கூர் மன்னரின் ஆட்சிக்கு உட்பட்டது. அக்காலத்தில் அரசு மொழியாக மலையாளம் இருந்தது. பின்னர் இந்திய விடுதலைக்குப் பிறகு மொழிவழி மாநிலங்கள் பிரிந்தபோது தமிழகத்தில் நாகர்கோவில் மாவட்டமாகியது.

நாகர்கோவில் என இந்நாளில் வழங்கப்படும் பகுதி முன்னர் கோட்டாறு என்றே வழங்கி வந்துள்ளது. 'கோட்டாறான மும்முடிச் சோழபுரத்து நாகர்கோவில்' என்னும் கல்வெட்டுத் தொடர் இதனை உணர்த்தும். பழையாறு எனப்படும் வளைந்த ஆற்றின் கரையில் அமைந்ததால் கோட்டாறு எனப்பெயர் பெற்றது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட 'பாண்டிக்கோவை'யிலும் பன்னிரண்டாம் நூற்றாண்டில் பாடப்பட்ட கலிங்கத்துப்பரணியிலும் கோட்டாறு குறிக்கப் பெறுகிறது.[1] இப்பகுதி இராசராச சோழன் காலத்திலிருந்து (பதினொன்றாம் நூற்றாண்டு) சோழர் ஆட்சிக்கும் பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து கேரளர் ஆட்சிக்கும் உட்பட்டிருந்தது. ஆங்கிலேர் வருகைக்குப் பின்னர் நாகர்கோவில் என வழங்கப் பட்டது; இந்நகரின் இதயமாக உள்ள அங்காடித் தெரு முதல் இளங்கடை உள்ளிட்ட நிலப்பரப்பு இன்றளவும் கோட்டாறு எனவே வழங்கப்படுகிறது.

நாஞ்சில் நாட்டின் ஒரு பகுதியாக விளங்கும் கோட்டாறு மிகப் பழமை மிக்க பகுதியாகும். தொல்காப்பியப் பாயிரத்தில் குறிக்கப்படும் அதங்கோட்டாசான் இப்பகுதியைச் சார்ந்தவரே என்பது தெளிவு. இன்றும் அதங்கோடு என்ற பெயரில் இங்கு ஓர் ஊர் வழங்கி வருகிறது. மேலும் ஆசிரியனை ஆசான் என்று குறிக்கின்ற மரபும் இங்கு இன்றுவரை வழங்கி வருகிறது.[2] கோட்டாற்று இளம் பெருமனார் என்பாரது பாடல் சோழநாட்டுச் செந்தலை என்ற ஊரில் உள்ள சிவன்கோயில் கல்வெட்டில் (கி.பி.

எட்டாம் நூற்றாண்டு) காணப்படுகிறது. இளங்கடை என்ற ஊரில் இஸ்லாமிய ஞானப்புலவர் பலர் வாழ்ந்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் 'மெய்ஞ்ஞானத் திருப்பாடல் திரட்டு' என்ற பெயரில் ஞானப்பாடல்களை வழங்கிய ஞானியார்சாகிபு ஆவார். செய்குமுகியின்த்தீன் மலுக்கு முதலியார் எனவும் அப்பெரியார் அழைக்கப்பட்டார். இப்புலவர் பெருமக்கள் காரணமாகப் 'பாட்டாறு பெருக்கெடுக்கும் கோட்டாறு' என இப்பகுதி கவிஞர் பெருமக்களால் பாடப்பெற்றது. பாவலரின் தாயார் ஆமினா அம்மையார் ஞானியார் அப்பாவின் மூன்றாந் தலைமுறையில் வந்தவர் எனக் குறிக்கப்படுகிறது. இந்த அம்மையாரின் அன்பு வளர்ப்பும் அளவளாவலும் இளமைப்பருவத்தில் பாவலருக்குப் பெரும் ஊக்கம் தந்தது. பகலில் பாவலர் அறிந்ததையெல்லாம் நினைவாற்றலோடு தாயாரிடம் சொல்ல அவர்கள் கேட்டு மகிழ்வாராம். சீறாக் கீர்த்தனை பாடிய செயிராக்கரு என்ற செய்யிது அபூபக்கர்ப் புலவரும் கோட்டாற்றுப் பகுதியில் பிறந்தவரே ஆவர். ஞானப்பாக்களைப் பாடிய தக்கலை பீர் முகம்மது ஞானியார் அவர்களும் இப்பகுதியில் வாழ்ந்தவரே.

நாகர்கோவில் பகுதியின் சிறந்த ஊராகக் கோட்டாறு இன்றும் திகழ்கிறது. கோட்டாற்றின் அண்மையிலுள்ள இளங்கடை என்னும் சிற்றூரில் பாவலர் பிறந்தார். பாவலர் பிறந்தபோது அப்பகுதியில் அரசுமொழியாக மலையாளமே விளங்கியது. ஆகவே அரசுப் பள்ளிக்கூடங்களில் மலையாள மொழி மூலமே கல்வி வழங்கப்பட்டது. பாவலர் இளமையில் திருக்குர்ஆனை இல்லத்திலிருந்தே கற்றுத் தேர்ந்தார். எட்டாவது வயதில் அரசுப் பள்ளிக்கூடத்தில் சிறுவர் வகுப்பில் சேர்க்கப்பட்டார். வகுப்பில் சேர்க்கப்பட்ட இருபதாம் நாளிலேயே வகுப்பாசிரியர் சிறுவர் செய்குத்தம்பியின் கல்விச் சிறப்புக் கருதி முதல் வகுப்பிற்கு அனுப்பி வைத்தார். அவ்வகுப்பாசிரியர் இரண்டாம் வகுப்பிற்கு அனுப்பி வைத்தார். அந்த ஆண்டு இறுதியிலேயே தலைமையாசிரியர் செய்குத்தம்பியின் கல்வித் தகுதியைப் பாராட்டி நான்காம் வகுப்பிற்கு அனுப்பி வைத்தார். ஒரே ஆண்டில் நான்கு தேர்ச்சிகளைப் பெற்ற சிறுவர் செய்குத்தம்பி பள்ளியில் படித்தது அந்த ஓராண்டு மட்டுமே; அதுவும் மலையாள மொழியில்.

திருவள்ளுவர் செய்து வந்ததாகக் கூறப்படும் நெசவுத் தொழிலே பாவலர் குடும்பத்தொழிலாகும். பாவலர் சிறுவராக இருந்தபோது வீட்டில் நெய்த நூலை எடுத்துக் கொண்டு கடை

வீதிக்குச் செல்வார். தமிழ்க்கடைகளின் பெயர்ப் பலகைகளில் உள்ள சொற்களைப் பிறரிடம் கேட்டு உச்சரித்துத் தமிழ் கற்கத் தொடங்கினார். பின்னர் அவர் வாழ்ந்த தெருவிற்கு அருகில் வாழ்ந்து வந்த சங்கரநாராயண அண்ணாவியார் என்ற தமிழாசிரியிடத்தில் தமிழ் கற்கச் சென்றார். சங்கரநாராயண உபாத்தியாயர் எனவும் அவர் குறிக்கப்பெறுவர்.

புலமை பெற்ற ஆசிரியப் பெருமக்கள் தம் இல்லத்திலேயே மாணவர்களுக்குத் தமிழ் கற்றுத் தருவர். வறுமை காரணமாக மாணக்கரிடமிருந்து அவர்கள் ஊதியம் பெற்றுக் கொண்டாலும் செய்குத்தம்பி அவர்கள் வறுமைநிலை கண்டு பொருளேதும் பெற்றுக் கொள்ளவில்லை. செய்குத்தம்பியின் கல்வித்திறன் கண்டு மிகுந்த ஊக்கத்தோடும் எதிர்பார்ப்போடும் தொடர்ந்து கல்வி கற்றுத் தந்தார்.

பன்னிரண்டு வயதில் ஆசிரியரிடம் கல்வி கற்கப் போகும்முன் பாவலர் தமக்குப் பக்கத்தில் இருந்த சில வீடுகளில் கடன் வாங்கி ஆத்திசூடி, கொன்றை வேந்தன், தேசிங்குராஜன் கதை, அல்லி அரசாணிமாலை ஆகியவற்றைக் கற்றிருந்தார். வியக்கத்தக்க நினைவாற்றலைக் கருவிலேயே திருவாகப் பெற்றிருந்த பாவலர் தாம் கற்றதையெல்லாம் கற்றவாறே மனத்தில் அமைத்துக் கொள்வார். பவணந்தி முனிவர் நன்னூலில் முழுமையாகக் கேட்கும் மாணவனும் ஆசிரியன் கருதியதில் காற்பங்கையே பெறுவான் எனக் கூறினார். ஆனால் பாவலரோ கேட்டவை அனைத்தையும் மனத்தில் வாங்கிக் கொள்ளும் திறன் பெற்றிருந்தார். இத்திறனே பிற்காலத்தில் அவதானக் கலையில் மன்னராக விளங்குவதற்கு அவருக்குத் துணையாக அமைந்தது.

சங்கரநாராயண உபாத்தியாயர் மூலம் பாவலர் தமிழ் இலக்கணம், இலக்கியம் முதலியவற்றைக் கற்றார். நன்னூல், இலக்கண விளக்கம், வீரசோழியம், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பா மாலை, இறையனார் களவியல் உரை, தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களைப் பாடங்கேட்டார். பிற்காலத்தில் நன்னூலில் மிகத் தேர்ச்சி பெற்ற புலவராகப் பாவலர் விளங்கினார். பழுத்த தமிழ்ப் புலவர்கள் எல்லாம் பாவலரது கடையில் வந்து நன்னூல் விளக்கம் பெற்றுச் செல்வது வழக்கமாக இருந்தது. எப்போதும் நன்னூலைக் கையிலெடுத்துப் பாவலர் விளக்கம் செய்ததில்லை; அனைத்தும் மனப்பாடம்தான்!

ஆசிரியரிடம் பாடங்கேட்டபோது பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க் கணக்கு, ஐம்பெருங்காப்பியங்கள், தேவாரம் முதலான திருமுறைகள், ஆழ்வார் பாடல்கள், கம்பராமாயணம், திருவிளையாடற்புராணம், பெரியபுராணம், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடற்றிரட்டு, பட்டினத்தார் பாடல்கள், தாயுமானவர் பாடல்கள், திருவருட்பா ஆகிய இலக்கிய நூல்களையும் விரிவாகக் கற்றார். இக்கல்வி ஆழ்ந்தகன்று விரிந்திருந்ததால் பிற்காலத்தில் இவ்விலக்கியப் பாடல்களைப் பெரும் புலவர்களும் கேட்டு வியக்குமாறு எடுத்துரைப்பார். இராமாயணமும் திருவருட்பாவும் அவர்களுக்குக் கைவந்த கலையாக இருந்தன.

வல்லார்க்குப் புல்லும் ஆயுதம் என்னும் பழமொழி பாவலர் வாழ்க்கையில் உண்மையாயிற்று. நடமாடும் பல்கலைக் கழகமாகப் பாவலர் விளங்கியதற்கு இளமைக்கல்வி பெருந் துணை புரிந்தது.

பள்ளியிடைத் தமிழ் பயில வாய்ப்பில்லாது மலையாள மொழிப் பள்ளியில் பயின்ற செய்குத்தம்பி அவர்களுக்குக் கடைத் தெருவில் இருந்த ஒருசில விளம்பரப் பலகைகளும் கடன் வாங்கிக்கற்ற ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற நூல்களுமே தொடக்கப் பயிற்றுநர்களாக அமைந்துவிட்டன.

## அடிக்குறிப்பு

1. பசுலு முஹ்யித்தீன், செ., டாக்டர், மகாமதிப்பாவலர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-600113, 1986, பக். 2.
2. குமரேசபிள்ளை, சி., செந்தமிழ் வளர்த்த செய்குத்தம்பி, குமரன் பதிப்பகம், சுசீந்தரம், 1986, பக்.5.

# சமூக நல்லிணக்கங் காத்த காவலர் - I

நம் தாய்த் திருநாட்டின் 'பெரும்வேறுபாடுகளுக்கிடையே ஒருமைப்பாடு' என்ற கொள்கையில் அடங்கியிருக்கிறது. இந்நாட்டு மக்கள் பல்வேறு சமயங்களை - இனங்களை - நிறங்களை - மொழிகளைப் போற்றி வாழும் நிலையினர். இவைகளைப் போற்றிக் கொண்டே மற்றவரை மதிக்கும் பண்பாடு இந்தியருக்குக் கைவந்தாக வேண்டும்.

இந்திய ஒருமைப்பாடு முழுமை பெற்றுச் சிறக்காததற்கு ஒருமதத்தைச் சார்ந்த இந்தியர் சகோதர மதங்களை மதிக்காமை, ஒரே மதத்தைச் சார்ந்த ஒரு சாதியார் சகோதர சாதிகளை மதிக்காமை; இந்தியமொழிகளில் ஒரு மொழியைத் தாய் மொழி யாகக் கொண்ட மக்கள் பிறமொழி பேசுவோரை மதிக்காமை ஆகிய போக்கே காரணம் ஆகும். தன்னுடையவை அனைத்தும் உயர்ந்தவை, பிறர் உடைமைகள் உயர்ந்தவை அல்ல என்று எண்ணும் மனப்போக்கே இந்நிலைக்குப் பெருங் காரணமாகும். இச் சிந்தனைப் போக்கில் எள்ளளவும் பொருத்தம் இல்லை என்பது முறையாகச் சிந்தித்தால் விளங்கும். எச்சிறப்பும் யாருக்கும் தனியுடைமை ஆகாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறப்பு உண்டு. தன்னுடைய சிறப்பை உணர்ந்து கொள்வது தன் வளர்ச்சிக்கு உறுதுணை புரிவது போலப் பிறர் சிறப்பை உணர்வது ஒற்றுமைக்கும் ஒத்துழைப்பிற்கும் உறு துணை புரியும்.

## இந்திய வெளிநாட்டுக் கொள்கை

'ஆயிரம் உண்டிங்கு சாதி; எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி' என்ற பாரதிக் கவிஞனின் சொற்கள் பெருஞ்சிறப்பும் மிகு பொருத்தமும் உடையன. இந்தியா விடுதலை பெற்ற நாள் முதல் இந்திய அரசுகளின் வெளிநாட்டுக் கொள்கை பாரதியின் சிந்தனை யையே மையமாகக் கொண்டிருக்கிறது. நமக்குள் ஆயிரம் பிரச்சனைகள் இருக்கலாம்; அவற்றை நாமே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும்; இப்பிரச்சனையில் மூன்றாவது ஆளுக்கு வேலையில்லை என்பதுவே பாரதியின் கருத்து. இந்தியப் பிரச்சனை எதுவாக இருந்தாலும் எந்த அரசாக இருந்தாலும் - இதே தீர்ப்பை வழங்குவதே இந்திய வெளிநாட்டுக் கொள்கையாக இருந்து வருகிறது.

பலமதங்களும் பல மொழிகளும் வளர வேண்டிய ஒரு நாட்டில் பிற மதங்களை - மொழிகளைச் சகியாமை என்பதே இந்திய ஒற்றுமைக்கு அன்று முதல், இன்று வரை ஊறு விளைவித்துக் கொண்டிருக்கிறது. எம்மதத்தைச் சார்ந்தவராயினும் எம்மொழி பேசுபவராயினும் தம்முடையவற்றை மதிப்பது போலவே பிற இந்தியருடையவற்றை மதித்துப் போற்றுகின்ற மனப்பக்குவமே இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்கும். இதுவே இன்றைய இன்றியமையாத முதல் தேவையாகும்.

## இந்தியராகவே வாழ்ந்தவர்

பாவலர் செய்குத்தம்பியவர்கள் காட்டிய அரிய வழி களுக்குள்ளே முதன்மையானது சமூக நல்லிணக்கமேயாகும். பாவலர் இஸ்லாமிய சமய நம்பிக்கையுடையவர். அதனைக் கற்றார்; தெளிந்தார்; அரிய நூல்கள் பலவற்றை உருவாக்கினார். தம் நாவன்மையாலே அவற்றை எழில் பெறப் பரப்பினார். இஃது இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் வழங்கியுள்ள அடிப்படை உரிமை. ஆனால் ஒரு போதும் மறந்தும் மற்ற மதத்தை - மொழியை - கொள்கைகளை அவர் இகழ்ந்ததில்லை; மாறாக அனைத்தையும் மதித்தார். போற்றினார். இவ்வுண்மைக்கு மிகப்பல சான்றுகளைக் காட்ட முடியும் என்றாலும் அளவுச் சுருக்கம் கருதி ஒருசிலவற்றை மட்டும் காட்டலாம்.

செய்குத்தம்பிப் பாவலர் பொது வாழ்க்கையில் அரை நூற்றாண்டுக் காலம் ஈடுபட்டிருந்தார். நாஞ்சில் நாட்டில் மட்டுமின்றித் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று தொடர்பு கொண்டு சொற்பொழிவுகள் ஆற்றித் தமிழ் மக்கள் உள்ளத்தில் பேரிடம் பெற்றார். இந்தியத் திருநாடு முழுமையும் அறியப்பட்டிருந்த மிகப்பல அறிஞர் பெருமக்களோடும், சான்றோர்களோடும் தொடர்பு கொண்டிருந்தார். அவர்கள் அனைவருடைய பெயரையும் நோக்கினால் பாவலர் ஓர் இந்தியராகவே இறுதிவரை வாழ்ந்திருந்தது விளங்கும்.

## பாரதி இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர்

'வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர் வாழிய பாரத மணித் திரு நாடு' என்று பாரதி பாடிய இலக்கியத்திற்கு இலக்கணமாகவே பாவலர் வாழ்ந்தார். பாவலர் இஸ்லாமிய நம்பிக்கைக் கொண்டு முஸ்லிமாக வாழ்ந்தவர். அவரோடு பொது வாழ்க்கையில் ஈடுபட்ட பெருமக்களது பெயர்களைப் பாருங்கள். திரு.வி.

கலியாண சுந்தரனார், மறைமலையடிகள், கவிமணி, ஜீவானந்தம், டி.கே.சி., பேராசிரியர் சீனிவாசராகவன், சாத்தாங் குட்டிப் பிள்ளை, இட்டா பார்த்தசாரதி நாயுடு, தாழைக்குடிப் பிள்ளை, காஞ்சி மகாவித்வான் இராமசாமி நாயுடு, வித்வான் கண்ணபிரான் முதலியார், சதாவதானி சுப்ரமணிய அய்யர், இன்னும் பலர். அத்தனைபேரும் பிறமத நம்பிக்கையாளர்கள். ஆனால் இஸ்லாமிய நம்பிக்கையுடைய செய்குத்தம்பிப் பாவலரை மனமாரப்பாராட்டியவர்கள், போற்றிப் புகழ்ந்தவர்கள்; புகழ்ப்பட்டம் சூட்டியவர்கள். இதுதான் சமுதாய வாழ்வுக்குப் பாவலர் காட்டிய நெறியாகும்.

## தமிழ்ப் பேராசிரியர் பாராட்டிய தமிழ்ப் பேரறிஞர்

*1964*-ஆம் ஆண்டு நான் வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழாசிரியனாகப் பணியாற்றி வந்தேன். சொந்த அலுவலாகத் திருநெல்வேலி சென்று இந்துக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கு. அருணாசலக் கவுண்டர் அவர்களை அவர்களது இல்லதில் சந்தித்தேன். அரைமணி நேரம் உடனிருந்தேன். நான் வந்த பணி குறித்து நான் பேசிக் கொண்டிருந்தேன். தமிழப் பேராசிரியர் அருணாசலம் அவர்கள் பாவலரைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்து இறுதியில் அவர்களிடமே கேட்டு விட்டேன். அவர்கள் கூறிய மறுமொழி ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டே யிருக்கிறது; பாவலர் புகழைப் பாடிக் கொண்டேயிருக்கிறது.

'இஸ்லாமியத் தமிழாசிரியர் ஒருவரைக் கண்டு நல்ல தமிழில் உரையாடிக் கொண்டிருக்கும்போது என்னால் பாவலரை மறக்கவே முடியவில்லை' என்று பேராசிரியர் அருணாசலம் கூறினார். அந்த அளவுக்குத் தமிழறிந்தோர் உள்ளங்களை யெல்லாம் கொள்ளை கொண்டிருந்த ஆற்றல் பாவலருக்கு உரியதாகும். இப்பேராற்றல் பாவலர் கொண்டிருந்த சமய நல்லிணக்கம், சமூக நல்லிணக்கம் ஆகியவற்றின் விளைவு என்பது வெளிப்படையான செய்தியாகும்.

## சமய இலக்கியங்கள் பொதுச் சொத்துக்களே!

மக்கள் வாழ்வை நெறிப்படுத்தும் இலக்கியங்கள் எச்சமயச் சார்புடையவையேனும் அவை தமிழ்ச் சொத்துக்கள்; இந்தியச் செல்வங்கள். கம்பராமாயணமும், பெரியபுராணமும், திருவாசகமும் இந்துமதச் சார்புடைய இலக்கியங்களே எனினும்

அவை இந்து சமயப் பெருமக்களுக்கு மட்டும் சொந்தமா? தமிழர் பொதுச் செல்வங்களாகிய அவை இந்தியநாட்டிற்குப் பெருமை தரும் இலக்கியங்கள் அல்லவா? அவற்றை இந்தியர் அனைவரும் கற்று ஒழுகும் கடப்பாடு கொண்டோரில்லையா?

"ஒரு சமய இலக்கியம், பிறிதொரு சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு இன்பமூட்டாது எனும் கருத்து தவறானது என்பதை மெய்ப்பித்தவர் பாவலர்"[1] என்பது வித்வான் சி. குமரேசப் பிள்ளை அவர்களுடைய கருத்து. இக்கருத்து என் வாழ்வில் முழுமையாக நடந்தது கண்டு உணர்ந்துள்ளேன். 1965-ஆம் ஆண்டில் வாணியம்பாடி இந்து மேல்நிலைப்பள்ளியில் சொற்பொழிய நேர்ந்தபோது உள்ளம் உருக்கும் திருவாசகம் பற்றிச் சொற்பொழிய நேர்ந்தது. அப்பள்ளியின் அன்றையத் தாளாளர் திருமிகு. இராஜமன்னார் அவர்கள் (சட்டமன்ற உறுப்பினர்) என்னிடம் நீங்கள் உரைத்தவை அனைத்தும் உங்கள் உண்மையான உணர்வுகளா? அல்லது தமிழாசிரியர் ஆதலால் திருவாசகச் சிறப்பை உரைத்தீர்களா? என்று கேட்டார். அவர் கேள்வியின் பொருத்தத்தைப் புரிந்து கொண்ட நான், இஸ்லாமியனாகிய நான் திருவாசகத்தில் உருகக் கூடாதா? என்று கேட்டேன். பாவலர் அவர்களைப் பின்பற்றி அவர்களது மொழியில் விடை கூறினேன். மணிவாசகர் சைவர்களைவிட இஸ்லாமியர்களுக்கே முழு உரிமையுடையவர் என்று அவர் வியக்குமாறு விடையளித்தேன்; திருவாசகப் பாடல் ஒன்றையும் எடுத்துக் காட்டினேன்.

"ஒருநாமம் ஓருருவம் இல்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டேமோ"

என்ற திருவாசகப் பாடலை உணர்ந்தவர் வேறு எவ்வாறு கூற முடியும்? உருவமில்லாத இறைவனுக்கு ஆயிரம் திருப்பெயர்கள் சூட்டிப் பாராட்டும் மணிவாசகர் சைவர்களுக்கு மட்டுமா சொந்தம்? இஸ்லாமியருக்கும் சொந்தமானவரல்லவா என்று கேட்டேன்.

## நான்முகன் நல்ல பிள்ளை

செய்குத்தம்பிப் பாவலர் கம்பன் காப்பியச் செவிநுகர்கனிகளை அனைவரும் உண்ண அள்ளிக் கொடுத்தவர். அக்கனிகளின் அளப்பரிய சுவைகளை எல்லோரும் மாந்தி மகிழ எடுத்துக் காட்டியவர். கம்பன் காப்பியத்தை வைணவக் காப்பியமாகக் கனவிலும் நினைத்தறியாதவர். கம்பனுடைய காப்பியத்தை ஈடுபட்டுக் கற்று அவற்றின் நயங்களைக் கம்பராமாயணச் சொற்பொழிவாளர்களும் வியக்குமாறு எடுத்துரைத்தவர்.

கம்பராமாயணத்தில் கங்கை காண்படலப் பாடலொன்று பலரும் விரிவுரை வழங்க வாய்த்ததாகும்.

''வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனும் தலைவணங்கு மவனுமவ னடிவிழ்ந்தான்.[2]

என்பது பாட்டு. சுசீந்திரம் திரு.எஸ்.கே. சுவாமியவர்கள் இப்பாடலைக் கூறிப்பலரிடம் விளக்கம் கேட்டார். மலர் இருந்த அந்தணனான பிரம்மதேவன் வணங்கும் பரதன் என்றாரே கம்பர்: எப்போது நான்முகன் பரதனை வணங்கினார்? ஏன் வணங்கினார்? விளக்கம் கேட்டவர் பெரும் புலவர்; பாவலரோடு நெருங்கி உரையாடிய நண்பர்; இந்து சமயச் சார்புடையவர். வினாவில் அடங்கியுள்ள நுட்பங்களை அறிந்திருக்க வேண்டியவர். கேட்கப்பட்ட பாவலரோ இஸ்லாமிய சமயச் சார்புடையவர். எனினும் சுவாமியவர்கள் நிச்சயம் விளக்கம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு கேட்கிறார். பாவலர் சிரித்துக்கொண்டே, ''தம்பி நான்முகனுக்கு அப்பன் பரதன்; அப்பனை மகன் வணங்குவது ஆச்சரியமா? நான்முகன் நல்ல பிள்ளை; தந்தையான பரதனை வணங்கினான்'' என்று விடையளித்தார். பிரமதேவனுக்கு பரதன் தந்தையாகும் விந்தையையுணராத சுவாமியவர்கள் விழித்தார். திருமாலின் தொப்புளில் தோன்றியவன் நான்முகன்; ஆகவே நான்முகனுக்குத் தந்தை திருமால். பரதன் திருமாலின் அம்சம். அதனால் பரதனும் நான்முகனின் தந்தை தானே! என்று பாவலர் வினவினார்; சுவாமி வியந்தார்.[3]

## வைதிக புராணங்களை விளக்கிய பாவலர்

இராமாயணம் போன்ற நூல்களை மட்டும் பாவலர் கற்றுத் தெளிந்தாரில்லை. வைதிக புராணக் கதைகளின் வரலாறுகளையெல்லாம் கேட்போர் வியக்கும்படி எடுத்துச் சொல்லும் திறன் படைத்தவர். இத்தகு நிகழ்ச்சிகள் மிகப்பல. அவதானக் கலையில் தேர்ச்சி பெற்றுச் சதாவதானியாகப் புகழ்பெற்று விளங்கிய போதும் பாவலர் வைதிக புராண நுட்பங்களைப் பலமுறை எடுத்து விளக்கியதுண்டு. வைதிக புராணங்களில் பாவலர் பெற்றிருந்த தெளிவுக்கு ஒரு காரணம் கூறப்படும். சிறு வயது முதலே சொற்பொழிவுகளைக் கேட்கும் ஆர்வமுடைய பாவலர் இளமையிலேயே இந்துசமயத் திருநாட்களில் நிகழும் பொழிவுகளுக்குச் சென்று கேட்பதுண்டு. இளமையிலேயே கேட்ட செய்திகளை உள்ளத்தில் அமைத்துக்கொண்டு நினைவாற்றலோடும் நுட்பத்தோடும் போற்றியது பிற்காலத்தில் இத்தகு விளக்கங்கள் வழங்க உதவியது எனலாம்.

இவ்விளக்கங்கள் எல்லாம் நமக்கு விளக்குகின்ற பேருண்மை பாவலர் அவர்களுடைய சமயப் பொறையே. பாவலர் கூறிய விளக்கச் செய்திகளையெல்லாம் அவர் நம்ப வேண்டும் என்ற அவசியம் இல்லை. நம் முன்னோர்கள் நம்பி எழுதி வைத்தவை. பக்கத்தில் இருக்கின்ற சகோதரர் நம்புகின்றவை. உண்ணும் உணவு போலவும் பருகும் நீர் போலவும் விளங்குகின்ற இலக்கியங்கள் பேசும் செய்திகளை எடுத்து விளக்கும்போது பாவலர் கொண்டிருந்த மனப்பக்குவத்தை- சமயப் பொறையை- பிற சமய வெறுப்பின்மையை-இந்தியர் அனைவரும் பெற்றால் பிணக்கேது?பிளவேது? சண்டை சச்சரவு ஏது? இத்தகு உள்ளப்போக்கு உணர்ச்சிப் பாங்கு அனைவருக்கும் வாய்க்க வேண்டும் என்று பாவலர் விரும்பினார்.

## சைவம் பேசிய பாவலர்

செய்குத்தம்பிப் பாவலர் செந்தமிழ் வளர்த்தார்; அத்துடன் செந்தமிழ் விளக்கி நிற்கும் சமய தத்துவங்களையும் விளக்கினார். சைவம் வளர்ப்பது அவருடைய நோக்கமில்லை. ஆனால் அவர் விளக்கிய சைவ இலக்கியங்களால் சைவ சமய நுட்பங்கள் தாமே வளர்ந்தன. திருநெல்வேலி நகரைக்கடந்து பாவலர் மகிழுந்தில் சென்று கொண்டிருந்த போது திரு.வி.கல்யாணசுந்தரனார் மேடையில் இருந்ததை அறிந்து மேடையின் பின்பக்கத்தில் ஓரிடத்தில் ஒதுங்கி நின்றார். மேடையிலிருந்த திரு.வி.க. அவர்கள் பாவலரைக் கவனித்து விட்டார். பாவலரை மேடைக்கு வரவேண்டுமென்று திரு.வி.க.அழைத்தார். கூட்டத்தில் சலசலப்பு இருந்ததை உணர்ந்து கொண்ட திரு.வி.க. 'என் ஆசானுக்கு மேடையில் இடமில்லை என்றால் நானும் இறங்கி விடுகிறேன்' என்றார்; சலசலப்பு அடங்கியது. பாவலர் அவர்களின் புலமையையும் தமிழறிவையும் 'அருட்பாவே' எனத் திருவருட் பாக்களை நாட்டியவர் பாவலர் என்பதையும் எடுத்து விளக்கி, அவர்களை மேடையில் ஏற்றித் தம் இருக்கையில் அமரச் செய்தார்.[4] சமயங்கடந்தும் தமிழ் இலக்கியம் உள்ளங்களைப் பிணித்த பான்மைக்கு இந்நிகழ்ச்சி மிகச்சிறந்த எடுத்துக்காட்டு.

## கோலத்தைவிட அறிவுக்கே மதிப்பு அதிகம்

பாவலரின் தமிழ்ப் புலமையறிந்த சைவப் பெருமக்கள் 'சைவம் வளர்த்த தமிழ்' என்ற தலைப்பில் அவரைச் சொற்பெருக்காற்ற வேண்டினர். பாவலரும் 'சைவம் வளர்த்த தமிழ்' என்ற தலைப்பில் மூன்று நாட்கள் மாலைப்பொழுதில்

கோவிலின் வெளிப்பிரகாரத்தில் சொற்பொழிவு நிகழ்த்தினர். சைவத் தமிழ்ப்பெரு நூல்களிலிருந்து சான்றுகள் காட்டிப் பேசினார். மூன்றாவது நாள் பொழிவின் போது சிவபுராணப் பாடலிலிருந்து முதல் இரண்டு அடிகளைக் கூறிப் பிற்பகுதியை மறந்து விட்டவர் போல நடித்தார். இரண்டு மூன்று முறை 'நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே' எனக்கூறி முன் அமர்ந்திருந்த சைவப்பெரியார்களை நோக்கித் தொடர்ந்து கூறுமாறு வேண்டியும் யாரும் பாடலின் தொடர் பகுதிகளை எடுத்துக் கூற இயலவில்லை. முன் வரிசையில் அமர்ந்திருந்த பேராசியர் சீனிவாசராகவன் எழுந்து கூற முற்பட்ட போது, பாவலர் 'ஐயா! உங்களைக் கேட்கவில்லை; நீவிர் வைணவர்' என்று கூறி விட்டனர். அவரும் சிரித்துக்கொண்டே அமர்ந்து விட்டார். முடிவில் பாவலரே 'போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே' எனத் தொடங்கிப் பாடலை முடித்து அங்கிருந்த சைவப்பெரு மக்களுடைய நிலையைத் தமக்கேயுரிய பாணியில் எடுத்துக்காட்டினார். பாவலர் எடுத்துக்காட்டிய சிவபுராணப் பாடல் சைவர்கள் நாள்தோறும் இல்லத்தில் ஓதத்தக்கது. மனப்பாடமாக விளங்க வேண்டிய பாடலை எடுத்துக்கூற இயலவில்லை. கோலத்தைவிட அறிவுக்கே பெருமதிப்பு உண்டு என்பதைக் குறிப்பால் உணர்த்தி விட்டார். தொடர்ந்து நான் தமிழ் முஸ்லிம்; பேராசிரியர் சீனிவாசராகவன் வைணவர்; நாங்கள் மனத்தில் நினைவு கொள்ளக் கூடிய சிறந்த சிவபுராணப் பாடலைக் கூட உங்களால் கூற முடியவில்லையே எனப் பாவலர் எடுத்துக் கூறினார்.[5] மதப்பற்று பெரும்பான்மையும் புறக்கோலத்தில் இருக்கிறதே தவிர அறிவில் இருப்பதில்லை என்ற நிலையையும் பாவலர் உணர்த்திக் காட்டினார்.

## பாவலரது சிலேடைத் திறம்

செய்குத்தம்பிப் பாவலர் சென்னையில் விக்டோரியா மண்டபத்தில் சதாவதானம் செய்து அறிஞர் பெருமக்களை வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தினர். அவதானக் கலையில் தேர்ந்து சதாவதானியாகவே விளங்கிய ஜி. சுப்ரமணிய அய்யர் அவையில் முதலில் வினா எழுப்பினார். சிலேடை நயம் செறிந்த கடவுள் வணக்கப்பாடல் ஒன்றை வழங்குமாறு அவதானியை வேண்டினர். பாவலர் அவதான முறைப்படி வினா தொடுத்தவருக்குப் பாடலைப் பாடிக்காட்டினர். பாவலருடைய அவதானக் கலைத்திறத்தைத் தனியே பின்னொரு பகுதியில் பார்க்கலாம். எனினும் பாவலருடைய பிறசமய அறிவை - பிற

சமயங்களை வெறுக்காது மதித்துப் போற்றிக் கொள்ளும் மனப்பக்குவத்தை மட்டும் இங்குக் காண்போம். பாவலர் விடையாகத் தந்த நாலடிக் கடவுள் வணக்கப்பாடல், ''சிரமா றுடையான் செழுமா வடியை'' எனத் தொடங்குகிறது.

***''சிரமா றுடையான் செழுமா வடியைத்***
***திரமா நினைவார் சிரமே பணிவார்***
***பரமா தரவா பருகா ருருகார்***
***வரமா தவமே மலிவார் பொலிவார்''***

இப்பாடலில் ''சிரமாறுடையான்' என்ற தொடரைச் சிலேடை நயம்படப் பாடினர். தமிழ் இலக்கியத்தில் சிலேடை மிகச் சிறந்த அணியாகக் கருதப்பட்டது. தனிப்பாடல்களைப் பாடிய தமிழ்ப் புலவர்கள் பலர் சிலேடை நயம் மிகுந்த பாடல்களைப் புனைவதில் வல்லமை பெற்றிருந்தனர். பாடற்பகுதியை நோக்கிய அளவில் ஒரு பொருள்படும். அதனைப் பிரித்து விளக்கும் போது பல பொருட்கள் நுட்பமாக அமைந்து அணி செய்வது சிலேடையின் சிறப்பு. பாவலர் சிலேடை நயம்படப் பேசுவதில் வல்லவர். புலவர் பெருமக்கள் அவரது சிலேடைத் திறங்கண்டு வியந்து பாராட்டியுள்ளனர்.

காளமேகப் புலவர் எனத் தமிழ் உலகு அறிந்த பெரும் புலவர் 'சங்கரர்க்கு மாறுதலை சண்முகற்கு மாறுதலை' எனச் சிலேடை நயந்தோன்ற ஒரு வெண்பாப் பாடியுள்ளார். அப்பாடற் கருத்தை உட்கொண்டு பாவலர் தமது புலமையும் தோன்றுமாறு அருமையாகச் 'சிரமாறுடையான்' எனப் பாடினார். இத் தொடருக்கு ஐந்து வகையாகப் பொருள் விரிக்க முடியும். சிவன், கணபதி, முருகன், திருமால், அல்லாஹ் எனப்பல சமயத்தார் இறைவனைக் குறிக்க எடுத்தாளும் ஐந்து வகைப் பொருள்களும் வருமாறு தொடர் அமைந்திருந்தது.

1. சிரத்தில் கங்கை ஆற்றையுடைய சிவன்
2. மாறுபட்ட சிரத்தையுடைய கணபதி
3. ஆறுசிரங்களையுடைய முருகன்
4. ஆற்றின் நடுவே சிரம் வைத்துத் துயிலும் திருமால்
5. தலையாய நல்வழியைக் காட்டும் அல்லாஹ் என ஐந்து வகையாகப் பிரித்துப் பொருள் கொள்ளும் வகையில் 'சிரமாறுடையான்' என்ற தொடரை அமைத்தார்.[6]

## பாவலருடைய சமயப்பொறை நோக்கு

காளமேகப் புலவர் பாடலில் இடம் பெறாத இஸ்லாமியர்

இறைவனின் பெயராகக் கூறுகின்ற 'அல்லாஹ்' என்ற அறபுச் சொல்லுக்கும் 'சிரம் ஆறு உடையான்' என்ற தொடரில் பொருள் விளங்கச் செய்தார். தலையாய வழிகாட்டும் இறைவனாகிய 'அல்லாஹ்' எனவும் அத்தொடர் பொருள் குறித்து நிற்றல் காண்க.

பாவலரின் அவதானம் காண வந்திருந்த அவையோரில் மேற்குறித்த கடவுள் பெயர்களால் இறைவனை வணங்குகின்ற எல்லாச் சமயத்தாரும் இருந்திருப்பார். இறைவனைக் குறிக்கின்ற எல்லாப் பெயர்களையும் சிரமாறுடையான் என்ற தொடரில் அமைத்துப் பாவலர் பாடினார். வினா விடுத்தவருக்கு விடையும் கிடைத்தது; பாவலருடைய தமிழ்ப் புலமையும் விளங்கித் தோன்றியது. எல்லாவற்றிற்கும் மேலாகப் பாவலருடைய சமயப்பொறை நோக்கும் சிறப்பாகத் தோன்றியது. பாவலருடைய நாட்டுப் பணிக்கும் நற்றமிழ்ப் பணிக்கும் ஆதாரமாக விளங்கியது அவருடைய சமயப் பொறையே என்பது வெளிப்படை.

## சமயஞானம் சமயப் பொறையை உருவாக்கும்

செய்குத்தம்பிப் பாவலருடைய சமயப் பொறையே இன்றைய மக்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக விளங்கி நிற்கின்றது. ஒவ்வொரு சமயத்தாரும் தாம் சார்ந்த சமய உண்மைகளில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருப்பது இயல்பு. ஒருவர் தம்முடைய சமயத்தில் நிறைவான தெளிவு பெற்றிருக்கிறார் என்பதற்கு அடையாளம் அவருடைய சமயப்பொறை. தான் நம்பும் சமய உண்மைகளை ஏற்றுக் கொள்ளாதவரோடு பிணக்குக் கொள்ள எந்தச் சமயமும் கூறவில்லை. கலகமின்றி எல்லாப் பிரிவினரோடும் கலந்து அமைதியாக வாழவே அனைத்துச் சமயங்களும் வலியுறுத்து கின்றன. தான் சார்ந்துள்ள சமயமே உண்மை கூறுகிறது; சமயங்கள் உண்மை கூறவில்லை என்று எண்ணுகின்ற முறையற்ற போக்கே பிணக்கை உருவாக்குகிறது. இம் முறையற்ற எண்ணத்தின் வழிப்பட்டே சமயவெறி கொண்டு சண்டை சச்சரவுகளில் மக்கள் ஈடுபடுகின்றனர். முறையான நெறிப்பட்ட தற்சமய விளக்கம் - தன் சமயம் பற்றிய தெளிவான ஞானம் - தற்சமயப் பற்றையும் பிறசமயப் பொறையையும் உடன் வளர்க்கும்; சமய வெறியை வளர்க்காது. இப்பெரிய உண்மைக்குப் பாவலரின் வாழ்வில் மிகப்பல சான்றுகள் நிறைந்து கிடக்கின்றன.

## இந்திய அரசியல் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமை

இந்திய அரசியல் சட்டம் இந்திய மக்கள் எல்லோருக்கும் அவரவர் விரும்புகிற சமய உண்மைகளைப் பின்பற்றும் உரிமையை அடிப்படை உரிமையாக வழங்கியிருக்கிறது. மனிதனுடைய அடிப்படை உரிமை அவன் விரும்புகிற சமய உண்மைகளைப் பின்பற்றுவதாகும். இறைவன் படைப்பிலேயே எல்லோரையும் ஒரே சமயத்தைப் பின்பற்றுவோராக ஆக்க வில்லை. எல்லோரும் ஒரு சமயத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என வலியுறுத்துவது முறையாகாது. ஒருவர் எல்லாச் சமயங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்து வதும் பொருத்தமில்லை. அறிவுக்குப் பொருந்தி வருவதும் எல்லோருக்கும் நலம் விளைப்பதும் அவரவர் விரும்பும் சமயங்களைப் பின்பற்றிக் கொண்டு மற்றவர் பின்பற்றும் சமயங்களை மறுக்காமலும் இகழாமலும் இருப்பதுவேயாகும். இந்த உண்மையைத் தெளிவாக உணர்ந்தே இந்திய அரசியல் சட்டம் இந்திய மக்கள் எல்லோருக்கும் அவரவர் சமயத்தைப் பேணும் அடிப்படை உரிமையை வழங்கியிருக்கிறது.

சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் இப்பேருண்மையைத் தெளிவாக உணர்ந்தவர். இந்திய மக்கள் எல்லோரும் பிணக்கும் பிரிவுமின்றித் தத்தம் வழியில் இறைவனை வணங்கி வாழ வேண்டும் என்று விரும்பியவர். இஸ்லாமிய சமயத்தை ஏற்றுப் போற்றிப் பின்பற்றி வாழ்ந்தவர். 'நபிகள் நாயக ஜீவிய சரித்திரம்' உரைநடையில் எழுதியவர். 'நபிகள் நாயக மான்மிய மஞ்சரி' கவிதையில் பாடியவர். வாழ்நாளெல்லாம் நபிகள்நாயகம் போற்றிய நன்னெறியை விளக்கிப் போற்றிப் பின்பற்றி வாழ்ந்தவர். சீறாப்புராணக் காப்பியத்திற்கு விளக்கம் எழுதியவர்; சீறா நாடகம் எழுதிவர். செந்தமிழ்ச் சீறா பற்றியும் குணங்குடியார் பாடல்கள் பற்றியும் மேடைதோறும் பேசியும் எழுதியும் வந்தவர். முன்பு நாம் விளக்கிக் காட்டியபடி 'சிரமாறுடையான்' என்று பாடித் தம் நம்பிக்கைக்கேற்ப அல்லாஹ்வையும் குறித்தார். அதே தொடரில் சிவன், முருகன், கணபதி, திருமால் ஆகியோரையும் குறித்தார். இஃது தம்மோடு வாழும் சகோதரர்களுடைய - இந்தியர்களுடைய - நம்பிக்கையைப் பாடியதேயாகும். இதனால் தம் நம்பிக்கைக்கு எத்தகைய இடையூறும் நிகழாது என நம்பினார். "மொழிகள் பல, மக்கள் பிரிவினர் பலர், மதங்கள் பல என்றாலும்

இதயத்தால், பண்பாட்டால், ஒன்றிணைந்தவர் பாரதத்தவர் என நாளெல்லாம் முழங்கியவர்''.[7]

## சைவ உணவுக்காரர் அசைவம் சமைக்கக் கூடாதா?

பாவலர் சென்னையில் இட்டா பார்த்த சாரதிநாயுடு அவர்களுடைய அன்பு அரவணைப்பில் வாழ்ந்த காலத்தில் அவரும் அவரது அலுவலர்களும் சரஸ்வதி பூஜையன்று வேண்டிக் கொண்டதற்கிணங்கக் கலைமகள் பற்றிப் பாடிய பாடல் எடுத்துக்காட்டத்தக்கதாகும். கலைமகளைக் கல்வியின் தலைமகளாகப் பாவலர் நம்பினாரா என வினா தொடுப்பதில் பொருளில்லை. தம்மை ஆதரித்தவரும் அவரது அலுவலகத்தாரும் கொண்டிருந்த 'உளநிலையில் நின்று'[8] பாவலர் கலைமகளைப் பாடுகிறார்.

**'' உருமகளை அயன்நாவில் உறைமகளைப்**
**பொறைமகளை உலகுக் கெல்லாம்**
**குருமகளை, அன்பர் புகழ் குலமகளை**
**மலர்மகளைக் குறைதீர் செல்வத்**
**திருமகளின் மருமகளை நிலமகட்கும்**
**கலைமகளைச் செல்வி வாய்ந்த**
**ஒரு மகளை, எனக்கருள வருமகளைப்**
**பெருமகளை, உன்னல் செய்வாம்''**

இப்பாடலில் பொறைமகள், குருமகள், குலமகள், மலர்மகள், கலைமகள் என்றெல்லாம் சரஸ்வதியைப் புகழ்ந்து 'உன்னல் செய்வாம்' எனத் தன்மைப்பன்மை நடையில் பாடுகின்றார். இஃது தமது நண்பர், அவரது அலுவலகத்தார் 'உளநிலையில் நின்று' பாடியதாகவே கருதவேண்டும். மிகச்சிறந்த ஒரு சமையல்காரர் அசைவம் உண்ணாதவராக இருந்து கொண்டே, அசைவ உணவுப் பொருட்களைச் சமைக்கக் கூடாது என்று கூறுவோமா? சமைப்பது தவறாகுமா? மிகச் சிறப்பாகச் சமைக்கப்பட்டிருக்கிறது என்று பாராட்டிக் கொண்டு மற்றவர் உண்ணும்போது, அசைவம் உண்ணாத சமையற்காரர் மகிழ்ச்சியடையவரல்லவா? அது போலத்தான் பார்த்தசாரதியார் அவர்களும் அவரது அலுவலகத் தாரும் சுவைத்து மகிழப் பாவலர் கலைமகளைப் பாடினார் எனக் கொள்வதே பொருத்தமாகும். மகாகவி பாரதி 'அல்லா அல்லா' என்று பாடியிருக்கும் பாடலைக் கொண்டு அவர் இஸலாமியக் கொள்கையினர் என்று கூற முடியுமா? இந்திய நாட்டில் பலகோடியாக வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் இறைவனைக் குறிக்கப் பயன்படுத்தும் அரபுச் சொல்லைப் பாடினார் என்று பாராட்டப்படுகிறார். அவ்வாறே பாவலர் அவர்களும் பாரத

நாட்டவர் நம்பிக்கைகளைப் பாடினார் என்றே கொள்ள வேண்டும். இத்தகைய சமயப் பொறைநோக்கு இருந்தால் தான் நாம் பேசுகின்ற சமூக ஒற்றுமை - சமூக நல்லியணக்கம் - வளர முடியும்.

## இந்திய ஒருமைப்பாட்டிற்கு உரமேற்றிய ஞானியார் அடிகள்

2001 மே 17-ஆம் நாள் தினமணியில் துணைத் தலையங்கத்தில் மலையமான் என்பவர் ஞானியார் அடிகளின் 129வது பிறந்த நாள் நினைவாக 'மதம் கடந்த மனிதநேயர்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். ஞானியார் அடிகள் திரு.வி.கல்யாண சுந்தரனார் அவர்களால் மிக உயர்வாகப் போற்றப்பட்டவர். திருப்பாதிரிப்புலியூர் சைவ மடத்தின் ஐந்தாம் முறைத் தலைவராகப் பட்டம் பெற்றவர். அவரது இளமைக்காலப் பெயர் பழனி என்பதாகும். சிறந்த சைவத் தொண்டும் ஏழை மாணவர் படிப்பில் முன்னேறக் கல்வித் தொண்டும் இலக்கியத் தொண்டும் ஆற்றிய பெருமகனார். வைணவர் வேண்டுகோளை ஏற்றுத் திருவேந்திரபுரம் சென்று ஆண்டாள் திருப்பாவை பற்றிப் பலமணி நேரம் ஆழ்ந்த விளக்கவுரை தந்தவர். புதுவையில் ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த ஞானப்பிரகாசர், அடிகளாரது சொற்பெருக்கைக் கேட்டு மகிழ்ந்து தம் வீட்டுக்கு வருமாறு வேண்டினார். வேண்டுகோளை ஏற்ற ஞானியார் அவர் இல்லம் சென்று அரியதொரு சொற்பெருக்கும் ஆற்றினார். சைவ அடிகளார் கிறித்தவர் வீட்டிற்குச் சென்றது பற்றி எதிரப்புக் குரல் எழுந்தது. அப்போது அடிகளார் 'தன் மதத்தில் திண்மையான பற்றுக் கொண்டு பிறர் மதத்தை இகழாமல் இருப்பதுவே ஒவ்வொருவரின் கடமையாகும்? என்று கூறினார். ஞானியார் அடிகளின் இக்கருத்து இந்திய ஒருமைப்பாட்டிற்கு உறுதுணை புரியும் பொருள் நிறைந்தது. செய்குத்தம்பிப் பாவலரது பாடல் களும் கருத்துக்களும் இலக்கிய விளக்கங்களும் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் இந்த உண்மையைப் புலப் படுத்துகின்றன.

## இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்கும் உணர்வு

தம் நம்பிக்கையைப் போற்றிச் செயல்படுத்த உரிமை வேண்டும் என்போர் பிற சமயச் சகோதரர்களாகிய இந்திய மக்களுடைய நம்பிக்கைகளைச் சகித்துக் கொள்ள வேண்டாமா? மதிக்க வேண்டாமா? இதே உணர்வில் தான் செய்குத்தம்பிப் பாவலர் வள்ளலாருடைய திருவருட்பாக்களை மனமொன்றிப் போற்றினார். இந்துசமயப் பேரறிஞர் சிலர் அருட்பாக்களை

மருட்பாக்கள் எனக் கூறியபோது அது கண்டு வருந்தினார்; அவர்கள் கருத்தை மறுத்தார். தம் நாவன்மை, மதிநுட்பம், தமிழ்ப் புலமை அனைத்தையும் பயன்படுத்தி மருட்பா என்ற கூற்றை மறுத்தார்; வள்ளலார் பாக்கள் அருட்பாக்களே என்று நாட்டினார். காஞ்சிபுரத்து இந்துசமயப் பெருமக்கள் ஒன்று கூடிப் பூரண கும்ப மரியாதை செய்து பாவலரைப் பாராட்டி மகிழ்ந்தனர். இத்தகு சமூக நல்லிணக்கச் செயல்களே இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை.

---

## அடிக்குறிப்பு

1. செந்தமிழ் வளர்த்த செய்குத்தம்பி, பக்.2
2. கம்பராமாயணம், கங்கைகாண் படலம், பா.32
3. சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் நினைவு மலர், 1961, பக்.143
4. பசுலுமுகியிதீன், செ., டாக்டர், மகாமதிப் பாவலர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பக்.60-61
5. மு.நூ. பக்.62-63
6. குமரேசப்பிள்ளை, சி., அவதானக் கலைஞர், 1968, பக்.41
7. ஹமீது, கே.பி.எஸ்., கருத்தரங்கக் கோவை, ஐந்தாம் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு, கீழக்கரை, 1990, பக்.144
8. மு.நூ. பக்.145

# சமூக நல்லிணக்கம் காத்த காவலர் II

சமூக நல்லிணக்கங் காத்து இந்திய ஒருமைப்பாட்டுணர்வை உருவாக்கிய செய்குத்தம்பிப் பாவலரது வாழ்க்கை நிகழ்ச்சிகளை அவர்களது கொள்கை கோட்பாடுகளின் அடிப்படையில் பார்த்தோம். இப்பகுதியில் இலக்கிய வரலாற்று அடிப்படையிலும் பாவலரது படைப்புக்களின் அடிப்படையிலும் காணலாம். பாவலரது இலக்கியப் படைப்புகள் பற்றிப் பின்னர் தனிப் பகுதிகளில் ஆராயலாம். எனினும் பாவலரது இலக்கியப் படைப்புகளில் ஒரு தனித்தன்மையை விரிவாகக் காண்பது இந்திய ஒருமைப்பாட்டு உணர்வுக்கு உறுதுணை புரியும்.

## சமயச் சார்பின்றிப் பொது அடிப்படை உண்மைகளைப் பாடுதல்

சமயச் சழக்குகளை விடுத்து அருட்சோதியைக் கண்டதாக இராமலிங்க வள்ளலார் பாடுவார். சமயக் கணக்கர் செல்வழி செல்லாது பொது வகையில் செல்வது மனித சமுதாயத்திற்குப் பெருந்துணை புரியும் என்பது தமிழ் இலக்கிய வரலாறு கற்பிக்கும் பாடமாகும். எல்லாச் சமய உண்மைகளும் பொதுவாக மனித சமுதாயத்தை நோக்கியனவே. எனினும் ஒரு சமய அடிப்படையில் நின்று மனித சமுதாயத்தை நோக்கி உரைக்கப்படும் உண்மைகள் ஒரு சமயத்தைச் சார்ந்தவையாகக் கருதப்பட்டுப் பிற சமயத்தாரால் ஒதுக்கப்படுதல் இன்றைய நடைமுறை உண்மையாகும். ஆகவே தான் அனைவருக்கும் உரிய பொது உண்மைகள் சமயச் சார்பின்றிப் பொது அடிப்படையில் உரைக்கப்படுவது அவசியமாகின்றது. இந்நிலை இன்றைக்கு மட்டும் தோன்றிட புதுநிலை ஆகாது. வாழ்கின்ற பொது மக்கள் உணர்ந்து போற்றிப் பயன்பெற வேண்டுமானால் இம்முறை இன்றியமையாது போற்றப்பட வேண்டும். தமிழ் இலக்கியத்தில் இடம்பெறும் பல்வேறு சமய இலக்கியங்கள் இந்நெறியையே போற்றி எழுந்துள்ளன. சமய இலக்கியங்களைப் படைத்த புலவர்கள் பொதுவாக உண்மைகளை விளக்கியிருக்கக் காண்கிறோம். சிலப்பதிகாரம், கம்பர் இராமாயணம். பெரியபுராணம், சீறாப்புராணம், தேம்பாவணி முதலான சமய இலக்கியங்கள் மனித சமுதாயத்திற்கு உரிய பொது வாழ்க்கை உண்மைகளை விளக்கியுள்ளன. ஒரு குறிப்பிட்ட

சமயத்தளத்தில் நின்று கொண்டு பேசினாலும் இவை அனைத்துச் சமயத்தையும் சார்ந்த பொதுமக்களுக்குப் பொதுவகையில் உண்மைகளை உரைக்கக் காண்கிறோம்.

## சித்தர் இலக்கியங்களும், சூஃபி இலக்கியங்களும்

செய்குத்தம்பிப் பாவலரது இலக்கிய நோக்கும் போக்கும் பற்றி விளக்கிப் பேசும் முந்திய பகுதியில் இந்திய இலக்கியங் களை அவை எச்சமயஞ் சார்ந்தவையேனும் இந்தியப் பொதுச் செல்வங்களாக அவர் கருதிய அருமை விளக்கப்பட்டுள்ளது. ''எத்திறத்தவரேயாயினும் தமிழர்கள் மொழி உணர்வால் ஒத்திருந்தாரானால் தமிழின்பம் நுகர்தற்குத் தடையேதும் இல்லை என்பதே உண்மை நிலையாகும்''[1] என்ற வரலாற்றாசிரியர் செ. திவான் அவர்களின் குறிப்பு உணரத்தக்கதாகும். இந்நோக்கில் இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்களின் (சூஃபி இலக்கியங்கள்) போக்கும் தமிழ்ச் சித்தர்களின் இலக்கியப் போக்கும் ஆராயப்படுமானால் இவ்வுண்மை தெளிவாக விளங்கும். தமிழ்ச் சித்தர்களின் ஞான இலக்கியங்கள் சமயஞ் சாராதவை. இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள் சமயச் சார்புடையவை. இவ்விருவகை இலக்கியங்களின் போக்கில் பெரும்பான்மையும் ஒத்த நிலைகளைக் காண்கிறோம். இஸ்லாமியத் தளத்தில் நின்று கொண்டு மனித குலத்தாரைப் பொதுவாக நோக்கியே இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. இஸ்லாம் வலியுறுத்தும் ஓரிறைக் கோட்பாடும் ஒருமூலத் தந்தைக் கோட்பாடும் மனித குலத்தாரைப் பொதுவாக நோக்கிப் பேசும் இச்சிறப்பு நிலைக்குக் காரணமாக இருக்கக் கூடும்.

## சித்தர் நெறியில் தக்கலை பீரப்பா

இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்களும் தமிழ்ச்சித்தர் படைத்த இலக்கியங்களும் ஒப்பீட்டு இலக்கிய அடிப்படையில் பெரும்பான்மையும் ஒரு நிகரனவாக அமையக் காண்கிறோம். பெரிய ஞானக்கோவை என்னும் பதினெண் சித்தர்கள் பாடற்றொகுப்பில் இஸ்லாமிய மெய்ஞ்ஞானி பீர்முகம்மது அப்பா அவர்களின் 'ஞான ரத்தினக் குறவஞ்சி' இடம் பெற்றிருப்பது சிந்தனைக்குரியது. பீர்முகம்மது அப்பா அவர்கள் தமிழ்ச் சித்தராக ஆக்கப்பட்டுள்ளது ஆய்வுக்குரியது. எஸ். பத்மநாபன் என்ற அறிஞர் சாதி சமயம் கடந்த நிலையில் அனைவராலும் 'அப்பா' என அவர்கள் அழைக்கப்பட்டது தமிழ்ச் சமுதாயத்தில் அவர் பெற்றிருந்த செல்வாக்கைக் காட்டும் எனக்

குறிப்பிடுவர். அறிஞர் ஆர்.பி.எம். கனி அவர்கள் பீர்முகம்மது அப்பா, அவர்களைத் தமிழ்நாட்டு 'மௌலான ரூமி' எனப் பொருத்தமாகக் குறிப்பிடுவர். உலகப் புகழ் பெற்ற பாரசிக மெய்ஞ்ஞான இலக்கியமாகிய 'மஸ்னவி'யைப் படைத்தவர் மௌலான ரூமி. மௌலானா ரூமியின் 'மஸ்னவி' சமயச் சார்பற்ற வகையில் இஸ்லாம் கூறும் பொது உண்மைகளைக் குறைவான இஸ்லாமியக் குறியிடுகளோடு பாடப்பட்டது. அந்த இலக்கியப் போக்கில் பீர்முகம்மது அப்பா அவர்கள் இஸ்லாமிய ஞானத்தை இன்பத் தமிழில் பேசியிருப்பது கருதத்தக்கதாகும்.

## பாவலர் போற்றிய மெய்ஞ்ஞானம்

செய்குத்தம்பிப் பாவலரின் படைப்புகளில் பல மெய்ஞ்ஞான அடிப்படையில் சூஃபி இலக்கியங்களைப் போற்றி அமைந்தவை யாகும். செய்குத்தம்பிப் பாவலர் அவர்கள் இஸ்லாமிய மெய்ஞ்ஞானி ஞானியார் சாகிபு அவர்களைப் போற்றி இரண்டு அந்தாதி இலக்கியங்கள் படைத்துள்ளார். கீழக்கரையைச் சேர்ந்த ஞானி அவர்களைப் போற்றிக் கல்வத்து நாயக இன்னிசைப் பாமாலை பாடியுள்ளார். மெய்ஞ்ஞானி பீரப்பா அவர்களையும் மஸ்தான் சாகிபு அவர்களையும் தமது உரைகளில் விளக்கம் அளித்துப் பேசியுள்ளார். இவையெல்லாம் செய்குத்தம்பிப் பாவலரின் மெய்ஞ்ஞான நாட்டத்தை விளக்கப் போதுமானவை. மஸ்தான் சாகிபின் பாடல்களில் பாவலர் பெற்றிருந்த புலமை தெளிவாக அறியக் கிடக்கிறது. ஞானியரைப் போற்றி ஞான இலக்கியங்களைப் படைப்பதில் பாவலர் கொண்டிருந்த பற்று அவருடைய படைப்புகளில் காணக்கிடக்கின்றது. இப்போக்கைப் புரிந்து கொண்டால் பாவலருடைய சிந்தனைகள் மனித சமுதாயத்தை நோக்கியதாகச் சமயம், சாதி கடந்து மனித நேயம் கொண்டதாக அமைந்திருந்த அருமையை விளங்கிக் கொள்ளலாம்.

## ஞானியர் சாகிபு போற்றிய பொது நெறி

கோட்டாறு ஞானியார் சாகிபு அவர்கள் இஸ்லாமிய மெய்ஞ்ஞானி. அவர்கள் கி.பி. 1753-ல் கோட்டாற்றில் பிறந்தார். நாற்பத்தொரு வயதில் முன்னறிவிப்புச் செய்து இறப் பெய்தினார்கள். இவர்களது அடக்க இடத்தில் ஆண்டுதோறும் விழா எடுத்துக் கொண்டாடப்படுகிறது. தமது 14-ஆம் வயதிலேயே ஞானப்பாதையில் நடக்கத் தொடங்கித் திருமறை யில் தோய்ந்தும் தொழுகையில் ஆழ்ந்தும் இறைக் காதலில் திளைத்திருந்தார்கள். சேதுபதி மன்னரும் திவாங்கடர் மன்னரும்

இவர்களைப் போற்றிச் சிறப்புச் செய்தனர். கொட்டாம் பட்டினம் கருப்பையாப் பாவலர் அவர்கள் திருக்கோட்டாற்றுக் கலம்பகம் பாடி இவர்களைப் பெருமைப்படுத்தினார். திருநெல்வேலி மாவட்ட சாத்தாங்குளம் சி.வெ. அரவமூர்த்தி உபாத்தியாயர் தோத்திரப் பா பாடிப் புகழ் மாலை சூட்டினார். இக்குறிப்புக்கள் எல்லாம் இஸ்லாமிய மெய்ஞ்ஞானி ஞானியார் சாகிபு சாதி, சமயங் கடந்து மனித நேயத்தில் திளைத்தவர் என்பதைக்காட்டும். ஞானியார் சாகிபு ஞான அந்தாதி, ஞான அம்மானை என்ற பெயர்களால் இலக்கியங்களைப் படைத்ததோடு ஞானத் தேவராம், ஞானத் திருப்புகழ் என்ற பெயர்களிலும் இலக்கியம் படைத்துள்ள செய்தி நம் சிந்தனைக்குரியது. தேவாரமும் திருப்புகழும் தமிழ்மக்கள் அறிந்த தெய்வப்பாசுரப் பெயர் களாகும். ஞானம் எவ்வாறு அனைவருக்கும் பொதுவானதோ அவ்வாறே தமது ஞான இலக்கியங்களும் அனைவருக்கும் பொதுவாகிப் பயன்தர வேண்டும் என்ற ஞானியார் சாகிபின் பொது நோக்கைப் புலப்படுத்தும்.

## ஷம்சுத்தாசீன் தரகனார்

ஞானியார் சாகிபின் வழிவந்த ஆமினா அம்மையாருக்கு மகவாகப் பிறந்த காரணத்தால் ஞானப் பாரம்பரியம் மிக்கவராகப் பாவலர் திகழ்ந்தார். மெய்ஞ்ஞான இலக்கியங்களையும் படைத்துத் தந்தார். கோட்டாறு ஞானியார் சாகிபு அவர்களைப் பற்றி இரண்டு அந்தாதி இலக்கியங்கள் செய்து செந்தமிழைச் செழுந்தமிழாக்கினார். பாவலர் படைத்த கோவை இலக்கியம் ஷம்சுத்தாசீன் கோவையாகும். ஞானியார் சாகிபைப் பின்பற்றியவர் மேலப்பாளையம் ஷம்சுத்தாசீன் அவர்கள். ஞானியார் சாகிபின் ஞானநெறி போற்றி இறையில்லம் கட்டிக் கல்லூரி அமைத்தப் பொதுமகிகள் தொண்டாற்றியவர் ஷம்சுத்தாசீன் அவர்கள். மேலப் பாளையத்தில் 'ஹாமீம்புரம்' என ஊர்ப்புறத்தே ஒரு நகரத்தை உருவாக்கி ஏழை எளியோருக்கு உதவிய கொடையாளர். 'ஹாமீம்' என்னும் அறபுப் பெயர் நபிகள்நாயகம் அவர்களுக்கு இறைவன் சூட்டிய சிறப்புப் பெயராகும்; அப்பெயர் ஞானியார் சாகிபின் மெய்ஞ்ஞானத் திருப்பாடல் திரட்டில் பயின்று வரும் சொல்லாகும். ஷம்சுத்தாசீன் அவர்கள் நபிகள் நாயகத்தின் மீது கொண்ட அன்பும் ஞானியார் சாகிபு அவர்களிடம் கொண்ட பற்றும் வெளிப்படுமாறு 'ஹாமீம்புரம்' என அந்நகருக்குப் பெயர் சூட்டப்பெற்றது.[2]

## ஷம்சுத்தாசீன் மேல் பேரன்பு

ஞானியார் சாகிபின் வழிவந்து அவர்கள் மேல் இரண்டு அந்தாதி நூல்கள் பாடிப்புகழ்ந்த பாவலர் அவர்கள் மேலப் பாளையம் ஷம்சுத்தாசீன் அவர்களின் அறப்பணிகளிலும் ஞானப் பாதை நடக்கும் நாட்டத்திலும் ஆர்வங்கொண்டு 'ஷம்சுத்தாசீன் கேவை' எனப் பெயரிய கோவைநூல் பாடினார். பாவலர் சென்னையில் தங்கியிருந்த காலத்தில் அந்நூலைப் பதிப்பிக்கவும் செய்தார். தமிழ்க் கோவை இலக்கியங்களைத் தழுவிய பழைய மரபில் அமைந்த இக்கோவை நூலின் 425 பாடல்களிலும் ஷம்சுத்தாசீன் அவர்கள் கொடை நலத்தைப் புகழ்ந்து பாடி யுள்ளனர். இறைவனை நம்பி இறைவனின் இறுதித் திருத்தூதர் வழியில் வாழ்ந்த பாவலர் அவர்கள் தம் காலத்து வாழ்ந்த ஒரு மனிதரை ஒரு கோவை நூலின் அனைத்துப் பாடல்களிலும் பாடிப் புகழ்ந்தனர் என்றால் அவர்கள் மீது பாவலர் கொண்டிருந்த அன்புக்கு அளவு கூற முடியுமா? ஷம்சுத்தாசீன் அவர்கள் மேல் பாவலர் கொண்ட பேரன்புக்குக் காரணம் அவர்கள் போற்றிய ஞானநெறியே. ஞானியார் சாகிபின் ஞானப்பாதை போற்றி அறப்பணிகள் ஆற்றி வந்த கொடையாளர் மீது பாவலர் கொண்டிருந்த பேரன்பைப் புரிந்து கொள்ள முடிகிறது.

## நூற்பதிப்புக்குச் சென்னை சென்றது

செய்குத்தம்பிப் பாவலர் சென்னை சென்று தமிழ்ப் பணி யாற்றித் தமிழகம் அறிந்து போற்றும் தக்கோராக மாறியதற்கும் அவர்கள் மேலப்பாளையம் தமுஸ்தாசிம் தரகனார்[3] அவர்கள் மேல் கொண்டிருந்த பேரன்பே காரணமாகும். பாவலருடைய உடல் நிலை ஒத்துழையாதிருந்த போதும் ஞானியார் சாகிபு அவர்களின் மெய்ஞ்ஞானத்திரட்டு நூலை வள்ளல் ஷம்சுத்தாசீன் அவர்கள் பொருளுதவியோடு பதிப்பிக்கும் பணிக்காகவே சென்னை சென்றார். இதுவும் ஞானியார் சாகிபு அவர்கள் மேல் பாவலர் கொண்டிருந்த பேரன்பைப் புலப் படுத்தும். இப்பெரு மக்கள் மீது பேரன்பு கொண்டிருந்தது மட்டு மன்றி மெய்ஞ்ஞான நெறியில் பாவலர் கொண்டிருந்த பற்றுக் காரணமாக மெய்ஞ்ஞான அடிப் படையில் பல நூல்களைப் படைத்துத் தந்தார். (பாவலர் படைத்த இலக்கியங்கள் என்ற பகுதியில் விளக்கம் காண்க.)

## மூவர் பெற்ற தனிச்சிறப்பு

மெய்ஞ்ஞான நெறிபோற்றிய பாவலர் பற்றிய இச்செய்தி களையெல்லாம் நாம் விளக்கிப் பேசுவதற்குக் காரணம் அந்நெறி

போற்றிய பண்பே பாவலரது சமூக நல்லிணக்கப் பண்புக்கு நற்சான்று பகர்வதாகும் என்பதை எடுத்துக்காட்டவே. இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்களைப் படைத்துத் தந்த பெருமக்கள் மிகப்பலர் ஆவர். எனினும் பீரப்பா, ஞானியார் சாகிபு, மஸ்தான் சாகிபு போன்ற கவிஞர் பெருமக்களுக்குத் தனிச்சிறப்பு உண்டு. இஸ்லாமிய மெய்ஞ்ஞானத்தை எல்லாச் சமயஞ்சார்ந்த மக்களும் உணர்ந்து பயன்பெறும் வண்ணம் அறபுச் சொல் ஆட்சியைக் குறைத்துத் தமிழ் மக்கள் அறிந்திருந்த பொதுச் சொற்களைப் பயன்படுத்தித் தமிழ் மக்கள் அனைவருக்கும் இலக்கியம் படைத்த பெருமை இம்மூவருக்கும் உரிய தனிச்சிறப்பாகும். செய்குத்தம்பிப் பாவலர் அவர்கள் இம் மெய்ஞ்ஞானிகள் மூவரிடத்தும் தணியாப் பேரன்பு கொண்டிருந்தது பாவலரது சமூக நல்லிணக்கம் பேணிய பண்பைப் புலப்படுத்தும்.

## பொதுமை போற்றும் மஸ்தான் சாகிபு

மஸ்தான் சாகிபு என்றும் மஸ்தான் சாமி என்றும் குணங்குடியார், தொண்டியார் என்றெல்லாம் பாராட்டப்பெற்ற இஸ்லாமிய ஞானச் செல்வரின் இயற்பெயர் சுல்தான் அப்துல்காதிர் என்பதாகும். சூஃபி ஞானிக்குரிய பொதுப் பெயராகிய 'மஸ்தான்' என்பதைப் பெயராகக் கொண்டிருந்த போதும், மஸ்தான் சாகிபு அவர்கள் ஒரு சித்தராகவே தமிழ் மக்களால் கருதப்பட்டார். மஸ்தான் சாகிபு பாடல்களுக்குச் சீட்டுக்கவி வழங்கி அவர்களுடனேயே வாழ்ந்த பெருமக்கள் மகாவித்வான் சரவணப் பெருமாள் அய்யர், சிவயோகி அய்யாச்சாமி முதலியார், வேங்கடராயப்பிள்ளைக் கவிராயர், அட்டாவதானம் சபாபதி முதலியார் ஆகியோர் ஆவர். கி.பி.1788-ல் பிறந்தவர் மஸ்தான் சாகிபு. இஸ்லாமிய மெய்ஞ்ஞானம் பாடிய நாடறிந்த மஸ்தான் சாகிபு அவர்களின் சமயம்பற்றி ஆய்ந்த ஈழத்து அறிஞர் அ.ச. அப்துல்சமது அவர்கள் பின்வரும் ஐயவினாக்களை எழுப்புவது நம் சிந்தனைக்குரியது. மஸ்தான்சாகிபின் பாடல்களில் காணப்படும் கோட்பாடுகள், கொள்கைகள், தத்துவங்கள் இவற்றைக் கொண்டு பார்த்தால் அவர் இஸ்லாமிய ஞானவழி செல்லும் ஒரு சூஃபிக் கவிஞரா? அல்லது இந்திய யோக நெறி செல்லும் ஒரு சித்தரா? அதுவுமின்றேல் சமய சமரசத்தை விரும்பும் ஒரு சன்மார்க்க வாதியா? என ஆராய வேண்டியுள்ளது எனக் குறிப்பிடுவார்.[4]

பேராசிரியர், கவிக்கோ, அப்துற் ரகுமான் தமிழில் சூஃபி இலக்கியங்கள் என்ற ஆய்வு நூலில் மஸ்தான் சாகிபு பற்றி ஒரு

கட்டுரை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் மஸ்தான் சாகிபு பயன்படுத்தியுள்ள உமையாள் பாதம், மனோன்மணி அம்மை பாதம், நந்தி பாதம் முதலான சொற்கள் இந்து சமயத்திற்குரிய சொற்கள் அல்ல என்றும் சித்தர் நெறிக்குரிய பரிபாஷைச் சொற்களே அவை என்றும் குறிப்பிடுவர். தமிழ்நாடு முன்னாள் தலைமை நீதிபதி ஜஸ்டிஸ் எம்.எம். இஸ்மாயில் அவர்கள் இச்சொற்கள் யாவும் தமிழில் பரம்பொருளையே குறிப்பவை யாகும் என்று கூறுவதில் தவறில்லை என உரைப்பர்.[5]

இவ்வாய்வுகள் எல்லாம் வெளிப்படுத்தும் உண்மையே நாம் அறியத்தக்கதாகும். இஸ்லாமிய மெய்ஞ்ஞானிகள் பரம் பொருளைக் குறிக்கும் பொதுச்சொற்களைப் பயன்படுத்தி எல்லா மக்களும் இறையின்பத்தில் ஈடுபடுமாறு பொது வகையில் சித்தர் நெறிபோற்றிப் பாடியுள்ள பாங்கு காணத் தக்கது. பீர்முகம்மது அப்பா அவர்களும் ஞானியார் சாகிபு அவர்களும் மஸ்தான் சாகிபு அவர்களும் சித்தர் நெறியில் இலக்கியம் படைத்து மனித சமுதாயம் பயன்பெற முயன்ற சமூக நல்லிணக்கங்காத்த நல்லோராவார். பீர்முகம்மது அப்பா அவர்கள் இஸ்லாமிய மெய்ஞ்ஞானத்தை எளிய தமிழில் எல்லோருக்கும் பாடிப் பெருமை பெற்றவர். பீர்மேடு அவர்களது நினைவாகவே பெயர் பெற்றது என அறிகிறோம். தக்கலையில் பீர்முகம்மது அப்பா அவர்களது நினைவு விழாவில் ஆண்டுதோறும் அவர்களது 'ஞானப்புகழ்ச்சி' என்ற நூல் எல்லாச் சமயத்து மக்களாலும் அன்போடு பாடிப் பரவப்படுகின்றது. இப்புலவர் பெருமக்களைப் பின்பற்றி ஞானியார் சாகிபு அவர்களைப் போற்றி செய்குத்தம்பிப் பாவலர் அவர்களும் மெய்ஞ்ஞான நெறியில் கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை பாடியுள்ளனர்.

செய்குத்தம்பிப் பாவலர் அவர்களுடைய ஞானப் பாதை பற்றித் தெளிவதற்கு இஸ்லாமிய மெய்ஞ்ஞானம் எனப்படும் சூஃபி நெறிக்கும் தமிழ்நாட்டு யோக நெறி எனப்படும் சித்தர் நெறிக்கும் உள்ள ஒருமைப்பாடுகளைக் கண்டறிதல் இன்றியமை யாதது. இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியும் சித்தர் நெறியும் ஏறத்தாழ ஒத்த போக்குடையன என்பதில் சிறிதும் ஐயமில்லை. இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியம் படைத்த தக்கலை பீர்முகம்மது அப்பா அவர்கள், கோட்டாறு ஞானியார் சாகிபு அவர்கள், குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள் ஆகிய முப்பெரும் கவிஞர் பெருமக்களும் படைத்துள்ள இலக்கியங்கள் சித்தர் நெறித் தமிழ் இலக்கியங்களோடு பெரும்பாலும் ஒத்திருக்கின்றன.

சூஃபிக் கவிஞர்கள் இஸ்லாமியத் தடத்தில் நின்று உலக மக்களை நோக்கி இலக்கியம் செய்தவர்கள். அவர் தம் படைப்புக்களில் அறபுச் சொற்களின் ஆட்சி குறைவு. மனிதனை நெறிப்படுத்தும் பண்புகளைச் சித்தர் நெறிக்குரிய பரிபாஷைச் சொற்களில் பொதுவாகப் பாடியுள்ளனர். இது காரணமாகவே சில அறிஞர் பெருமக்கள் மேற்குறித்த இஸ்லாமிய மெய்ஞ்ஞானச் செல்வர் களைக் குறித்து இவர்கள் சூஃபி ஞானிகளா? சித்தர் நெறியினரா? சமரச சன்மார்க்கவாதிகளா? என வினா எழுப்பினர். இந்த ஐயமே மேற்குறித்த மூன்று நெறி சார்ந்த கவிஞர்கள் படைத்த இலக்கியங்கள் ஒத்தபோக்குடையன என்பதைத் தெளிவாகக் காட்டும்.

## சித்தர் பெருமை

சூஃபி இலக்கியங்களும் சித்தர் நெறி இலக்கியங்களும் பெரும்பாலும் ஒருமைப்பாடு கொண்டன. மகாகவி பாரதியார் தாம் ஒரு சித்தர் எனப்பாடினார். அதற்குக் காரணம் சமயங்களைக் கடந்து பொது நெறியில் ஓர் இறைவனை ஏற்றுச் சமயசமரச நெறியில் பாடியதேயாகும். சித்தர்கள் ஓர் இறைவனையும் ஒரு மனித குலத்தையும் ஏற்றுச் சமய சமரச சன்மார்க்க நெறியில் பாடியுள்ளமையை இக்கருத்து உணர்த்தும். இஸ்லாமிய நெறியில் நின்றுபாடிய சூஃபிக் கவிஞர்களும் சித்தர்களும் ஒத்த நெறியில் உவந்து, பாடுவதைக் காணலாம். நன்னெறியில் ஒழுகும் சான்றோர்களை இந்திய யோக நெறி பொதுவாக ரிஷி, முனி என்ற சொற்களால் குறிக்கும். இத்தகு தமிழ்ச் சான்றோர்களைச் சித்தர் என அழைப்பர். (காகபுசுண்டர் காவியம்:6,12) சித்தி என்னும் சொல்லுக்கு நற்பேறு பெறுதல் என்பது பொருளாகும். 'சித்' என்ற சொல்லுக்கு அறிவு எனப் பொருள் உண்டு. சத்சித் ஆனந்தம் எனக் கூறப்படுவதையும் அறிஞனைச் சித்தன் எனக் குறிப்பதையும் காணலாம். ஜைன சமயத்தார் பேரறிவனாகிய இறைவனைச் சித்தனர் என்பர். சுருக்கமாக சூஃபிக் கவிஞர்களும் சித்தர் நெறிக் கவிஞர்களும் ஞானியர் எனப் பொதுவாக அழைக்கப் படுகின்றனர். இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்களுக்கும் சித்தர் இலக்கியங்களுக்கும் பொதுவான சொல் 'ஞானம்' எனப்படுவதாம். இக்கருத்தாலேயே இறையறிவினைச் சிறப்பாக 'ஞானம்' என்ற சொல் குறிக்கத் தொடங்கியது.

## சிவவாக்கியர் உறுதிப்பாடு

சித்தர் இலக்கியங்களும் இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்களும் பிறப்பால் உயர்வு தாழ்வு கருதாமை, உருவ

வணக்கத்தை ஒப்பாமை, பலபிறப்பையும் மறு பிறப்பையும் உடன்படாமை ஆகிய மூன்று அடிப்படைப் பண்புகளில் ஒத்துள்ளன.

> ''விரிந்தபூ உதிர்ந்தகாயும் மீண்டும்போய் மரம்புகா
> இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே''
>
> (சிவவாக்கியர் - 46)

என்ற சிவவாக்கியர் பாடல்வரிகள் மறு பிறப்பை ஏற்றுக் கொள்ளாத சித்தர் நெறியின் இயல்பை உறுதிபட உரைப்பதாகும். புகழ்வாய்ந்த சித்தராகிய சிவவாக்கியர் 'இல்லை இல்லை இல்லையே' என உறுதிபட உரைத்தல் காண்க. மலர்ந்த பூ மீண்டும் மொட்டாவதில்லை; உதிர்ந்த காய்கள் மீண்டும் மரத்தில் சென்று சேர்வதில்லை; மலர்ந்து வாடி உதிர்ந்த பூக்களும் மீண்டும் சென்று மரத்தில் புகுவதில்லை; அதுபோல இறந்தவர் மீண்டும் பிறப்பதில்லை என்பது சிந்தையள்ளும் சிவவாக்கிய வரிகளாகும்.

## தாயுமானவரும் மஸ்தான்சாகியும்

சித்தர் நெறிப் பாக்களும் இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்களும் பேரின்பக்காதல் என்ற மையப் புள்ளியிலேயே சங்கமமாகின்றன. இருவகை இலக்கியங்களும் வேறுபாடின்றி மனித சமுதாயத்தை நோக்கியே பாடுகின்றன. இருவகை இலக்கியங்களும் மெய்ஞ்ஞானம் எனப் பேசுவது பரம் பொருளைப் பற்றியும் அவ்வொரு பொருளால் படைக்கப்பட்ட மனிதகுலம் பற்றியும் மனிதர்களுக்குள்ளே உயர்வு தாழ்வு காணாத ஒருமைப்பாடு பற்றியுமேயாகும்.

> ''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
> ஊனாகி உயிராகி''
>
> (திருச்சதகம்:15)

என மாணிக்கவாசகர் ஓர் இறைவனின் உண்மையை உணர்த்துவர். மஸ்தான் சாகிபு மாணிக்கவாசகரைப்போற்றி

> ''ஊனாகி ஊனில் உயிராகி எவ்வுலகுமாய் ஒன்றாய் இரண்டுமாகி
> உள்ளாகி வெளியாகி ஒளியாகி இருளாகி ஊருடன் பேருமாகி''
>
> (முகைதீன் சதகம் - விரு - 7)

எனப்பாடுவர். ''அவனன்றி ஓரணுவும் அசையா'' எனத் தாயுமானவரும் மஸ்தான் சாகிபும் ஒத்துப் பாடியுள்ளனர். (முகைதீன் சதகம்-109). இவ்விரு பெருங்கவிஞர்களும் பேசுகின்ற தத்துவமே நபிகள் நாயகம் அவர்களால் சொர்க்கத்தின் திறவுகோல் எனக் குறிக்கப்பட்டு இறையருளின்றி ஒருபொருளும் அசையாது என உரைக்கப்பட்டது. 'கைக்கு எளிய பந்தாய் எடுத்து

விளையாடுவீர்' எனத் தாயுமானவர் பாடியுள்ள கருத்தை (சித்தர்கணம்-7) மஸ்தான் சாகிபு ஏற்றுக்கொண்டு முகைதீன் சதகத்தில் 'அண்ட கோடிகளும் ஓர் பந்தெனக் கைக்குள் அடக்கி விளையாடவல்லீர்' எனப் பாடுவார்.

## பட்டினத்தடிகளும் பீரப்பாவும்

மெய்ஞ்ஞானி பீரப்பா அவர்களும் இஸ்லாமியம் பொது உண்மைகளை எளிய தமிழில் பொது மக்கள் உணரும் வண்ணம் பாடியிருத்தல் அறியத்தக்கதாகும்.

**''கல்லாப்பிழையும் கருதாப் பிழையும் கசிந்துநிலை**
**நில்லாப்பிழையும் நினையாப் பிழையும் நேர்ந்தஞ்சிலொன்றைச்**
**சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்பிழையும்**
**எல்லாப்பிழையும் நீதான் பொறுப்பாயெம் மிறையவனே'**

(ஞானப் புகழ்ச்சி)

எனத்தக்கலை பீர் முகம்மது அப்பா அவர்கள் பாடுவர். இப்பாடல் முழுமையும் பட்டினத்தடிகள் பாடிய சித்தர் நெறிப் பாடலைத் தழுவியதாகும். பட்டினத்தடிகளார் 'கச்சி ஏகம்பன்' எனக் குறிப்பதைப் பீரப்பா 'இறையவனே' எனப்பாடுவர். பட்டினத்தடிகள் 'ஐந்தெழுத்து' எனப் பாடியதை இஸ்லாமிய நெறிபோற்றி ஐந்திலொன்றை எனப்பாடுவார். ஐந்தில் ஒன்று என்பது இஸ்லாம் குறிக்கும் கட்டாயக் கடமைகளில் தலையாய் இஸ்லாமிய மூல மந்திரத்தைக் குறிக்கும் (கலிமா). நோக்கு ஒருப்பட்டமையால் இருநெறிக் கவிஞர்களின் பாடல்களும் ஒத்து நடந்தன என்பதை உணர வேண்டும்.

## சமயக்குறியீடின்றிப் பொது உண்மைகள் பேசப்படுதல்

சமய விளக்கக் கருத்தரங்கு ஒன்றில் ஓர் அறிஞர் வழங்கிய கட்டுரையில் ஒரு கிறித்துவ சமய உண்மையை வலியுறுத்த ஒருபாடலை எடுத்துக்காட்டினார்.

**''படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக் காக**
**மனுவைப் படைத்தான் தன்னை வணங்க''**

என்பது பாடற்பகுதி. இஃது ஞானி பீரப்பாவின் பாடலாகும். இப்பாடலில் விளக்கப்படும் உண்மை இஸ்லாமியத் திருமறையில் பேசப்படும் செய்தியாகும். இறைவன் உலகப்படைப்புகள் அனைத்தையும் மனிதர்களுக்கு உதவியாகவே படைத்துள்ளான். மனிதர்களைத் தன்னையறிந்து வணங்குவதற்காகவே இறைவன் படைத்துள்ளான் என்பது கருத்து. எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய இந்த உண்மையை ஞானிபீரப்பா இஸ்லாமியத் திருமறை

பேசுவதாகக் குறிக்காது பொதுவாகப் பாடுகிறார். இப்பாடல் பீரப்பா அவர்களால் பாடப்பட்டது எனத் தெரியாமலேயே கிறித்துவ சமய உண்மையை விளக்க ஓர் அறிஞர் இதனை மேற் கோளாகக் காட்டியதைக் கேட்டு வியப்படைந்தேன். இந் நிகழ்ச்சி யில் ஓர் உண்மை விளக்கம் பெற்றது. சூஃபிக் கவிஞர் களும் சித்தர்களும் சன்மார்க்க வாதிகளும் பாடல்களில் போற்று கின்ற பொதுமை நெறியால் விளையும் பெரும்பயன் உணரப் பட்டது. ஒரு நெறி பேசுகின்ற பொது உண்மையைச் சமயக் குறியீடுகளோடு பேசும்போது பிற சமயத்தார் அக்குறியீடு கண்டு தமக்குரிய செய்தியன்று என விலகிவிடுகின்ற நிலை இன்றைய நடைமுறை. மேற்குறித்த இலக்கியங்களில் இவ்வச்சம் நீக்கப்பட்டு உண்மைகள் பொதுவாக உரைக்கப்படுவதை உணர்ந்து போற்ற வேண்டும்.

## சமயக்குறியீடில்லா இன்னிசைப் பாமாலை

மகாமதி செய்குத்தம்பிப் பாவலர் அவர்கள் இவ்வுண்மை உணர்ந்து வாழ்க்கைப் பொது உண்மைகளை அனைவருக்கும் பொதுவாகப் பாடிய பெருந்தகையார். பாவலரது படைப்புக்கள் அனைத்திலுமே இவ்வுண்மை பளிச்சிட்டாலும் பாவலர் படைத்த மெய்ஞ்ஞான இலக்கியமாகிய கல்வத்துநாயகம் இன்னிசைப் பாமாலை இவ்வுண்மைக்குப் பெருஞ்சான்றாக நின்று சிறக்கின்றது. பாவலர் பாடிய இந்த பக்திப் பனுவலில் மேற்குறித்த ஞானநெறிகள் போற்றிய பொதுநெறி போற்றப் பட்டுள்ளது. பாவலரது பக்திப் பனுவலாகிய இந்த இன்னிசைப் பாமாலை பற்றித் தனிப்பகுதியில் பேசப்பட்டுள்ளது. எனினும் குறிப்பிட்ட ஒரு போக்கில் இங்கு நோக்கப்படுகிறது. பக்தி ஞான இலக்கியங்களின் போக்கையொட்டித் திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங்களின் பாணியில் சமயக் குறியீடு இல்லாது பேசப்பட்ட இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியம் இது. கீழக் கரையில் வாழ்ந்த கல்வத்துநாயகம் எனப் பெயர் பெற்ற இஸ்லாமிய ஞானியைப் போற்றிப் புனையப்பட்ட பக்திப் பனுவல் இது. இப்புதுவகை நூலைப் படைக்கப் பாவலருக்கு வழிகாட்டியவை மேற்குறித்த ஞான இலக்கியங்களே. மாணிக்கவாசகர், பட்டினத்தார், தாயுமானவர், தக்கலை பீர் ஞானி, மஸ்தான் சாகிபு, கோட்டாறு ஞானியார் சாகிபு ஆகிய முன்னோர் இலக்கியச் செல்வங்களின் சாயல் அனைத்தையும் பூண்டு விளங்குவது இன்னிசைப் பாமாலை.

## கற்பூர தீபமொத்த கல்வத்து நாயகர்

கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலையை நோக்கிய அறிஞர் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய தனிவகைகளில் இப்பாமாலையைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர். இதனை இஸ்லாமியத் திருவாசகமாகவே நோக்குவர் டாக்டர் ஐதர் அலி. இன்னிசைப் பாமாலையின் தொடக்கமே பக்திப் பேரின்ப வெள்ளத்தை உருவாக்கி அதில் நம்மை மூழ்கச் செய்துவிடுகிறது என்பார் இறையருட் கவிமணி பேராசிரியர் கா. அப்துல்கபூர் அவர்கள்.[6]

**"அற்பூர நும்மடிக்கே யஞ்சலித்த நெஞ்சினோடு**
**பொற்பூர வின்னிசைப்பாப் பூட்டிமகி ழீட்டேனோ**
**இற்பூர அன்பருளத் தேற்றிவைத்துப் போற்றுமொரு**
**கற்பூர தீபமொத்த கல்வத்து நாயகமே"**

(இன்னிசைப் பாமாலை)

எனத் தொடங்குகிறது பாவலர் பாடிய பாமாலை. பாவலரது இன்னிசைப் பாமாலையின் நூறு மலர்களும் தேனூறி நிற்கும் அருமைக்கு இம்முதற் பாடலே சான்றாக முந்தி நிற்கின்றது. பாமலர் ஒவ்வொன்றின் ஒவ்வொரு சொல்லும் பாவலர் தம் ஞானாசான் மேற்கொண்ட நிகரற்ற அன்புக்குச் சான்று பகர்கின்றன. மேற்குறித்த பாடலின் முன்னிரண்டு அடிகளில் கல்வத்து நாயகம் அவர்களுடைய அன்பூறும் திருவடிகளில் தூய நெஞ்சோடு அமைந்த இன்னிசை மலர்களைச் சேர்த்து மகிழ விரும்பும் தம் ஆவலை வெளிப்படுத்துகின்றார். பொதுவாக இஸ்லாமிய இலக்கியத்தில் மனிதர்களின் திருவடிகளை மகிழ்ந்து பாடும் இயல்பினைக் காண முடியாது. ஆனால் தமக்கு இறைவனைக் காட்டியருளும் ஞானாசிரியர்கள் திருவடிகளைப் போற்றிப்பாடும் இயல்பு ஞானப்பாடலுக்கு உரியது. ஞானநெறி போற்றி அமைந்த பாமாலை இது என்பதை முதலடியிலேயே வெளிப்படுத்தும் வகையில் 'நும்அடிக்கே' எனப்பாடுவர். கல்வத்து நாயகத்தின் அன்பூறும் திருவடிகளில் இன்னிசைப் பாமலர்களைச் சூடி மகிழ்வது பக்திப்பாடலின் இயல்பாகும்.

## அன்பு நெறி விளக்கும் அருமையான பாடல்

பக்திப்பாக்களில் படைப்பவர் நெஞ்சமும் படிப்பவர் நெஞ்சமும் ஐம்புல உணர்வுகளையும் அடக்கி நெஞ்சத்தூய்மை பெறுவது இன்றியமையாததாகும். இது கருதியே பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெருமான் 'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள' எனப்பாடுவர். புலனறிவு ஒடுங்கி அனைத்து உணர்வு

களும் பக்தி வெள்ளத்தில் அடங்கித் தூய நெஞ்சொடு பாடப் பெறுவது பக்திப்பாடல். இம்முறையில் 'ஐஞ்சவித்த நெஞ்சினொடு' பாவலர் இப்பாடலைப் பாடியிருப்பது ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதாகும். அதனை விளக்கவே 'அற்பூர நும் அடி' என்றார், அன்பு பெருகி ஊற்றெடுக்கும் கல்வத்து நாயகர் திருவடிகள். பாட்டின் இறுதி யடியில் 'கற்பூர தீபம் ஒத்த கல்வத்து நாயகம்' என்பார். பாடலின் இவ்வடியை நோக்குவார் வியப்படைவார். கற்பூர தீபம் காட்டு வது இந்த சமயப் பெருமக்களின் வழிபாட்டு நெறி. கற்பூர தீபம் காட்டுவதன் நோக்கம் வழிபாட்டுத் தலத்தின் இடச் சூழலைத் தூய்மைப்படுத்துவதாகும். கற்பூரத்தின் இயல்பு நச்சுப் பொருள் களைச் சுட்டெரித்தலாகும். கற்பூர ஒளியில் இடத்தைத் தூய்மை செய்து உள்ளத் தூய்மையோடு இறைவழிபாடு நடத்தப் பெறல் வேண்டும் என்பது கருத்து. கற்பூரம் நச்சுப் பொருள்களைச் சுட்டெரித்து இடச்சூழலைத் தூய்மைப் படுத்துவது போலத் தாம் இருக்கும் இடத்தைத் தூய்மைப் படுத்துகின்ற கல்வத்து நாயகத்தார் திருமேனியின் நல்லொளி விளங்குகிறது என்பது இப்பாடலின் இறுதியடியின் பொருள். இறுதித் திருமறை அல்குர்ஆன் மறுமை யில் சொர்க்கத்தில் வாழும் நல்லடியார்கள் கற்பூரம் கலந்த பானத்தைப் பருகி மகிழ்வார்கள் எனப்பேசும். அனைத்தையும் உட்கொண்டு பாவலர் தம் ஞானாசிரியரைப் போற்றி நூறு பாடல்களையுமே மிகச் சிறந்த பாடல்களாகப் பாடிக் குவித்திருப்பது கற்று இன்புறத்தக்கதாகும்.

## தமிழ்ப்பற்றை விடாத துறவி

அனைத்தையும் துறந்து இறைவனிடம் உளம்போக்கி யிருந்த கல்வத்து நாயகத்தார் தமிழ்மேற் கொண்ட பற்றினை மட்டும் விடாதவராகவே வாழ்ந்திருந்தார் என்பது வரலாறு. வெள்ளிக்கிழமைகளில் பள்ளிவாயில்களில் மதியத் தொழுகை யின் முன்னர் தொழுகையை நடத்துபவர் ஆற்றும் உரை (குத்பா) தமிழில் அமையலாமா என்பது பற்றித் தோழர்கள் கலந்துரை யாடியபோது கல்வத்து நாயகம் அவர்கள் வெளியிட்ட கருத்து நமக்கு வியப்பை ஏற்படுத்துகிறது. ஏழாவது வானத்தில் வாழ் பவர்கள் தமிழிலேயே பேசும்போது நாம் குத்பா உரையைத் தமிழில் வழங்கக் கூடாதா எனக் கேட்டார்களாம்.[7] அனைத்தையும் துறந்த இராமலிங்க வள்ளல் தமிழ்ப்பற்றை மட்டும் துறக்க வில்லை என்பார், மா.பொ. சிவஞானம்.[8] அதுபோலக் கல்வத்து நாயகம் அவர்களும் தமிழ்ப்பற்றைத் துறக்காத ஞானியராகத் தோற்றம் தருகின்றனர்.

## கவிமணி பாணியில் அமைந்த மழைப்பாட்டு

செய்குத்தம்பிப் பாவலர் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் காலத்தில் வாழ்ந்தவர். கவிமணியுடன் தோளொடு தோள் நின்று மக்கட் தொண்டாற்றியவர். எளிய இனிய புதுநெறியில் சமூக நல்லிணக்கக் கருத்துக்களைப் பொதுவாகப் பாடிய கவிமணி பாராட்டி வாழ்த்தியவர். இனிய எளிய வகையில் எல்லோருக்கும் பொதுவான மக்கள் நலக் கருத்துக்களைப் பொதுவகையில் பாடும் புதுநெறி போற்றிச் செய்குத்தம்பிப் பாவலர் பல்வேறு பாடல்களைப் பாடியுள்ளனர். கவிமணியின் பாடல்கள் போன்று ஓசைநயம் மிக்க பல பாடல்களைப் பாவலர் பாடியுள்ளார்.

தமிழகத்தின் தென்பகுதியாகிய கன்னியாகுமரி மாவட்டத்தில் பருவமழை பொய்த்துப் பொதுமக்கள் பெரிதும் அல்லலுற்றனர். மழையின்மையால் பாதிக்கப்பட்டவர்கள் பொதுமக்கள் அனைவருமே. அப்போது பாவலர் வருந்தி மழை வேண்டி இறைவனைப் பாடினார். அப்பாடல் சமயஞ்சாராது பொது நெறியில் நின்று அனைத்து மக்களும் இறைவனிடம் முறையிடும் வகையில் அமைந்து இன்பம் செய்கின்றது.

> **''சோகங்கள் உற்றவுயிர் சோர்வகல வேணியிடை**
> **மேகங்கள் தாங்குகின்ற மேன்மையனே - போகங்கள்**
> **பாலித் தருளும் பரமனே கார்மழையை**
> **ஆலித்துப் பெய்ய அருள்''.**

ஓசைநயம் மிக்க இனிய இவ்வெண்பா பொதுவகையில் மக்கள் உள்ளங்கவர்கின்ற பொது நோக்கில் அமைந்து அனைவருக்கும் இன்பம் செய்வதை நோக்கமாகக் கொண்டது. மழை பொய்த்தமையால் பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் பொருந்தும் பாடல் ஆதலின் 'சோகங்கள் உற்ற உயிர் சோர்வகல' எனப்பாடப்பட்டது. மேகங்கள் கருவுற்று மழை பொழிவது காரண காரிய அடிப்படையில் அமைந்த அறிவுப்பூர்வமான செயல்பாடு எனினும் இறையருளாலேயே மேகங்கள் கருவுற்று மழை பொழிகின்றன என்பது எல்லாச் சமயத்தாரும் ஏற்றுக்கொண்ட பொது உண்மை. அப்பொதுமை போற்றி 'வேணியிடை மேகங்கள் தாங்குகின்ற மேன்மையனே' என இறைவனைப் பொது வகையால் விளிப்பர். இங்கு பயன்படுத்தப்பட்ட 'வேணி' என்ற சொல் ஆகாயத்தைக் குறிக்கும். வேணி சிவபெருமானுடைய சடையையும் குறிக்கும். இறைவனைப் பொதுவாக வழிபடுகிறவர் வேணி என்ற சொல்லுக்கு ஆகாயம் எனப் பொருள் கொள்ளவும் சிவன் என

இறைவனை மொழிபவர் சடை எனப்பொருள் கொள்ளவும் இப்பாடல் வரி வழி செய்கின்றது. தமிழ் மெய்ஞ்ஞான இலக்கியத்தில் சூஃபி நெறியில் - சித்தர் நெறியில் பரம்பொருள், பரமன், சிவன் எனவரும் சொற்களெல்லாம் இறைவனையே குறிக்கும். இறைவனை மேன்மையன் எனப் பொதுவாகக் குறித்தவர் மூன்றாவது அடியில் 'பரமனே' எனவும் குறித்தல் நோக்கத்தக்கது. 'போகங்கள் பாலித்து அருளும் பரமனே' என இறைவனைப் போற்றுவார். போகங்கள் என்ற சொல்லாட்சி நோக்கத்தக்கது. போகம் என்ற சொல்லுக்குத் துய்த்தல் அல்லது நுகர்தல் என்று பொருள். மழை பொய்த்து விட்டால் போகங்கள் விளையாது. 'போகம் விளைந்ததா' எனப் பாவலர் வேறு ஒரு கடிதத்திலும் பாடுவர். மழை பொழிந்தால் இரண்டு மூன்று போகங்கள் விளையும். மழை பொய்த்து விட்டதால் ஒரு போகம் கூட விளையாமல் மக்கள்துன்புற நேரிடும். ஆகவே இறைவனைப் போகங்கள் பாலித்து அருளும் பரமன் எனப்பாடுவார். பல போகங்கள் விளைந்து செல்வம் செழித்து மக்கள் வாழ்வு பெறக் காரணமானவன் இறைவனே என்பதில் இறை நம்பிக்கையுடைய அனைவரும் ஒருமித்த கருத்துடையவர். பரமன் எனப் பாடும்போது சைவர்கள் சிவபெருமானையும் வைணவர்கள் திருமாலையும் முஸ்லிம்கள் அல்லாவையும் கிறித்தவர்கள் ஏசுவின் தந்தையையும் நினைத்து மகிழ முடியும். பாட்டின் உயிரான நிறைவுப் பகுதி 'மழையைப்...பெய்ய அருள்' என்பதாகும். இறைவன் அருளால் மழைபெய்ய வேண்டும்; நாடு செழிக்க வேண்டும் என்ற பாவலரது விருப்பமே அனைவரது விருப்பமும் ஆகும். இதுவே பாவலர் கண்ட சமூக நல்லிணக்கப் பண்பாகும்.

## பாவலர் பாடிய பெண்ணின் பெருமை

கவிமணி போன்றே பாவலர் எளிய இனிய ஓசைநயம் மிக்க பல பாடல்களைப் பெண்ணின் பெருமை, தமிழ்த்தாய் வாழ்த்து, நோன்பை மறவாதே, கள்ளைக் குடியாதே போன்ற மிகப் பல தலைப்புகளில் பாடியுள்ளார். பழைய செய்திகளைப் புதிய நடையில் பாரத நாடு முழுமையும் போற்றும் வகையில் பொதுவாகப் பாடியுள்ளது கண்டு போற்றத்தக்கதாகும். பெண்ணின் பெருமை என்ற தலைப்பில் மிகப் பல அறுசீர் விருத்தங்கள் பாடியுள்ளார். பாரம்பரியமாகத் தமிழ்ப் பாக்களில் பாடப்பட்டுள்ள தெய்வநலஞ் சிறந்த பெண்ணின் பெருமைகள் பாடப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

*"நாவில் ஒருவன் இடத்தொருவன் நறைசேர் மார்பின் நடுவொருவன்
ஆவி யென்ன வைத்ததுன்னை அல்லால் யாரை அறைவாயே"*

இப்பாடல் பெண்ணின் பெருமை என்ற தலைப்பில் அமைந்த தாகும். தமிழ் இலக்கியத்தில் பிரமன் நாவிலும் சிவபெருமான் இடப்பக்கத்திலும் திருமால் மார்பின் நடுவிலும் உயிராகப் பெண்ணைப் போற்றினர். கம்பரும் இக்கருத்தை நயமாகப் பாடுவார்.

*"இந்திரன் சசியைப் பெற்றான்; இருமூன்று வதனத் தோன்தன்
தந்தையும் உமையைப் பெற்றான்; தாமரைச் செங்க ணானும்
செந்திரு மகளைப் பெற்றான்; சீதையைப் பெற்றாய் நீயும்;
அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்குஇலை உனக்கே ஐயா!"*

*"பாகத்தில் ஒருவன் வைத்தான் பங்கயத் திருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான் அந்தணன் நாவில் வைத்தான்
மேகத்தில் பிறந்த மின்னை வென்ற நுண்இடை யினாளை
மாகத்தோள் வீர பெற்றால் எங்ஙனம் வைத்து வாழ்தி!"*

(ஆரண்ய கண்டம், சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் பாக்.75,76)

இப்பாடல்கள் சூப்பணகை சூழ்ச்சி மிக்கவளாக இராவணனிடம் சொல்திறங்காட்டிப் பேசும் பேச்சாகக் கம்பன் காப்பியத்தில் அமைகின்றன. வைதிக புராணத்தில் பிரமன், சிவன், விஷ்ணு மூவரும் முறையே நாவிலும் இடபாகத்திலும் மார்பிலும் பெண்ணைப் போற்றி வைத்த பெருமை பேசப்படும். இஸ்லாத்தை நம்பிப் போற்றுகின்ற செய்குத்தம்பிப் பாவலர் தமிழ் இலக்கிய மரபு போற்றி இந்திய நாட்டில் பெரும்பான்மையோர் நம்புகின்ற செய்திகளை நயமாகப் பாடுகின்றார். முக்கடவுளரும் போற்றிய பெண்ணை நோக்கி அவள் பெருமை கூறுவாராக ஆவியென உன்னையன்றி வேறு யாரை வைத்தார்கள்? கூறு பெண்ணே! உன் பெருமையை நீ அறியவில்லையே எனப்பாடும் முறையில் சமூக நல்லிணக்கத்தை இலக்கியத்தில் ஏற்றிய பாவலர் பெருமை உணர்ந்து போற்றத் தக்கது.

*"கற்பிற் கிலக்காய் நின்றனையே
காய்தீக் குளித்துக் களித்தனையே
அன்பிற் கணவ னுயிர்கவர்ந்த
அந்த கன்கை மீட்டனையே!"*

*உரிய உரிய அரையினிடை
ஓங்கி வளருந் துகில்காட்டி
அரிய மகிமை விளைத்தனையே!
அழியாய் புகழும் பெற்றனையே!"*

என இரண்டு பாடல்களில் பாரம்பரியமாகத் தமிழ் இலக்கியங்

களில் பேசப்படும் பெண்ணின் பெருமையைப் பாவலர் பேசக் காண்கிறோம். முந்திய பாடலில் கணவனது கட்டளையை ஏற்றுச் சீதை தீக்குளித்துக் களித்ததையும் எமனிடமிருந்து கணவனது உயிரைக் காத்த சாவித்திரியின் பெருமையையும் முந்திய பாடலில் பாடுவார். பிந்திய பாடலில் பாண்டவர் மனைவியாகிய பாஞ்சாலியின் துகில் வளர்ந்த கதை சுட்டப்படுகிறது. சீதை, சாவித்திரி, பாஞ்சாலி ஆகியோர் கற்பரசியராக விளங்கி வேறுபட்ட சூழல்களில் சிறந்த மனைவியராகவும் விளங்கிப் பெண்ணுக்குப் பெருமை சேர்த்தோர் ஆவர். தமிழ் மக்கள் எல்லோரும் இம்மூவரையும் அறிந்துள்ளனர். ஆகவே இம்மூவரையும் போற்றிப் பெண்ணின் பெருமை பேசும் பாவலரது பண்பாடு நோக்கத்தக்கதாகும்.

தமிழ்மொழி தமிழர்க்கு அறிவும் பண்பாடும் உணர்வும் ஊக்கமும் தரும்மொழி ஆதலின் தாய்மொழி மீது தணியாப் பற்றுக் கொண்டவர் பாவலர். தாய்மொழி மீது கொண்ட பற்று பாவலரைத் தமிழைப் போற்றத் தூண்டியதே தவிரப் பிற மொழியை வெறுத்துத் தூற்றத் தூண்டியதில்லை. தாய்மொழி மீது பற்றும் பிறமொழிகளை மதிக்கும் இயல்பும் கொண்ட பாவலர் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல்கள் அறியத் தக்கனவாகும்.

## உமர்கய்யாம் நெறியில் பாவலர்

'கள்ளைக் குடியாதே' என்ற தலைப்பில் பாடிய செய்குத்தம்பிப் பாவலர் 'மது வேண்டும்' என்ற தலைப்பில் இசைப்பாடல் ஒன்றைப் பாடியுள்ளனர். இப்பாடல் அவரை 'ஒரு சூஃபி ஞானப் புலவராக உயர்த்திக் காட்டும். ஞானமறிந்து மோனநிலையில் இருத்தலை 'மது' எனக்கொண்டு அந்நிலை வேண்டும் எனப் பாவலர் பாடும் இப்பாடல் ஒரு பல்லவியும் பன்னிரண்டு சரணங்களும் கொண்டது' என்பார் டாக்டர். செ. பசுலுமுகியித்தீன்.[9] இப்பாடல் உமர்கய்யாம் அவர்கள் மெய்ஞ்ஞானத்தை மது எனக் கொண்டு கூறியிருப்பதை ஏற்று அமைந்ததாகும். மெய்ஞ்ஞானம் 'மஸ்த்' எனப்படும். மெய்ஞ் ஞானிகளை மஸ்தான் என அழைப்பார்கள். செய்குத்தம்பிப் பாவலர் மெய்ஞ்ஞான நெறியில் நாட்டங் கொண்டவர் என்பதை இப்பாடல் காட்டும்.

## மெய்ஞ்ஞான இலக்கியம் போற்றும் பாவலர்

செய்குத்தம்பிப் பாவலர் 'எங்கள் திருநபி' என்ற தலைப்பில் இரண்டு கும்மிப் பாடல்கள் பல்லவி சரணங்கள் கொண்டு அமைந்துள்ளன. அப்பாடல்களில் பெருமானார் நபிகள் நாயகம்

மண்ணுலகத்து ஆற்றிய நற்பணிகள் பலவற்றைக் கூறுவர். அச்செய்திகள் அனைத்தும் மெய்ஞ்ஞான அடிப்படையில் அமைந்து விளங்கக் காண்கிறோம். முதல் பாடலில் சரணங்களில் நபிகள் நாயகம் ஏகதெய்வ வணக்கத்தை உலகில் நிலை நிறுத்தியது; வையம் முழுதும் ஓரினம் எனப் பேசியது; ஆண் பெண் இரு பாலருக்கும் சம உரிமை அளித்தது; மறுமணத்திற்கு வழி வகுத்தது; செம்பு, கல், மண், உருவ தெய்வங்களை மறுத்தது; சந்யாசமும் புரோகிதமும் இல்லை என்றது; சாதி பேதம் ஒழித்து சாத்திரக் குப்பையைத் துடைத்தது; பெண் குழந்தைகளை உயிரோடு புதைக்கும் வழக்கத்தைத் தடுத்தது; சொர்க்கம் தாயின் பாதத்தடியில் இருக்கிறது எனக் கூறியது; சீனம் சென்றேனும் கற்கத் தூண்டியது-முதலான மெய்ஞ்ஞான இலக்கியங்கள் போற்றும் நபிகள் நாயகத்தின் நற்சிந்தனைகளைப் போற்றிப் பாடுவார்.

இரண்டாவது பாடலின் சரணங்களில் நபிகள் நாயகத்தின் நற்பணிகளாக சுத்த சன்மார்க்கம் வகுத்தது. சமயச் சழக்கை அழித்தது, ஏக தெய்வ வணக்கத்தை வலியுறுத்தியது. ஏழைவரியை (ஜகாத்) ஏற்படுத்தியது. எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் நெறி, எல்லோரும் ஓர் சமம் என்றது, ஒற்றுமை வழியில் சமத்துவ சகோதரத்துவத்தை நிலை நிறுத்தியது முதலியவற்றைப் பாடுவார். இவை அனைத்தும் மெய்ஞ்ஞான இலக்கியங்கள் பேசியன. மேலும் இராமலிங்க வள்ளலார், பாரதியார் போன்ற பெருமக்கள் வலியுறுத்தியவை. வள்ளலார், பாரதி ஆகியோர் சொற்களை முழுமையும் போற்றிப் பாடும் முறை நோக்கத்தக்கது. இங்கெல்லாம் பாவலர் செய்திகளுக்கே முக்கியத்துவம் தந்து பேசப் பார்க்கிறோம். அச்செய்திகள் நபிகள் நாயகத்தாலும் இராமலிங்க அடிகளாராலும் பாரதியாராலும் வலியுறுத்தப் பட்டன. யார் கூறினார் என்பதற்கு முதன்மை தராது அவர்கள் வலியுறுத்திய உண்மைகளைச் சமுதாயத்தில் நடைமுறைப் படுத்துவதற்கே முதன்மை தந்து பாவலர் பாடுவார். இப்பாடல் முறை மெய்ஞ் ஞான இலக்கியத்தின் நன்கொடை எனக் கூறலாம்.

மெய்ஞ்ஞானி செய்குத்தம்பிப் பாவலர் வழங்கிய சாற்றுக் கவிகள் பலநூறு இருக்கும். அவற்றுள் இருபத்து மூன்று சாற்றுக் கவிகள் இப்போது கிடைக்கின்றன. அவற்றுள் மிகப் பல சாற்றுக் கவிகள் மெய்ஞ்ஞானப் பாடல்களுக்கும் தெய்வப் பாடல் களுக்கும் வழங்கிய சாற்றுக்கவிகளே. கடையநல்லூர் செய்கு உதுமான் லெப்பை சாகிபு, மேலப்பாளையம் செய்கு பசீறு

லெப்பை சாகிபு ஆகியோர் இயற்றிய ஞானோதய புஞ்சம் என்ற மெய்ஞ்ஞான நூலுக்குத் (1901) தோத்திரப் பதிகம், ஆசிரிய விருத்தம் அடங்கிய சாற்றுக் கவி வழங்கியுள்ளனர். கோட்டாறு செய்கு முகம்மது மதீனா ஆலிம் சாகிபு இயற்றிய வேதாந்த ரத்தினமாலை (1903) என்ற நூலுக்கு அறுபது வரிகள் கொண்ட நிலைமண்டில ஆசிரியப்பாவில் சாற்றுக்கவி வழங்கியுள்ளனர். செய்கு முகம்மது மீரான் முகியித்தீன் காதிரிய்யா சாகிபு இயற்றிய புகழ்ச்சி மாலை எனப்பெயரிய மெய்ஞ்ஞான இலக்கியத்திற்கும் செய்குபாவா இயற்றிய மெய்ஞ்ஞானத் தங்கப்பாட்டு மாலை என்ற நூலுக்கும் (1913, 1916) நாகூர் குலாம் காதிர் நாவலர் இயற்றிய ஆரிபுநாயக வசனம் என்ற நூலுக்குப் பாயிரமும் சாற்றுக் கவியும் வழங்கியுள்ளனர். (1904) பதுறுத்தீன் புலவர் இயற்றிய முகியித்தீன் புராணம் என்ற காப்பியத்திற்குச் சிறப்புப்பாயிரம் எழுதிப் பதிப்புத்துள்ளனர். (1907). ஆனந்தம்பிள்ளை என்பார் இயற்றிய ஆய்க்குடி முருகன் பிள்ளைத்தமிழ் என்ற நூலுக்கும் இன்னும் மிகப்பல நூல்களுக்கும் சாற்றுக்கவிகள் வழங்கியுள்ளனர். இருபதாம் நூற்றாண்டில் முதல் நாற்பது ஆண்டுகளில் தமிழில் வெளியிடப்பட்ட மெய்ஞ்ஞானப் பாடல்கள் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் அனைத்திற்கும் பாவலர் சாற்றுக் கவி தந்து சிறப்பித்துள்ளனர் எனச் சுருக்கமாகக் கூறிவிடலாம்.

## சமத்துவ, சமூக நல்லிணக்கம் பாடிய பாவலர்

செய்குத்தம்பிப் பாவலர் படைத்து அச்சில் வெளிவந்தும் வெளிவராதும் கிடக்கின்ற பாவலரது இலக்கியங்களை ஆய்ந்தால் ஓர் உண்மை விளங்கும். எழுதும்போது மனித சமுதாயத்தை நினைத்துக் கொண்டு சமய, சாதி வேறுபாடுகள் கடந்து கடைசி மனிதனும் ஈடேற்றம் பெற வேண்டும் என்ற பரந்து விரிந்த நோக்கில் கருத்துக்களைப் பாடியவர் பாவலர் என்ற உண்மையே அதுவாகும். சமய முத்திரைகள், குறியீடுகள் தோன்றும் வகையில் இலக்கியங்களைச் செய்யும்போது பொது மக்களுக்குப் பயன் படும் பொது உண்மைகளே உரைக்கப்பட்டாலும் பிற சமயத்தார் தம் சமய முத்திரைகள் குறியீடுகள் இல்லாமையால் அவற்றை ஒதுக்கிவிடும் போக்கை உணர்ந்த பாவலர் பொதுவாகப் பாடும் இயல்பினைப் பெரிதும் மெய்ஞ்ஞான இலக்கியங்களிலும், சித்தர் பாடல்களிலும், சூஃபி இலக்கியங்களிலும் காணப்படுவது கண்டு அவற்றைப் போற்றிப் பாடினார். இப்போக்கால் சமூக நல்லிணக்கம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற அடிப்படையில் பாவலரது பாடல்கள் விளங்கின என அறிய முடிகிறது.

## அடிக்குறிப்பு

1. செ.திவான், பதிப்பாசிரியர், ஷம்சுத்தாசீன் கோவை, பக்-16
2. மு.நூ., பக்-8
3. ஷம்சுத்தாசீன் என்ற வள்ளல் பெயர் தம்தாசீன், தம்தாஸ், தமுஸ்தாசீம் என்றெல்லாம் மருவி அப்பகுதியில் வழங்கப்பெற்றது.
4. அ.ச.அப்துல்சமது, நான்காவது இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டுச் சிறப்பிதழ், பிறைக் கொழுந்து, 1979
5. M.M.Ismail, Islam, Indian Religions and Tamil Culture, University of Madras, 1977.
6. பேராசிரியர் கா.அப்துல்கபூர், இஸ்லாமிய இலக்கியம், இஸ்லாமிய ஆராய்ச்சி நிலையம், தக்கலை, பக்-108
7. எம்.ஏ.ஹைதர் அலீ, சென்னை, இஸ்லாமியத் தமிழில் மெய்ஞ்ஞானம், இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கட்டுரைக் கோவை, 1978, பக்-138
8. மா.பொ.சிவஞானம், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, பக்-278-296
9. மகாமதிப் பாவலர், பக்-104

# வள்ளலார் பாடல்கள் அருட்பாக்களே!

## பாவலரது சென்னை வருகை

**பா**வலரது இருபத்தோராம் வயதில் அவரது முன்னோர் ஞானியார் அப்பா அவர்களுடைய 'மெய்ஞ்ஞானத் திரட்டு' என்ற நூலை வெளியிடுவதற்குப் பாவலருடைய துணை வேண்டப் பட்டது. ஞானியார் அப்பா அவர்களுடைய வழிவந்த மங்கை நல்லாரை மணந்த பாவலர், ஞானியார் அப்பா அவர்களுடைய பாடல்களில் ஈடுபாடு கொண்டிருந்தமையால் தம் உடல் நிலையையும் புறக்கணித்து நூல் வெளியீட்டுக்குச் சென்னை செல்ல உடன்பட்டார்.

சென்னையில் மிகச்சிறந்த அச்சுக்கூடமாக அந்நாளில் விளங்கியது ஸ்ரீபத்பநாப விலாச அச்சகமே. அதனை இட்டா பார்த்தசாரதிநாயுடு அவர்கள் நடத்தி வந்தார். அக்காலத்தில் மிகச்சிறந்த நூல்களை - காப்பியங்களை - புராண நூல்களை வெளியிட்டு வந்தார்.

பாவலர் அவர்களுடைய சென்னை வருகை மிகப்பல வகைகளில் பெரும்பயன் மிக்கதாக அமைந்துவிட்டது. பாவலர் சென்னை வந்து இட்டா பார்த்தசாரதி அவர்களைச் சந்தித்துப் பதிப்புப் பணியில் ஈடுபட்டார். பார்த்தசாரதி அவர்கள் பாவலரின் தமிழ்ப் புலமையையும் பதிப்பாற்றலையும் கண்டு அந்நூல் பதிப்புப் பணி முடிந்த பிறகும் சென்னையிலேயே தங்குமாறு விரும்பி வேண்டித் தங்க இடமும் மாத ஊதியமும் தந்தார். அவருடைய அன்புக்கு ஆட்பட்டுப் பாவலர் அவர்களும் சென்னையிலேயே தங்கித் தமிழ்ப் பணியாற்றத் தொடங்கினார்.

பாவலருடைய ஐம்பதாண்டுகட்கு மேற்பட்ட நற்றமிழ்ப் பணிக்குச் சென்னை வாழ்க்கையே அடிப்படையாக அமைந்தது என்று கூறிவிடலாம். பாவலருடைய சிறந்த பதிப்புப் பணிகள் இக்காலத்திலேயே நிகழ்ந்தன. அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்ட நூல்கள் அனைத்தும் பாவலர் பார்வைக்கு வந்தன. அக்காலத்தில் மிகச்சிறந்த தமிழ் நூல்கள் வெளிவருவதற்குப் பாவலர் துணையாக இருந்தார்.

சீறாப்புராணத்திற்கு முழுப் பொழிப்புரை இரண்டு பாகமாகப் பாவலரால் வெளியிடப்பெற்றன. நபிகள் நாயகத்தின்

ஜீவிய சரித்திரம். சீறா நாடகம் போன்ற இலக்கிய நூல்களைப் பாவலர் வெளியிட்டதும் இக்காலத்திலேயே. யதார்த்தவாதி, இஸ்லாமியமித்திரன் ஆகிய இரண்டு இதழ்களை முறையே சமூகப் பணிக்கும் சமயப் பணிக்கும் வெளியிட்டு வந்தார்.

பாவலரது சென்னை வாழ்க்கை குறிப்பிடத்தக்க இருபெரும் தமிழ்ப்பணிக்கு உதவியாக அமைந்தது. பாவலர் அவதான ஆற்றலை வளர்த்துச் 'சதாவதானிப் பாவலர்' எனப் பாராட்டப் படுவதற்குரிய தலையாய தமிழ்ப்பணிக்கு இக்காலத்திலேயே ஊக்கம் கிடைத்தது. அன்றியும் அருட்பா மருட்பாப் போராட்டத்தில் பங்கு பெற்றுச் சிறந்த தமிழ்ப்பணி ஆற்று வதற்கும் இக்காலத்திலே வாய்ப்புக் கிடைத்தது.

## பாவலர் என்றால் செய்குத் தம்பியையே குறிக்கும்

சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் அவர்கள் சென்னையில் வாழ்ந்த காலத்தில் சென்னைத் தமிழ்ச் சான்றோர் 'சதாவதானி' பட்டத்தைப் பாவலருக்கு வழங்கி மகிழ்ந்தனர். கோவில் என்றால் சைவப் பெருமக்களிடையே சிதம்பரம் நடராசப் பெருமான் கோவிலையே குறிக்கும்; வைணவர்களிடையே கோவில் என்றால் திருவரங்கத்தையே குறிக்கும்; தமிழறிஞர்களிடையே மகா வித்துவான் என்றால் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களையே குறிக்கும்; கவிமணியென்றால் தேசிகவிநாயகம் பிள்ளையவர் களையே குறிக்கும். அதுபோலவே பாவலர் என்றவுடன் செய்குத்தம்பிப் பாவலர் அவர்களே தமிழ்மக்கள் கண்முன் வருவார்கள்.[1]

பாவலர் வாழ்வில் நிகழ்ந்த எண்ணற்ற சிறப்பு நிகழ்ச்சி களில் சென்னையில் நிகழ்ந்த அருட்பா பற்றிய விவாதத்தில் கலந்து கொண்ட நிகழ்ச்சி தனிச்சிறப்புப் பெறுகிறது. அதற்குக் காரணம் அந்நிகழ்ச்சி மூலம் வள்ளலார் பாடல்களில் அவரது புலமை வெளிப்பட்டது மட்டுமல்லாமல் பாவலருடைய சமயப் பொது நோக்கும் வெளிப்பட்டது. தமிழ்ப் புலவர்களுடைய சிந்தனைகள் தமிழ் மக்களுக்கும் இந்தியர்களுக்கும் உரிய பொதுச் சொத்துக் களாகும். ஒரு குறிப்பிட்ட குழுவினர் தமிழ்ப் பாடல்களைத் தங்களுடைய தனியுரிமை ஆக்கிவிட முடியாது என்ற பாவலரின் எண்ணம் இந்நிகழ்ச்சியில் விளங்கித் தோன்றியது. பாவலர் அந்த விவாதத்தில் பங்கேற்ற போது வள்ளலார் பாடல்களை அருட் பாடல்களே என ஓர் இஸ்லாமியப் புலவர் வரிந்து கட்டி வாதிடுகிறாரே எனத் தமிழகம் வியந்தது.

திருக்குறள், கம்பராமாயணம், சீறாப்புராணம் ஆகிய மூன்று தமிழ் இலக்கியங்களைப்பற்றி நுட்பம் நிறைந்த இலக்கியப் பொழிவுகளைச் சென்னையில் பாவலர் ஆற்றி வந்தார். மேற்குறித்த மூன்று இலக்கியங்கள் பற்றிய பாவலரது பொழிவுகள் ''அந்நூற்களையே வாழ்வு முழுவதும் கற்ற பண்டிதர்களையும் வியக்கச் செய்யும்'' என வித்துவான் சி. குமரேசப்பிள்ளையவர்கள் குறிப்பிடுவார்.[2]

'கம்பன் காவியத்தை நயம்பட விளக்கும் பழைய தலைமுறைப் பெரியார்களுள் நம்காலத்து வாழ்ந்தவர் பாவலர் ஒருவர்தான்' எனத் தமிழ்த்தென்றல் திரு.வி.கல்யாண சுந்தரனார் குறிப்பிட்டதாகச் சாத்தாங்குட்டிப் பிள்ளையவர்கள் எடுத்துக் காட்டுவர்.[3] கம்பர் பாடிய இராமாயணம் ஒன்று தான்; ஆனால் கம்பன் காப்பியப் பார்வைகள் மிகப் பல. இலக்கிய விமர்சனம் விமர்சகர் தகுதிக்கும் விருப்பத்திற்கும் இணங்க வேறுபடும். பழைய தலைமுறைப் புலவர்கள் இராமாயணப் பார்வை தனித்துவம் உடையது. திரு.வி.க.வின் இத்திறனாய்வு பொருத்தம் மிக உடையதாகும்.

கவிஞர் ஜீவானந்தம் இராமாயண காவியத்தைப் பொதுவுடைமை நோக்கில் பார்த்துப் பலநூறு பக்கங்கள் எழுதினார். லெனின், மார்க்ஸ் ஆகிய பொதுவுடமைச் சித்தாந்த வாதிகளுக்கு முன்னர் பொதுவுடமைத் தத்துவத்தைப் பூரணமாகப் பேசியவர் கம்பரே எனக் கவிஞர் ஜீவானந்தத்திற்குப் பாவலர் எடுத்துக்காட்டினார்.[4]

தலைநகரத்தில் வாழ்வது தகுதிமிக்கோருக்குப் பெரு வாய்ப்பாக அமையும் என்பதில் உண்மை இருக்கிறது. ஆனால் அனைவரும் பெருநகரங்களில் வாழ முடியாது. தகுதி வாய்ந்த அறிஞர் பலர் சிற்றூர்களில் வாழ்ந்துள்ளனர். இக்காலத்தில் சென்னை போன்ற பெருநகரங்களில் வாழும் அறிஞர்களுக்குக் கணினியுகத்தின் வாய்ப்புகள் மிகுதியே. இணையதளம் (Web Site) போன்ற வசதிகள் புலமை மிக்க அறிஞர்களுக்குத் தம் ஆய்வுரைகளை உடன் உலகெலாம் பரப்புவதற்கு வாய்ப்பைத் தருகின்றன.

பாவலரோ இந்தியத் திருநாட்டின் தென் எல்லையில் வாழ்ந்தவர். தென்கோடியில் வாழ்ந்த பாவலர் தமிழகம் முழுவதும் அறியப்பட்டிருந்தது அக்கால நிலையை நோக்க அரிய செய்தியாகும்.

## தமிழறிஞர் ஆறுமுக நாவலர்

தமிழகக் கோவில்களில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்ற பஞ்ச புராணங்களைப் பாடியே பூசைக்காலத்தில் வழிபாடு நிகழ்த்துவது மரபு. ஒருநாள் யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் என்ற தமிழறிஞர் தில்லைக்கோவிலுக்குச் சென்றபோது பஞ்சபுராணங்களைப் பாடிய பிறகு வள்ளலார் அருட்பாடல்களில் ஒன்று பாடப்பட்டது. இது கேட்ட நாவலர் கடுஞ்சினங் கொண்டார். சமயக்குரவர் நால்வர் திருப்பாடல்கள் மட்டுமே 'அருட்பாடல்' என்ற பெயருக்குரியன; வள்ளலார் பாடல்களை அருட்பாக்கள் எனக் குறிப்பது சமயக் குரவர் நால்வரையும் இழிவுபடுத்துவதாகும். கோவில்களில் பஞ்ச புராணப்பாடல்களோடு வள்ளலார் பாடல்களைப் பாடக் கூடாது என்பன ஆறுமுக நாவலருடைய பிரச்சாரங்களாகும். வள்ளலாரும் ஆறுமுக நாவலரும் இறப்பெய்திய பிறகும் இக்கருத்து தமிழகத்தில் மிகப்பெரிய விவாதப் பொருளாக இருந்து வந்தது. ம.பொ.சிவஞானம் அவர்கள் தம்முடைய 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்ற நூலில் இச்சொற்போர் பற்றிக் குறிப்பிடுகின்றார். வேதாந்த கேசரி கோ. வடிவேலு செட்டியார், மறைமலையடிகள், அட்டாவதானம் பூவை கல்யாணசுந்தர முதலியார், நாஞ்சில் சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் ஆகியோர் வள்ளலாரின் அருட்பாக்களை ஆதரிக்கும் கட்சியின் முன்னணியில் நின்றனர்' எனக் குறிப்பிடுவார்.[5]

## பாவலர் விளக்கிய இறையொருமைப்பாடு

ஆறுமுக நாவலரது மாணவர் கதிர்வேல் பிள்ளையவர்கள் தம் ஆசிரியர் மறைவிற்குப் பின்னரும் தம் ஆசிரியர் கருத்தை நாட்டும் வகையில் நூல்கள், அறிக்கைகள், மேடைப் பேச்சுக்கள் மூலமாக இச்சொற்போரைத் தொடர்ந்து நடத்தி வந்தார். அவருடைய மாணவராகிய திரு.வி.க. அவர்களும் தம் ஆசிரியர் கதிர்வேல் பிள்ளைக்கு இத்துறையில் உதவி வந்தார். சென்னையில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இரு அணிகளும் மாறி மாறிச் சொற்போர் நிகழ்த்துவதை மக்கள் கூடி ஆர்வத்தோடு கேட்டு வந்தனர். இப்பேச்சுக்களைக் கேட்ட பாவலர் இந்த விவாதத்தில் பங்கு கொள்ள விரும்பினார். பாவலர் பேசுவார் என்ற அறிக்கை வெளியிடப்பட்டதும் மக்கள் மகிழ்ச்சியோடு பெருந்திரளாக வந்து கூடிக் கேட்டனர். கண்ணபிரான் முதலியார் அக் கூட்டத்திற்குத் தலைமையேற்றார். தலைவர் தொடக்கவுரைக்குப்

பிறகு பாவலர் பேச எழுந்ததும் அருட்பாடலில் ஒன்றை இறை வணக்கப் பாடலாகப் பாடிக்காட்டி விளக்கினார். 'சாதி குலம் சமயமெலாம் தவிர்த்தென்மேல் ஏற்றி' எனத் தொடங்கும் வள்ளலாரது அருட்பாடலுக்குப் பாவலர் தந்த விளக்கம் அவையோரை வியப்படையச் செய்தது. தனித் தலைமைப் பொருளே, அனைத்து நின்ற மொழியே. உருவுறச் செய்யுறவே, தூய நடத்தரசே என இறைவனைப் பொதுச் சொற்களால் குறித்து விளக்கும் உணர்ச்சிமிக்க பாடல். பாவலர் விளக்கிய இப்பாடலின் சமரசப் பாங்கை உணர்ந்த பொதுமக்கள் ஆரவாரம் செய்து மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

## கதிர்வேலர் நூலுக்கு மறுப்பு

வள்ளலார் பாக்களை மருட்பாக்கள் என்று கூறிய கதிர்வேல் பிள்ளையவர்கள் தம் கருத்தை நாட்ட 'இராமலிங்கம் பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு' என்ற பெயரில் நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார். இக்கூட்டத்தில் பாவலர் தம்வாதத் திறமை கொண்டு இந்த நூலின் பெயரே பிழையுடையது; ஆகவே நூற்கருத்துக்கள் அனைத்தும் பிழைபட்டன என வாதிட்டார். ஆபாச தர்ப்பணம் என்பது -ஆபாசம் நிறைந்த கண்ணாடி எனப் பொருள்படும். பாவலர் இச்சொற்களை ஆபாச தர்ப்பணம் எனப் பிரித்து இராமலிங்கம் பிள்ளையின் பாடல்கள் எவ்வளவு சிறந்தன என்றும் பாசத்தின் இயல்பை விளக்கும் கண்ணாடி எனவும் பொருள்படுகின்றது எனக் கூறினார். ஆ + பாச + தர்ப்பணம் எனப் பிரித்தார். தர்ப்பணம் என்ற சொல்லே பிழைபட்டது என்றார். 'ரழதனிக்குறில் அணையா' என்பது நன்னூல் இலக்கணம்.[6] தனிக்குறிலையடுத்து ரகர ழகர ஒற்றுக்கள் வாரா என்பது விதி. அவ்விதிக்கு மாறாகத் தர்ப்பணம் எனக் குறிப்பதும் இலக்கணப் பிழை எனக்காட்டி நூலின் தலைப்பில் இத்தனை பிழைகள் இருக்கின்றனவே இந்நூல் கூறும் கருத்து உண்மையாக இருக்க முடியுமா? என்று கேட்டார்.

மேலும் தொடர்ந்து நூற்பெயரின் இறுதியில் உள்ள மருட்பா மறுப்பு என வருவதும் பிழையுடையது என்றார். அல்லது என்ற இடைச்சொல் விளக்கப் பொருளில் வரும் அல்லது மறுக்கின்ற உறழ்ச்சிப் பொருளில் வரும். இங்கு விளக்கப் பொருளிலேயே வந்திருக்கிறது. மருட்பா மறுப்பு என்பது நூலாசிரியர் கருத்தை எங்ஙனம் குறிக்கும்? மருட்பா மறுப்பு அருட்பா என்பது தானே! என்று கேட்டார். இத்தருக்க வாதங்களைக் கேட்டுக் கொண்டிருந்த

அவையோரில் ஒருவர் எழுந்து தங்கள் கருத்துப்படி வள்ளலார் பாடல்கள் பாச இயல்பை விளக்கிக் கூறுபவை தாமே? எனக் கேட்டார். அதற்குப் பாவலர் ஞான நூல்கள் பாசத்தை விலக்குவதற்குப் பாசத்தின் இயல்பை விளக்கிக் கூறுதல் மரபு; அங்ஙனமே பாசத்தை விளக்கிக் காட்டுவதன் மூலம் பாசத்தின் நிலையாமையை வள்ளலார் உணர்த்தினார் என விளக்கம் அளித்தார்.

## சைவசித்தாந்தம் பேசிய பாவலர்

மற்றொரு நாள் பாவலர் அருட்பாவை ஆதரித்துச் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தபோது ஒருவர் எழுந்து ஒரு விளக்கம் கேட்டார். பொதுவாக பக்திப் பாடல்களில் இறைவனது அடியினைச் சேரவேண்டும் என்று வேண்டுவது தானே மரபு? இராமலிங்கரோ இறைவன் முடி மேலிருக்க இடம் வேண்டுகின்றாரே என அருட்பா ஒன்றினைக் காட்டி வினவினார்.

> **''நாதர்முடி மேல்இருக்கும் வெண்ணிலாவே அங்கே**
> **நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணி லாவே''**

என்று வள்ளலார் பாடுவர். பாவலர் இவ்வினாவிற்குச் சிறப்பாக விடையளித்தார். நீங்கள் குறிப்பிடும் பாடல் அருட்பாவில் ஆறாம் திருமுறையில் வெண்ணிலாவை முன்னிலைப்படுத்திப் பாடப் பட்டதாகும். தாங்கள் குறிப்பிடுகிறபடி பாடல் இருக்க முடியாது. நீங்கள் கூறுவது அச்சுப் பிழையாக இருக்கலாம். 'நாதமுடிமேல்' என்றுதான் இருக்க வேண்டும்; நாதமுடி மேல் என்பது சைவ சித்தாந்தக் கருத்து. முப்பத்தாறு தத்துவங்களில் நாத தத்துவத்தின் மேல்நிலையைக் குறிப்பது சிவானந்தப் பெருவெளி என்றும் சச்சிதானந்தக் கடல் என்றும் குறிக்கப் பெறும் பரவெளியாகும். வள்ளலார் அதனை அடைய விரும்பியே பாடுகின்றார். குறிப்பிட்ட பாடலுக்கு முன் பின்னே வருகின்ற கண்ணிகளும் இக்கருத்தை வெளிப்படுத்துவன என்று அவ்விரண்டு கண்ணிகளையும் எடுத்துக்காட்டினார். அக்கண்ணிகளில் 'தன்னை யறிந்து இன்புற ஒரு தந்திரம் சொல்ல வேண்டும்.' எனவும், 'சச்சிதானந்தக் கடலில் தாழ்ந்து விழ வேண்டுகின்றேன்' எனவும் வெண்ணிலாவை நோக்கி வள்ளலார் வேண்டுகிறார். ஆகவே 'நாதமுடிமேல்' என்று தான் பாடியிருக்க வேண்டும் எனவும் 'நாதர் முடிமேல்' என்பது அச்சுப்பிழை எனவும் எடுத்து விளக்கினார். வாழ்நாளெல்லாம் திருவருட்பாக்களைக் கற்றறிந்த பெருமக்களும் கூடக் கேட்டு வியக்கும் வண்ணம் பாவலர் தந்த விளக்கம் அவையோரைப் பிணித்தது; ஆரவாரம் எழுந்தது.

## தமிழின் தாயகம்

சென்னையிலிருந்து வந்த பிறகு பாவலர் ஒரு நாள் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குச் சென்றார். பாண்டித்துரைத்தேவர் அவர்களால் நிறுவப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனரும் பழுத்த தமிழ்ப் புலவர்களும் குழுமியிருந்தனர். அங்கிருந்த தொல்காப்பிய உரையாசிரியர் சோழவந்தான் அரசஞ்சண்முகனார் பாவலரை நோக்கி உங்களுக்கு எத்தனை திருவருட் பாடல்கள் நினைவில் இருக்கும் எனக் கேட்டார். அதற்குப் பாவலர் ஓரளவு நினைவிருக்கும் என வழக்கமான பணிவோடு விடை தந்தார். உடன் அரசஞ் சண்முகனார் இராமலிங்கர் மகாதேவ மாலையில் எழுபத்தொன்பதாவது பாடலை நினைவுபடுத்த முடியுமா? எனக் கேட்டார். உடன் பாவலர் 'உய்குவித்து மெய்யடியார் தம்மை யெல்லாம்' எனத் தொடங்குகின்ற பாடல் முழுவதையும் பாடிக்காட்டி விட்டார். அது கேட்ட அரசஞ் சண்முகனார் என்ற அருந்தமிழ்ப்புலவர் அளப்பரிய வியப்படைந்தார். பக்கத்திலிருந்த பேராசிரியர் நாராயண அய்யங்கார் அப்பாடலில் 'கு' எப்படி வந்தது எனக்கேட்டார்? அது கேட்ட பாவலர் உடன் 'கு' என்பது சாரியை என்றார். இதனைக் கேட்டு வியந்த புலவர் பெருமக்கள் ஒவ்வொருவரும் விடுத்த வினாக்களுக்கெல்லாம் பாவலர் பொருத்தமாக விடையளித்தார்.

தமிழ்விருந்தைத் தமை மறந்து உண்டு கொண்டிருந்த தமிழ்ச் சங்கங்கண்ட பாண்டித் துரைத்தேவர் அவர்கள் வியந்து பாவலரைப் பாராட்டித் தாங்கள் 'தமிழின் தாயகம்'; 'அவதானிகளின் அரசர்' எனக் கூறிப் புகழ்ந்தார். தமிழ்ச் சுரங்கத்தைத் தமிழ்ச்சங்கங்கண்ட காவலர் பாராட்டியது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை என்பதைப் பாவலரை அறிந்தோர் உடன்படுவர்.

---

## அடிக்குறிப்பு

1. குமரேசப்பிள்ளை.சி., செந்தமிழ் வளர்த்த செய்குத்தம்பி, குமரன் பதிப்பகம், சுசீந்தரம், 1986, பக்.27
2. மு.நூ. பக்.27
3. சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் நினைவு மலர், 1961, பக்.26

4. குமரேசப்பிள்ளை,சி., செந்தமிழ் வளர்த்த செய்குத்தம்பி, குமரன் பதிப்பகம், சுசீந்திரம், 1986, பக்.124,125

5. சிவஞானம், ம.பொ., வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1971, பக்.355

6. நன்னூல், சூத்திரம்-10

# சதாவதானக் கலைஞர் பாவலர்

அவதானம் என்பது நினைவாற்றலைக் குறிக்கும். தமிழ்நாட்டில் நினைவாற்றல் மிக்க பல்துறை அறிஞர் பலரை இனங்காட்டிய பழைய கலை அவதானக் கலையாகும். அக்கலை இன்று அருகி விட்டது. பாவலர் காலத்தில் தமிழ் உலகில் இக்கலை பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தது. ஒரு செய்தியை நினைத்தால் மறு செய்தியை மறந்துவிடும் நிலையில் இக்கால மக்கள் உள்ளனர். இத்தகு உலகில் ஓரறிஞரது அனைத்து உறுப்புக்களும் ஒரே நேரத்தில் ஒவ்வொரு செயலையாற்றப் பலதுறை வினாக்களுக்கு விடைகளை மனத்தில் அமைத்து வினா விடுத்தவர் பக்கத்தில் வரும்போது விடையளிக்கின்ற அவதானக் கலை வல்லோரும் தமிழகத்தில் பலர் இருந்தனர். இன்றும் எங்கோ ஒரிருவர் இருக்கின்றனர். திருக்குறள் நூலில் மட்டும் இன்றும் அவதானக் கலை தமிழகத்தில் நிலைத்திருக்கிறது என்று சொல்லலாம்.

செய்குத்தம்பிப் பாவலர் அவர்கள் இக்கலையில் வல்லவராக இருந்து இன்று வரை சதாவதானி என்ற பெயரோடு தமிழ் உலகில் புகழ் வாழ்வு வாழ்ந்து வருகிறார். பாவலரின் இறுதிக்காலத்தில் இன்றும் அக்கலை வன்மை தங்களிடம் நிலைத்திருக்கிறதா என்று ஒரு தமிழ்ப் புலவர் கேட்டபோது சொல்விளையாட்டில் தேர்ந்த பாவலர் நான் 'சதா அவதானியே' என்று கூறினார். முதிர்ந்த நிலையிலுங்கூடத் தம்மால் அவதானம் நிகழ்த்த முடியும் என்று நம்பியவர் பாவலர். தமிழகத்தில் சதாவதானம் ஆற்றிய பெருமை பாவலருக்கு மட்டுமே உண்டு என்று கருதுவோரும் உளர். பாவலருக்கு முன்னரும் சதாவதானம் நிகழ்த்தியவர் இருந்தனர் என்று சொல்வோரும் உளர். தஞ்சை சுப்ரமணிய அய்யர் அவர்கள் பாவலர் சதாவதானம் நிகழ்த்திய போது கலந்து கொண்டவர். அவரும் கதிர்வேல்பிள்ளை அவர்களும் சதாவதானம் செய்துள்ளனர் என்போரும் உளர். நூறு வகைகளில் அவதானம் ஆற்றவல்லவர் சதாவதானி எனப்பெயர் பெறுவார். பதினாறு வகைகளில் அவதானம் செய்வோர் சோடசதாவதானி என்றும் பத்துவகை அவதானம் செய்வோர் தசாவதானி என்றும் எட்டு வகை அவதானம் செய்வோர் அட்டாவதானி என்றும் அழைக்கப் பெறுவர்.

## அவதானத்தில் ஆர்வம்

பாவலர் தொடக்கத்தில் அவதானக் கலையில் ஆர்வம் இல்லாதவராகவே இருந்தார். சென்னையில் வாழ்ந்த காலத்தில் முதுகுளத்தூர் கல்யாண சுந்தரம் அவர்கள் பாவலரைச் சந்திக்க வந்தார். அவரோடு உரையாடிக் கொண்டிருந்தபோது பாவலர் 'விறலி விடு தூது' என்ற நூலில் இடம் பெறும் பாடலைக் கூறி அவதானம் ஒரு புரட்டுக்கலை என்று கருதப்பட்டதை எடுத்துக் காட்டினார். இருப்பினும் அவர் ஆற்றிக்காட்டிய அவதானம் பாவலர் உள்ளத்தில் அக்கலை பற்றிய மதிப்பை உண்டாக்கியது. அடுத்த நாளும் அந்த நண்பர் வந்து அவதானம் ஆற்றிக் காட்டியபோது பாவலரும் தம் திறமையைக் காட்ட அவர் வியப்பும் மலைப்பும் ஒரு சேரப் பெற்றார். பாவலரோ முதுகுளத்தூர் கல்யாணசுந்தரம் பிள்ளையவர்களுடைய உள்ளத்தை நோகச் செய்து விட்டோமோ என்று வருந்தனார். அன்று முதல் பாவலர் தம் அலுவலகத்தில் ஓய்வு நேரத்தில் அவதானக் கலைப் பயிற்சியில் ஈடுபட்டார்.

## சோடசாவதானி

பாவலர் சில நாட்களில் நாகர்கோவில் திரும்பினார். அவதானக்கலை பாவலருக்குக் கைவந்திருந்தது அறிந்த சான்றோர்கள் வேண்டுதலுக்கிணங்கப் பாவலர் சோடசாவ தானம் ஆற்றினர். அப்போது கோட்டாறு வந்திருந்த ஆற்றங் கோயாத்தங்கள் என அழைக்கப்பட்ட பெரியார் தலைமை யேற்றார். இறைநாம உச்சரிப்பு, கைப்பணி, தலைவரோடு உரையாடல், இலக்கியம், இலக்கணம், இருமுறை கேட்டு வெண்பாவை ஒப்புவித்தல், கண்டப்பத்திரிகை, கவிபாடல், கண்டத்தொகை, கிழமை கூறுதல், நூறு நிரப்புதல், சுவைப்புலன் அறிதல், ஒலி வேறுபாடு உணர்தல், நெல் எறிதல், கல் எறிதல், சீட்டாடல் எனப் பதினாறு வகைகளில் பாவலர் தம் திறமையை வெளிப்படுத்தினர்.

நாக்கு மெய்ஞ்ஞானநாதா எனக் கூறிக்கொண்டேயிருக்க, லாடச்சங்கிலியைக் கை இயக்கிக் கொண்டேயிருக்க, கால்கள் நடந்து கொண்டேயிருக்க, தலைவரோடு ஒரு குறிப்பிட்ட பொருளில் தொடர்ந்து இடைவேளைகளில் உரையாடிக் கொண்டேயிருக்க, அவையோர் வினாக்களுக்கு அவரவர் பக்கத்தில் வரும்போது பாவலர் விடையளித்துக் கொண்டே யிருந்தார். பாவலரது புலமை விளையாட்டு அவருக்கேயுரிய

தனிப்பாணியில் தொடர்ந்து கொண்டேயிருந்தது. ஒருவர் இலக்கியத்தில் வினாக் கேட்பார்; மற்றொருவர் இலக்கணத்தில் வினாக் கேட்பார்; வேறொருவர் இறுதியடி கொடுத்தோ வேறு வகையிலோ கவிபாட வேண்டுவார்; பெரும்புலவர் ஒருவர் கண்டப் பத்திரிகை கொடுப்பார்; மற்றொருவர் ஆயிரம் ஆண்டுகளுக்கு உட்பட்ட ஆண்டு, மாதம், நாள் கூறிக் கிழமை வினாவுவார். ஒருவர் கல்லையும், மற்றொருவர் நெல்லையும் முதுகில் எறிந்து வருவார்; இறுதியில் அவதானி எத்தனை கற்கள், எத்தனை நெல்மணிகள் எறியப்பட்டன என்று கூற வேண்டும். பெருந்தமிழ்ப் புலவர்கள் அவையில் கலந்து கொண்டு வினாக்களைத் தொடுத்து விடை கேட்டு வியந்தனர். அவைத் தலைவரும் பாவலரது ஆசான் சங்கரநாராயண அண்ணாவியாரும் அருந்தமிழ்ப்புலவர் பலரும் அவதானத்தில் கலந்து கொண்டு 'சோடசாவதானி' எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர், மாலைகள் குவிந்தன.

## சதாவதானி

பிறந்த ஊரில் சில நாட்கள் தங்கியிருந்த பாவலர், மீண்டும் சென்னை வந்தார். சோடசாவதானியாகப் பாவலர் திரும்பி யிருக்கிற செய்தியறிந்து இட்டா பார்த்தசாரதியவர்களும் நண்பர் குழுவினரும் வேண்டிக் கொண்டபடி சென்னையிலும் அவதானம் நிகழ்த்தப் பாவலர் உடன்பட்டார். சுற்றறிக்கை தயாரானது. அதனைப் பார்த்த நண்பர்கள் சதாவதானம் செய்தலே சிறப்பு என எடுத்துக் கூறினர். தயங்கிய பாவலர் நண்பர்களின் விருப்பத்திற்கு இணங்கினார்.

1907-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 10-ஆம் நாள் சென்னை விக்டோரியா மண்டபத்தில் பாவலருடைய சதாவதானம் நிகழ்ந்தது. அவைக்குக் கண்ணபிரான் முதலியார் தலைமை யேற்றார். கம்பராமாயண முதல் உரையாசிரியர் மகாவித்வான் காஞ்சி இராமசாமி. தஞ்சாவூர் சதாவதானி சுப்ரமணிய அய்யர், புலவர் கா.நமசிவாய முதலியரார், திரு.வி.க., டி.கே.சி., பத்திரிகை நிருபர்கள், பெருமக்கள் பலர் குழுமியிருந்த கலை விழாவாக அன்றைய நிகழ்ச்சி நடைபெற்றது. கோட்டாற்றில் நிகழ்த்தப் பெற்ற பதினாறு கலைவகைகளோடு ஒலி எண்ணம், தொகைகூறல், உடுகூறல், நாள்கூறல், திங்கள் கூறல், ஆண்டு கூறல், வயது கூறல், நினைத்த எண் கூறல், பதினைந்து நாயும் புலியும் விளையாடல் என்ற ஒன்பதும் சேர்த்து அவதானம் தொகையால் இருபத்தைந்தும் வகையால் நூறுமாக அமைந்தது.

## அவதானத்தில் வெளிப்பட்ட அரும்புலமை

சதாவதானிப் பாவலர் அவர்கள் சதாவதானம் ஆற்றியபோது வினா தொடுத்த அறிஞர் பெருமக்கள் பாவலரது தமிழ்ப்புலமை வெளிப்படும் வகையில் பலவினாக்களை வினாவினர். பெரும்பாலும் பாவலரோடு உடனிருந்த நண்பர்- கம்பராமாயணம், தஞ்சைவாணன் கோவை ஆகிய நூல்களின் உரையாசிரியர் - மகாவித்துவான் இராமசாமிநாயுடு அவர்கள் வலியுறுத்தியதின் பேரிலேயே பாவலர் சோடசாவதானம் (பதினாறு வகைக்கலை) ஆற்றாது சதாவதானம் ஆற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவையோருள் ஒருவர் 'விராடனையே பெண் எனலாமே' என்ற ஈற்றடிக்கு வெண்பாப் பாட வேண்டினார். மகாபாரதத்தில் வருகின்ற முரடனான விராடனைப் பெண் எனலாம் என்பது வேடிக்கையான தலைப்பு. பாவலரோ அத்தலைப்பை ஏற்றுத்தம் தமிழ்ப் புலமையைக் காட்டினார். எப்பொழுதும் கணவனையே மதிக்கின்ற 'சொல் தவிராள் தனைப்பெண் எனலாம்' எனப் பொருள் தோன்றும்படி வெண்பாப் பாடினார். மூன்றாவது அடியின் இறுதிச் சீரில் 'சொற்ற' எனவும் இறுதியடியில் 'விராடனையே பெண்ணென லாமே' எனவும் பாடி வெண்பாவை முடித்தார். சொற்ற விராடனையே என்பதனை சொல் தவிராள் தனையே எனப் பிரித்துப் பொருள் கொள்க.

## கண்கெட்ட பிறகு கண்ட காட்சி

மற்றொரு வினாவாளர் 'மாமனுக்குக் கந்தன் மகன்' என்ற ஈற்றடியில் ஒரு வெண்பாப் பாடித் தருமாறு சிக்கலான வினாவைத் தந்தார். பாவலரோ அற்புதமாகச் சிக்கலை அறுத்தெறிந்தார். திருமாலின் மகனாகிய மன்மதனுக்கு முறைமையால் மாமனாகிய சிவபெருமானுக்குக் கந்தன் மகன் என்று பொருள் வரும்படி வெண்பாப் பாடித் தந்தார். அவையோர் வியந்தனர். மற்றொரு அன்பர் எழுத்தெண்ணிப் பாடப்படுகின்ற அரிய கட்டளைக் கலித்துறைப் பாடலைப்பாடுமாறு வேண்டினார். அப்பாடலும்

**'கண்கெட்ட பின்னென்றுங் காணாத காட்சியைக் கண்டனரே'**

என்னும் படியாக விந்தையான விதத்தில் அமைய வேண்டுமென வேண்டினார். கண்கெட்ட பிறகு எவ்வளவு அற்புதமான காட்சி யாயினும் அதனை எப்படிக் காண்பது? சதாவதானியோ தம் வித்தகத் திறத்தால் கண்கெட்ட பிறகு காட்சி கண்ட அற்புதத்தை இலக்கிய மணம் தோன்றப் பாடிக்காட்டினார்.

## திண்ணப்பர் கண்ணப்பர் ஆனார்

பெரியபுராணம் வழங்குகின்ற கண்ணப்ப நாயனார் வரலாறு இவ்வற்புத நிகழ்ச்சியைக் காட்டுகின்றது. சிவபெருமான் இடக்கண்ணில் குருதி வடிவதைக் கண்ட கண்ணப்பர் தம் இடக்கண்ணைத் தோண்டி இறைவனது முகத்தில் அப்பினார். அது காரணமாகவே திண்ணப்பராக இருந்தவர் கண்ணப்பராயினர் என்பது வரலாறு. மீண்டும் இறைவனது வலது கண்ணிலும் குருதிவடியக் கண்ட கண்ணப்பர் தம் வலக்கண்ணையும் தோண்டி இறைவனுக்கு அர்ப்பணித்தார். அக்கண்ணையும் தோண்டிய பிறகு இறைவனது வலக்கண் இருக்கும் இடத்தைக் காணுந்திறம் இல்லாது போய்விடும் என்ற அச்சத்தால் கண் அடையாளம் தெரிய இறைவனது முகத்தின் மேல் தனது செருப்பணிந்த காலை அடையாளமாக வைத்துக் கொண்டார் எனப் பார்க்கிறோம். இந்நிகழ்ச்சிகளில் எல்லாம் வெளிப்படுவது கண்ணப்பரின் களங்கமற்ற இறைப்பேரன்பே என்பது வெளிப்படை. பாவலர் கண்ணப்பரது வரலாற்று நிகழ்ச்சியைப் பாடலில் கூறி இரண்டு கண்களையும் இழந்த பிறகு கண்ணப்பர் இறைவனது திருக்காட்சியைக் கண்டுகளித்த அற்புத நிகழ்ச்சியை வெளிப் படுத்தினார். கண்ணப்பர் போன்ற கறையற்ற அன்பைப் பெறவில்லையேயென்று பிற இறையடியார்களும் ஏங்கியதாகச் சைவ இலக்கியங்கள் பாடும். சைவ இலக்கியம் பேசும் உண்மையைத் தமது பாடலின் இறுதியடியிலே பாடிய நல்லிணக்கப் பண்பு கோடி பெறும்.

## நூற்றியோராவது அவதானம்

பாவலர் சதாவதானத்தில் காட்டிய புலமைக் கூறுகளை விரிக்கின் பெருகும்; அளவஞ்சி மூன்று நுட்பமான இடங்களை மட்டும் எடுத்துக் காட்டினோம். நிகழ்ச்சி முடிந்த பிறகு புலவோர் வாழ்த்திப் புகழ்ந்தனர். தலைவர் 'சதாவதானி' எனப் பட்டஞ் சூட்டி மகிழ்ந்தார்; தஞ்சை சுப்ரமணிய அய்யர் (தாமே ஒரு அவதானியாக விளங்கியவர்) 'மகாமதி' எனப் பட்டஞ்சூட்டி மகிழ்ந்தார். நிகழ்ச்சி முடிந்த பிறகு இட்டா பார்த்தசாரதி அவர்களுடைய குதிரை வண்டியில் ஏறிப்புறப்பட்டபோது சதாவதானி ஆற்றிய நூற்றியோராவது அவதானம் நம்மைப் பெருவியப்பில் ஆழ்த்துகிறது.

குதிரை வண்டி சென்று கொண்டேயிருந்தது. பாவலரோ நுகர்புலனுக்கு வேலை கொடுத்தவராகப் 'பாம்பு பாம்பு' என்றனர்.

வண்டி சோதிக்கப்பட்ட பிறகு பாம்பு இல்லையென நினைத்துப் பயணம் தொடர்ந்தது. பாவலரோ மீண்டும் 'பாம்பு பாம்பு' என்றார். வியப்போடு வண்டி நிறுத்தப்பட்டது. ஓட்டுநர் வண்டியின் கீழ்ப்பக்கத்தில் உள்ள புல் வைக்கப்படும் வலையில் தேடினர். புல்லுக்கு உள்ளிருந்து நல்ல பாம்பொன்று சீறிப் புறப்பட்டு நெளிந்து சென்று நீங்கியது. வியப்பு மிக்க இந் நிகழ்ச்சியைப் பார்த்தவர்கள் வியந்தனர். பாவலர் அமைதியாகச் சதாவதான நிகழ்ச்சியில் நான்கு புலன்களுக்கு மட்டுமே தேர்வு நடந்தது; நுகர்புலனைக் கண்டறியும் நிகழ்ச்சி இல்லாமல் இருந்தது. அக்குறை நீங்க இறைவனே இந்த நூற்றியோராவது அவதானத்தை நிகழ்த்திக் காட்டியிருக்கிறான் என்று கூறினார்.

## செந்தமிழ்ச் செல்வன் செய்குத்தம்பிப் பாவலன்

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள் சதாவதானி மகாமதி செய்குத்தம்பிப் பாவலர் அவர்களை 'ஒரும் அவதானம் ஒரு நூறு செய்து இந்தப் பாரில் புகழ் படைத்த பண்டிதன்' எனப் புகழ்ந்தார். 'செந்தமிழ்ச் செல்வன்' என்று சிந்தை மகிழ்ந்து பாடினார். வேறொரு கவிஞரோ 1980-ஆம் ஆண்டில் நாகர் கோவிலில் பாவலர் நினைவரங்கில் நிகழ்ந்த கவியரங்கில் 'நூற்றோரவதானி' எனப் பாடிப் பாராட்டினார்.1 தமிழகத்தில் சதாவதானி என்ற புகழுக்குரியவர் பாவலர் அன்றி வேறு யாரும் இருக்கிறார்கள் என்று சொல்வோருக்கு நூற்றோரவதானம் செய்த பாவலர் ஒருவர் மட்டுமே என்று விடையளிப்பது போல இந்நிகழ்ச்சி அமைந்திருப்பது அற்புதமல்லவா!

---

## அடிக்குறிப்பு

1. குமரேசப்பிள்ளை, சி., செந்தமிழ் வளர்த்த செய்குத்தம்பி, பக்.84

# மனநலமும் நாநலமும்

சொற்கள் நாவிலிருந்தே பிறக்கின்றன; சொற்களின் பிறப்பிடம் உள்ளம் அன்று என்றாலும் உள்ளத்து உணர்வுகளே நாவழி வெளிப்படுகின்றன ஆதலின் உள்ளத்திற்கும் சொற்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' எனப்பாடுவார் வள்ளலார். 'உள்ளத்து உள்ளது கவிதை; உணர்ச்சி உருவெடுப்பது கவிதை; தெள்ளத் தெளிய தமிழில் உண்மை தெரிந்துரைப்பது கவிதை' எனப்பாடுவார் கவிமணி. இப்பாடல்கள் உள்ளத்திற்கும் சொற்களுக்கும் உள்ள உறவை வெளிப்படுத்துவன.

சொல் வேறுபாடும் செயல் வேறுபாடும் கொண்டவர் உறவு கனவிலும் கருதக்கூடாது என்பார் திருவள்ளுவர். இவ்வள்ளுவம் உள்ளம், சொல், செயல் மூன்றுக்கும் உள்ள உறவை வெளிப் படுத்தும். உள்ளம் எண்ணுவதும் சொல் உரைப்பதும் செயல் விளைப்பதும் ஒன்றுபடும்போது தான் உயர்ந்த பண்பாடு உருப் பெறுகிறது. உள்ளத்திற்குச் சொல் வேறுபட்டாலும் சொல்லுக்குச் செயல்வேறுபட்டாலும் அது பிழைபாடாகவே கருதப்படும்; அதுவே பண்பாட்டுக் குறைவு ஆகிவிடும்.

பாவலர் உள்ளம் உயர்ந்திருந்தது; உணர்ச்சி ஒழுங்கு பட்டிருந்தது; உள்ளத்தின் உணர்ச்சி வெளிப்பாடாகிய சொற்களில் நலமும் நயமும் நடம்புரிந்தன; ஆகவே செயல்பாடு சிறந்திருந்தது. பெருமானார் நபிகள் நாயகம் போதித்த நற்பண்புகளிலும் திருவள்ளுவர், கம்பர் முதலான தமிழ் இலக்கியச் சான்றோர் களிடத்திலும் பயிற்சியிருந்ததால் பாவலரது உள்ளம், சொல், செயல் மூன்று ஒருமைப்பட்டு உயர்ந்து ஓங்கியிருந்தன. இவ் வுண்மை காட்டும் எண்ணற்ற பண்பொழுக்கங்களில் பானைச் சோற்றுக்கு ஒரு சோறு எடுத்துப் பதம் பார்ப்பது போல ஒரு நிகழ்ச்சி மூலம் உணர்ந்து பாராட்டுவோம்.

## மனச்சாட்சிக்கு மதிப்பளித்த பாவலர்

பாவலரின் உறவினரும் நண்பருமாகிய ஒருவர் கடன் பெறச் சென்றபோது பாவலர் கையொப்பமிட்டால் கடன் தருவதாகக் கூறப்பட்டது. அச்செய்தி கூறக்கேட்ட பாவலரும் உடன்பட்டு

ஒப்புதல் கையெழுத்துத் தந்தார். நீண்ட காலமான பிறகும் கடன் திருப்பித் தரப்படவில்லை. கடன் கொடுத்தவர் வழக்குத் தொடுத்தபோது கடன் வாங்கியவர் உறவினர் என்ற உரிமையைப் பயன்படுத்திப் பாவலரிடம் வந்து தொகை வழங்கப்பட்ட போது தாம் பார்க்கவில்லை என்று பாவலர் வழக்கு மன்றத்தில் உரைக்குமாறு வேண்டிக் கொண்டார். இது கேட்ட பாவலர் சீற்றம் மிகக் கொண்டார். தொகை கொடுத்ததைக் கண்ணால் காணவில்லை என்றாலும் கொடுக்கப்பட்டது உண்மை எனத்தாம் அறிந்திருப்பதால் மனச்சாட்சிக்கு மாறாக வழக்கு மன்றத்தில் கூற மறுத்துவிட்டார். மேலும் கடன் வாங்கியவரிடம் வலியுறுத்தித் தம் நாவன்மையால் அவர் கருத்தைவென்று வழக்கைத் திரும்பப் பெறவும் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்கவும் ஆவன செய்தார்.[1]

நபிகள் நாயகம் எல்லா அறங்களையும் இனிது விளக்கினர் என்றாலும் பெற்ற கடனைத் திருப்பித் தர மறுப்பது மிகப் பெரிய குற்றமாகும் என்றார்கள். திருப்பிக் கொடுக்கும் ஆற்றல் இருந்தும் கடனைத் திருப்பிக் கொடுக்காதவரை இறைவன் மன்னிப்பதே யில்லை என்றார்கள். இவற்றையெல்லாம் கற்றுணர்ந்த பாவலர், கல்வி பண்பட்ட ஒழுக்கத்தை வழங்க வேண்டும் என்பதற்குச் சிறந்த சான்றாக விளங்கினார். ஆதலின் அவர்களுடைய உள்ளமும் சொல்லும் செயலும் ஒன்றுபட்டு நின்று உயர்ந்த ஒழுக்கத்தை வலியுறுத்தி நிற்கின்றன. இன்றுவரை பாவலர் நினைத்துப் போற்றப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

## ஆசிரியரிடம் நன்றியுணர்வு

கல்விக்கண் தந்து ஒழுக்க உயர்வைக் கற்றுத் தந்து வழிகாட்டிய ஆசானை நன்றியோடு நினைவு கூர்ந்து பாராட்டுவது நபிகள் நாயகம் போதித்த நடைமுறையாகும். இதன் காரணத்தாலேயே இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியில் (சூஃபிநெறி) ஆசானாகிய 'செய்கு'வைப் போற்றிப் பாராட்டி உதவும் வழக்கு நடைமுறைக்கு வந்தது. பாவலர் கற்ற தமிழ் இலக்கியங்களும் இப்பண்பை உயர்த்திக்காட்டின. ஆகவே பாவலர் தம் இயல்பில் இப்பண்பு நிலைபெற்று அவரது ஆசான் சங்கரநாராயண அண்ணாவியாரிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொள்ளச் செய்தது. மேலும் பாவலர் வறுமை காரணமாகப் பொருள் ஏதும் பெறாமலே கல்வி கற்றுத்தந்த ஆசானைப் பாவலர் எப்போதும் மறந்ததில்லை. தேவைப்படும் போதெல்லாம் தம்மால் இயன்ற அளவு தம் ஆசானுக்குப் பொருளுதவியும்

செய்து வந்தார். அத்தோடு நில்லாது பாக்கியம் பண்டாரம் அவர்களிடம் தம் ஆசிரியருக்கு உதவுமாறு சீட்டுக்கவியும் போக்கினார். பாவலர் தமிழால் பெரிதும் கவரப்பெற்ற அச் செல்வர் சங்கரநாராயணருக்கு மாத ஊதியம் தந்து போற்றினார். அடிக்கடி ஆசிரியர் நலம் உசாவிக் கவிதை போக்கும் இயல்பின ராகவும் பாவலர் இருந்தார்.

## பழமொழிக்கு வழங்கிய புத்துரை

'அறுத்தால் கட்டு' என்பது ஒரு தமிழ்ப் பழமொழி. தமிழகத்தில் வேளாண்மைக்கு உயிர்நாடியாக இருந்த இப் பழமொழிக்குப் புத்துரை வழங்கி விதவைப் பெண்களின் துயர் துடைக்க முந்தியது பாவலரது தூய உள்ளம். 1400 ஆண்டுகளுக்கு முன்பே விதவைப் பெண்களின் கண்ணீர் துடைத்த காவலர் நபிகள்நாயகம் அவர்கள். பாவேந்தர் பாரதிதாசன் போன்ற பிற்காலத் தமிழ்ச் சீர்திருத்தக்காரர்கள் எல்லாம் விதவை மணத்தை ஆதரித்துப் பேசினர். டாக்டர்.மு.வ. உட்படத் தமிழ்ப் புதின ஆசிரியர் பலர் விதவை மணத்தை வரவேற்று எழுதினர். 'அறுத்தால் கட்டு' என்ற வேளாண்மொழி பெண் வாழ்வை இழந்தால் மீண்டும் மணவாளனைக் கட்டிக்கொள்ள அனுமதி தருவதாகும் எனப் பேசினார் பாவலர்.

## நானிலம் போற்றும் நாவன்மை

பெறத்தகும் நலங்களுள் எல்லாம் அரியது நாநலமே என்பார் திருவள்ளுவர். உலக மக்கள் வேறு எந்த வகையில் உயர்வு பெற்றிருந்தாலும் நாவீறு பெற்ற நல்லோருக்கு அவர்கள் ஈடாக மாட்டார்கள் என்பது வள்ளுவர் கருத்து. மகாமதிப் பாவலரை எந்நேரமும் இனிப்புப்பண்டத்தை மொய்க்கும் ஈக்களைப்போல அறிஞர் பெருமக்கள் சுற்றிச் சூழ்ந்து கொண்டு தமிழ்ச் சுவையை மாந்தி மகிழ்ந்து கொண்டேயிருந்தார்கள். புலவர் குழு பொழுது விடிந்ததும் பாவலரை நாடி ஓடிவந்து விடுவது நாள்தோறும் வாடிக்கை. இத்தகு நயத்தகு நிகழ்ச்சிகள் எண்ணில. அவற்றுள் ஒரு சிலவற்றால் பாவலர் கொண்டிருந்த நானிலம் போற்றும் நாவன்மையைக் காண்போம்.

முன்னரே கதிர்வேலருக்கு எதிர்வேலர் எனப் பாவலர் பாராட்டப்பட்டதைச் சுட்டிக்காட்டியுள்ளோம். ஆறுமுக நாவலர் காலத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் அருட்பாவை மறுத்துப் பிரச்சாரம் செய்தவர் கதிர்வேல் பிள்ளையவர்கள். அவருடைய மாணவர் திரு.வி.க. அவர்களும் தம் ஆசிரியர் காரணமாகவே

அந்த விவாதத்தில் பங்கு பெற்றார். வள்ளலாரிடத்துப் பெரு மதிப்புக் கொண்டவர். பாவலரையும் அவர்தம் புலமையையும் போற்றிப் புகழ்ந்துரைத்தவர். என் குழு கதிர்வேல்பிள்ளை இறந்து விட்டதால் தமிழ் மரபுப்படி பாவலர் தாம் என் குரு ஆவர் என்று திரு.வி.க. குறிப்பிட்டார். திரு.வி.க. அவர்களுக்கு மணிவிழா கோட்டாற்றில் கொண்டாடப் பட்டபோது விழாவுக்குத் தலைமையேற்ற பாவலர் திரு.வி.க. அவர்களின் பண்பு நலன்களைப் பாராட்டிப் பேசினார்.

## பாவலரும் ஜீவானந்தமும்

பொதுவுடமைப் பேச்சாளரும் பொதுவுடமைக் கருத்துக் களின் விரிவுரையாளருமாகிய ஜீவானந்தம் அவர்கள் லெனின், மார்க்ஸ் போன்ற அறிஞர் பெருமக்களையும் உருவாக்கிய நாட்டையும் புகழ்ந்து பேசிய பெருமகனார். பாவலர் வாரி வழங்கிய தமிழ் அமுதினைப் பருகி வருவது அவரது வழக்கமாக இருந்தது. அவர்கள் கலந்துரையாடலில் இலக்கியமும் அரசியலும் கலந்து கவின் செய்யும். ஒரு முறை ஜீவா அவர்களைப் பார்த்து மார்க்ஸ், லெனின் ஆகியோருக்கும் முன்னோடியாகத் தமிழ்நாட்டில் வாழ்ந்தவர் கம்பர் என்று குறிப்பிட்டுப் பாடலையும் சொல்லிக்காட்டினார்.[2] கோசல நாட்டு வண்மையையும் திண்மையையும் விளக்கும் பாடல் அது. அந்நாட்டில் பொய்யில்லாமையால் உண்மையில்லை; பல்துறைக் கல்வியும் கேள்வியும் ஓங்கி நிற்பதால் அறியாமையில்லை என்று ஒரு நாடு அமைய வேண்டிய முறையைக் கம்பர் காட்டிய பாடல். இப்பாடலைப் பாவலர் கூறிய போது ஜீவா அமைதியுடன் பாவலர் சொற்களையே பருகிக் கொண்டிருந்தார். பிற்காலத்தில் கம்பன் காப்பியத்தில் ஜீவா பெரும்புலமை பெறுதற்கும் தமிழ் நூல் செய்தற்கும் கம்பன் கருத்துக்களை இலக்கிய மேடைகளில் முழங்கிப் புகழ் ஈட்டுவற்கும் பாவலரோடு தொடக்க காலத்தில் கொண்டிருந்த தமிழ்த் தொடர்பே காரணம் என ஜீவானந்தம் கூறி மகிழ்வார். விடிய விடிய அரசியல் கலந்த இலக்கியம் பேசிப் பாவலரோடு பழகி மகிழ்கின்ற வாய்ப்பு கவிஞர் ஜீவா அவர்களுக்குக் கிடைத்த அரிய பேறாகும்.[3]

## அஞ்சி லம்பதில் ஒன்றறி யாதவன்

கம்பன் காப்பியத்தில் சுக்ரீவன் குறித்தபடி வராமையால் சினங்கொண்டு இராமன் இலக்குவனிடத்தில் பேசும்பாடல் ஒன்று உண்டு. ''அஞ்சி லம்பதி லொன்றறி யாதவன்'' என்பது அப்பாடலின் மூன்றாவது அடி. சினங்கொண்ட இராமன்

சுக்ரீவனைப் பழிக்கின்ற இடம் இது. இந்த ஓரடிக்கு ஏழு பொருள்களைப் பாவலர் கூறி விளக்கினார். சுக்ரீவன் அஞ்சில் ஐம்பதில் ஒன்று அறியாதவன் என்று சினந்து கூறும் தொடர் மூலம் கம்பன் காப்பியத் தொடர்புடைய பல்வகைச் சிறப்புக்களும் இராமபிரானது வலிமை, நேர்மை முதலிய பண்புகளும் வெளிப் படுமாறு ஏழுவகையில் உரைகண்ட பெருமை பாவலருக்கு உண்டு.

அஞ்சில் அம்பதில் எனப் பிரிமொழிச் சிலேடை நயங்காட்டிச் சுக்ரீவன் தன் நிலையையும் இராமனது நிலையையும் அறியாத வனாக இருக்கிறான் என்று இராமன் கூறியதாகப் பாவலர் காட்டு கின்றார். ஐந்து, ஐம்பது என இருவகைப் பொருளும், அம் சிலம்பு என ஒரு வகைப் பொருளும் அம்சில் அம்பு என ஒருவகைப் பொருளும் அஞ்சு இல் அம்பு என ஒருவகைப் பொருளும் காட்டித் தம் நுண்மாண் நுழைபுலத்தை நாட்டியவர் பாவலர்.

## பாவலரும் நாவலரும்

1938-ஆம் ஆண்டில் நாவலர் சோமசுந்தர பாரதியார் கோட்டாற்றில் திருக்குறள் சொற்பொழிவு நிகழ்த்தினார். இலக்கியக் கூட்டத்திற்குத் தலைமையேற்றவர் மகாமதிப் பாவலர். அக்கூட்டத்தில் ஒரு குறளுக்குப் பரிமேலழகர் உரை பிழையுடையது எனக் கூறிப் புதுப்பொருள் விளக்கி நாவலர் சொற்பெருக்காற்றினார். தலைவராக இருந்த மகாமதிப் பாவலர் முடிவுரையில் பேசிய செய்தி இன்றும் பலராலும் எடுத்துக் கூறப்பட்டு விளக்கம் செய்யப்படுகிறது. திருக்குறளுக்குப் பரிமேலழகர் செய்த உரை பெருநுட்பமும் அருஞ்சிறப்பும் கொண்டது. அவர் உரைச் சிறப்பையும் வள்ளுவர் கருத்துக்காட்டும் பாங்கையும் பெரிதும் பாராட்டிய புலவர் பலர் ஓரிரு இடங்களில் பரிமேலழகர் கூறிய உரை நலத்தைக் குறை கூறியதும் உண்டு. மகாமதிப் பாவலரும் அக்கருத்துக் கொண்டவரே. இருப்பினும் உரை கூறுவோர் தம் கருத்தையெல்லாம் திருவள்ளுவர் மேல் திணித்துக் குறை கூறியதை மறுத்தவர்.

## சொல்வன்மை உண்மை உணர்த்த வேண்டும்

நாவலர் பேச்சு நிறைவடைந்ததும் தலைவர் பாவலர் பேசத் தொடங்கினார். தொடக்கத்திலேயே நான் ஒரு முஸ்லிம்; திருக்குறளை இஸ்லாமிய நோக்கில் ஆய்ந்து ஒரு குறளுக்குப் புத்துரை வழங்கப் போகிறேன். அவையோர் அதனை ஏற்பார்களா என அஞ்சுகிறேன் எனத் தொடங்கினார்.

> "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா வுலகும் தொழும்".
>
> (குறள்-260)

என்பது திருக்குறள். பாவலர் உரை கூறத் தொடங்கினார்.

| | |
|---|---|
| கொல்லான் (கொல் ஆன்) | = கொல்லப்பட்ட பசுவினது |
| புலாலை | = இறைச்சியை |
| மறுத்தானை (மல்+துத்தானை) | = மிகுதியாகத் தின்பவனை |
| கைகூப்பி எல்லா உயிருந்தொழும் | = உயிர்கள் எல்லாம் கை குவித்து வணங்கும் |

பாவலர் எடுத்துக்காட்டிய குறளோ புலால் உண்ணாமை என்ற அதிகாரத்தில் இடம் பெறுவது. இப்புதுப் பொருள் திருவள்ளுவர் கருத்தை மாற்றிப் புலால் உண்ணத் தூண்டுவதாகும். இவ்விதம் பாவலர் பொருள் கொள்வது நாவலர் கருத்தை மறுக்கவே என்பதையுணர்ந்த அவையோர் மகிழந்தனர். அன்றும் மறுநாளும் பாவலர் தந்த இலக்கிய விருந்து அவையோரை இன்புறுத்தியது.

புலாலை மறுத்தான் என்பதற்குப் பசுவின் இறைச்சியை (மல்துத்தானை) மிகுதியாக உண்டவனை எனப் பாவலர் பொருள் கொண்டதை அவையில் இருந்த ஒருவர் மறுத்தார். புலாலை மல்துத்தானை எனக் கருதுவது 'மற்றுத்தான்' என வருமேயல்லாது மறுத்தான் என வராது என்றார். அதுகேட்ட பாவலர் உடனே கம்பரைத் தம் கருத்துக்குச் சான்றாக எடுத்துக் காட்டினார். கோசலை பேச்சாகக் கம்பன் கூறும்போது 'செல்தம்பி' என்பதனை 'செறம்பி' என்று கூறியதை எடுத்துக்காட்டினார்.[4] செல்தம்பி என்பதனைக் கம்பர் 'செறம்பி' என்று கூறியதுபோல மல்துத்தான் என்பதனை மறுத்தான் என்று வள்ளுவர் பாடியதாக நான் கூறுகிறேன் என்று பாவலர் கூறியதும் அவையோர் வியந்து மகிழ்ந்தனர்.

திருவள்ளுவர் சமயஞ்சாராது நின்று குறள் வழங்கியவர். தமிழும் தமிழ் மக்களுங்கூடத் திருக்குறளில் குறிக்கப் பெற வில்லை என்பது எண்ணத்தக்கது. இதனால் தான் திருக்குறளை உணர்ந்த பெருமக்கள் உலகப் பொதுமறை எனப் பாராட்டினர்.

ஒரு கிறித்துவப் புலவர் 'விவிலியமும் திருக்குறளும்' என்ற தம் டாக்டர் பட்ட ஆய்வேட்டில் திருவள்ளுவரைக் கிறித்தவர்

எனக்கூறியிருப்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. கிறித்து பெருமான் காலமும் திருவள்ளுவர் காலமும் ஒன்றென ஆய்வாளர் கருதுவர். ஆகவே விவிலியக் கருத்துக்கள் திருக் குறளில் இடம்பெறுவது கொண்டு திருவள்ளுவரைக் கிறித்தவர் என்று கூற முடியுமா? அதுபோலவே மறுத்தானை என்பதனை மல்துத்தானை என்று பொருள் கொண்டு திருவள்ளுவர் புலால் உண்பதை ஆதரித்தவர் என்று கூற முடியுமா? எனக் கேட்பது போல இக்குறளுக்குப் பாவலர் கிண்டலாக உரை சொல்கிறார் எனத் தெளிந்து அவையோர் ஆரவாரம் செய்தனர்.

நம் சொல் வன்மையையும் புலமைத் திறத்தையும் கொண்ட நூலாசிரியர் உள்ளத்தை விளக்க வேண்டுமே தவிர, சொல் வன்மையால் நூலாசிரியர் மேல் நம் கருத்தைத் திணிப்பது முறையாகாது என்பது பாவலர் கருத்து. சொல் வன்மை கொண்டு உண்மை உணர்த்தப்பட வேண்டுமே தவிரப் பொய்யை மெய்யாக்க முயலக்கூடாது என்ற கருத்தைப் பாவலர் நயமாக இங்கு உணர்த்தியமை உணர்ந்து போற்றத்தக்கதாகும்.

## பாவலரும் டாக்டர் ப.நடராசனும்

உள்ளம், சொல், செயல் மூன்றிலும் உயர்ந்து விளங்கி நயத்தக்க நற்பண்புகளைப் போற்றி நாடு போற்றும் நாவலராக விளங்கிய பாவலர் அவர்கள் தமிழ் மக்கள் இன்றும் போற்றுகின்ற திரு.வி.க., ஜீவானந்தம் போன்றோரின் உள்ளங்களிலே உயர்ந்து விளங்கியவர் என்று கண்டோம். பாவலரை உள்ளத்தால் போற்றி உரையால் புகழந்து இன்றும் வாழ்கின்றவர் மிகப் பலர். 'நடமாடும் கலைக் களஞ்சியம்' என்றோரும், 'தமிழ்மாவேழம்' எனப் புகழ்ந்தோரும் மிகப் பலர். அந்நாள் சட்டமன்ற உறுப்பினரும் பொருளாதார நிபுணருமாக விளங்கிய டாக்டர்.ப.நடராசன் போன்றோர் பாவலரைத் தம் ஆசானாகவே கருதி வந்தனர்.

## அறிஞர் அண்ணாவைப் பாராட்டிய பாவலர்

இன்றும் தமிழர் நெஞ்சங்களில் வாழ்கின்ற பேரறிஞர் அண்ணா, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் போன்றாரை இளமையிலேயே இனங்கண்டு எதிர்காலத்தில் புகழ் பெற்று வாழ்வர் எனப் பாராட்டிய பெருமை பாவலருக்கு உரியது. அறிஞர் அண்ணா அவர்கள் அக்காலத்தில் இளைஞராக இருந்த போது நாகர்கோவில் வந்தார். அறிஞர் அண்ணாவின் பேச்சுக்குத் தலைமை தாங்குமாறு நாஞ்சில்மனோகரன், பாவலரை அழைத்த போது, தாம் தலைமை ஏற்பது பொருத்தமாக இராது எனப் பாவலர்

மறுத்தார், அவைக்கு வந்து சிறப்புச் செய்யவும் நல்லெண்ணம் காரணமாகா மறுத்தார். ஆகவே அடுத்த வீட்டில் இருந்து கொண்டே சி.என். அண்ணாதுரை அவர்களின் பேச்சைக்கேட்டு, இவர் எதிர்காலத்தில் பேரறிஞர் ஆவார் என நாஞ்சிலாரிடத்துப் பாராட்டியவர் பாவலர். கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களால் அறிஞர் எனப் பாராட்டப்படுவதற்கு முன்பே அண்ணாவை அறிஞர் எனப் பாராட்டிய பெருமை பாவலருக்கு உண்டு.

## கலைவாணரைப் பாராட்டிய பாவலர்

நாடகக் கலைஞர் அவ்வை சண்முகம் அவர்களுடைய நாடகத்தில் ஒரு சிறு பாத்திரத்தில் நடித்த என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களைப் பாராட்டி, மக்கள் அன்பளிப்பாகத் தந்த தங்கப் பதக்கத்தை வழங்கிப் பாவலர் பேசினார். அப்போது எதிர் காலத்தில் நாடறிந்த நல்லவராக விளங்கப் போகிறார் என்று பாவலரால் என்.எஸ்.கிருஷ்ணன் பாராட்டப் பெற்றார். இன்று தமிழகத் தலைநகரில் நடைபெறும் மிகச் சிறந்த நிகழ்ச்சிகளின் அரங்கமாக விளங்கும் கலைவாணர் அரங்கு என்.எஸ்.கே. அவர்களின் பெயரால் விளங்குவது அனைவரும் அறிந்ததாகும். பாவலர் பாராட்டுப் பெற்ற என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள் கலைவாணராகப் பின்னர் உயர்ந்து விளங்கினார் என்பது நினைக்கத்தக்கது.

## விடுதலைப் போராட்டத்தில் பாவலர் பங்கு

பாவலரது இஸ்லாமியக் கல்வியும் தமிழ்க் கல்வியும் அவர் உள்ளத்தைச் செம்மைப்படுத்தியிருந்தது. உள்ளச் செம்மை மக்கள் நல்வாழ்வில் நாட்டங்கொள்ளச் செய்தது. நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெறச் செய்தது. இந்திய விடுதலையில் நாட்டங் கொண்டு மகாத்மா காந்தியடிகளின் தலைமையின் கீழ் இயங்கிய இந்திய தேசிய காங்கிரஸில் தம்மை இணைத்துக் கொண்டார். சுதேசிக் கொள்கையில் நாட்டங்கொண்டு கதராடை அணியத் தொடங்கினார். நான்கு முழக் கதர் வேட்டி, கதர்ஜிப்பா, கதர்க் குல்லாய் இவையே அவரது ஆடை. இறுதி மூச்சுவரை கதராடையையே அணிந்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேசிய இயக்கம் வளர்ந்ததற்குப் பாவலர் ஆற்றிய தொண்டே அடிப்படைக் காரணம் எனக் கருதப்பட்டது. 1937-ஆம் ஆண்டுத் தேர்தலில் அம்மாவட்டத்தில் காங்கிரஸ் இயக்கத்தின் வெற்றிக்குக்

காரணமாக இருந்தார். காங்கிரஸ் இயக்கத்தின் தேர்தல் அடையாளப் பெட்டி மஞ்சள் பெட்டியாகும். 'மஞ்சள் பெட்டி மங்கலப்பெட்டி; வெள்ளைப்பெட்டி வெறும் பெட்டி' என்று மேடையில் பாவலர் முழங்கிய முழக்கம் பாமரரிடையே மஞ்சள் பெட்டியே மங்கலப் பெட்டி என்ற பேச்சை உருவாக்கியது. காங்கிரஸ் இயக்கத்தில் நாட்டுத் தொண்டராக இருந்த எம்.இ.நாயுடு அவர்களோடு இணைந்து அரும்பணியாற்றினார். பாவலருடைய அரசியல் பேச்சைக் கேட்க வருகின்ற ஆங்கில அரசின் அதிகாரிகளும் பாவலரது தமிழ்ப்பேச்சில் உள்ளம் பறிகொடுத்து மூழ்கி விடுவராம். இயக்கத்தின் பிற பணியாளர்கள் கைது செய்யப்பட்டபோதும் பாவலர் ஒருமுறை கூடக் கைது செய்யப்படாமைக்கு இதுவே காரணமாகும் எனப் பலர் கருத்துக் கொண்டிருந்தனர். கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்ப்புலவர் பலரை நாட்டுக்களிக்கக் காரணமாக விளங்கியது போலவே விடுதலை வேட்கையும் சுதேசி இயக்கமும் இம்மாவட்டத்தில் வளர்ந்தோங்கியதற்குப் பாவலர் தொண்டே காரணம் எனப் பலரும் பாராட்டினர். அன்று பாவலர் தொடங்கி வைத்த தமிழ்ப் பாரம்பரியப் பணியே இன்றுவரை தொடர்கின்றது எனக் கூறலாம்.

## கதராடை போற்றிய பாவலர்

இரவி புதூர் என்னுமிடத்தில் நிகழ்ந்த தேசியக் கூட்டத்தில் வ.வே.சு.அய்யர், எம்.இ.நாயுடு போன்ற நாட்டுக்குழைத்த நல்லவர்களோடு பாவலரும் பங்கு பற்றினார். வெளிநாட்டு ஆடைகளைப் புறக்கணித்துக் கதர் அணிவதைப் பலர் வலியுறுத்திப் பேசினர். திருமணத்திற்குரிய கூறைப்புடவை கைத்தறி ஆடையே. மணமக்கள் கைத்தறி ஆடைகளைக் கட்டிக் களிப்பதே நம் நாட்டு வழக்கம். ஒருவர் இறந்துவிட்டால் ஆலைத் துணியெடுத்துப் போர்த்துவது வழக்கம். நீங்களெல்லாம் மண மக்களா? பிண மக்களா? என்று கேட்டார். அன்று முதல் நாஞ்சில் நாட்டில் ஆலைத் துணியணிந்த வரைக் கண்டால் பாவலர் கேட்ட கேள்வியையே மக்களும் கேட்கத் தொடங்கினர்.

## விடுதலை உணர்வின்மேல் விழுந்த கல்

குமரி மாவட்டத்திலுள்ள மைலாடி என்ற இடத்தில் இந்திய விடுதலைப் போராட்டக் கூட்டத்தில் பாவலர் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தார். அப்போது மேடையின் மீது கல் ஒன்று வீசியெறியப்பட்டது. பாவலர் நடந்ததை ஒரு கணத்தில்

உய்த்துணர்ந்து அமைதியாகக் கல்லையெடுத்து மேசை மீது வைத்தார். அவையாருக்குக் கல்லின் பெருமையை எடுத்துரைத்தார். இக்கல் விடுதலை உணர்வின்மேல் விழுந்த கல். காட்சிப் பொருளாகக் கண்ணாடியில் வைத்துப் பாதுகாக்க வேண்டியது. அக்கண்ணாடி மேல் 'விடுதலைக்கு உழைத்த பாவலர் மேல் விழுந்த கல்' என எழுதப்பட வேண்டும் எனப் பேசினார். கல் ஏலத்திற்கு விடப்பட்டுப் பெரும் பொருள் பெறப்பட்டுக் காங்கிரஸ் இயக்கத்திடம் சேர்க்கப்பட்டது. இந்நெறி முறையே பாவலரின் போக்காக இருந்தது.[5]

## மதுவிலக்கின் மாண்பு

விடுதலை இந்தியாவில் மதுவிலக்கின் மாண்பு உணரப்பட்டு எங்கும் எதிலும் உரைக்கப்பட்டு வருகிறது. இஸ்லாம், போதை தரும் மது வகைகளைத் தடை செய்தது. நபிகள் நாயகம் மதுவை விலக்கிப் பேசியுள்ளனர். மகாத்மா காந்தியடிகளின் திட்டங்களில் ஒன்று மதுவிலக்கு. பாவலர் குடியின் கேடு குறித்துப் பாமரரும் உணர்ந்து போற்றும் வண்ணம் பல இசைப் பாடல்களைப் பாடியுள்ளார். பாவலர் சொற்பொழிவுகளிலே விதவை மணமும் மது ஒழிப்பும் பேரிடம் பெற்றன.

## வியத்தகு நினைவாற்றல்

நடமாடும் பல்கலைக்கழகம் எனப் பாராட்டப் பெற்ற பாவலர் ஒரு முறை கேட்ட ஓசை நயமிக்க நல்ல பாடலைக் கேட்ட வண்ணமே திருப்பிக் கூறிவிடும் வியத்தகு நினைவாற்றல் பெற்று விளங்கினார். அவ்வைப்பிராட்டியார் பாடிய தனிப்பாடல் ஒன்று இருமுறை கேட்ட வெண்பாவைத் திருப்பிக் கூற முடியாதவனைப் பெற்ற தாயைப் 'பெண்பாவி' என இகழ்கின்றது. பிறர் நகைக்கப் பிள்ளையைப் பெற்றாளே என்று ஏசுகின்றது. ஒருமுறை கேட்ட நல்ல பாடலைக் கேட்டவாறே திருப்பிக் கூறக்கூடிய வியத்தகு நினைவாற்றலைப் பெற்றிருந்த பாவலரை ஈன்றெடுத்த ஆமினா அம்மையார் இருந்து பார்த்திருந்தால் 'தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாயாக' உளம் மகிழ்ந்திருப்பார்.

செங்கோட்டையைச் சேர்ந்த முருகதாஸ் என்ற புலவர் தாம் பாடிய 'பண்பை அந்தாதி' என்ற நூலுக்குச் சாற்றுக் கவிபெறப் பாவலரிடம் வந்திருந்தார். நண்பர்களோடு உரையாடிக் கொண்டிருந்த பாவலர் நீர் அருந்த உள்ளே சென்றார். திரும்பி வந்த பாவலர் சாற்றுக்கவி கேட்க வந்தவரை நோக்கி இப்பாடல்கள்

நீர் எழுதியவை தாமா? எனக் கேட்டார். வந்த புலவர் படபடத்து உடல் வியர்த்து வேறு யார் இயற்றியிருக்க முடியும் எனச் சினத்தோடு கேட்டார். இல்லை; இப்பாடல்களை முன்னர் படித்தது நினைவிருக்கிறது என்று சொல்லிவிட்டுப் புலவர் முருகதாஸ் அவர்கள் பாடல்களைப் பாவலர் திரும்பக் கூறினார். இது கேட்ட புலவர் என்ன கூறுவது என அறியாது குழப்ப மடைந்தார். பாவலர் அவரை நோக்கி நீர் படித்த ஓசை நயம் மிக்க பாடல்களை நீர் அருந்த உள்ளே சென்றபோது கேட்டுத் திருப்பிக் கூறினேன் என்று கூறி அவரது பாடல்களைப் பாராட்டினார். கேட்ட நண்பர் குழுவினர் வியப்பால் பேசாது அமர்ந்திருந்தனர்.[6] பாவலர் வாழ்க்கையில் இத்தகு நிகழ்ச்சிகள் பல நடந்திருக் கின்றன. இந்த அளப்பரிய நினைவாற்றலே அவதானக்கலையில் பாவலர் பெரும் புகழ் ஈட்டுவதற்குக் காரணமாய் அமைந்தது. கல்விக்கு அழகு நினைவாற்றலே; அவ்வாற்றல் நிரம்பப் பெறாதவன் கல்வி சிறவாது என்பது பாவலர் பலமுறை உரைத்த கருத்தாகும்.

## பாவலரது சொல் விளையாட்டு

ஒருநாள் பாவலரது நண்பர் அட்டாவதானி பூவை கலியாண சுந்தரனாரின் புதல்வர் பாவலரிடம் வந்தார். புலமை நிறைந்த பாவலரது தமிழ்ச்சொல் விளையாட்டைத் தூண்டி அவர் வாய்க் கேட்கும் ஆவலோடு 'தந்தையார் நூறு ரூபாய் தங்களிடம் வாங்கி வரப் பணித்தார்' என்றார். உடன் பாவலர் சரி, நூறு ரூபாய் தருகிறேன் எனக் கூறியவாறு வீட்டின் உள்ளே நுழைய முயன்றார். வந்தவரோ செலவு அதிகம் உள்ளது இருநூறு ரூபாய் தந்தால் நல்லது என்றார். வந்தவரின் நோக்கததைப் புரிந்து கொண்ட பாவலர் 'இரு' நூறு ரூபாய் தருகிறேன் என்றார். வந்தவர் முன்னூறு ரூபாய் என முணுமுணுத்தார். பாவலர் 'முன் நூறு ரூபாய்' தருகிறேன் என்றார். வந்தவர் 'நானூறு' என நகைத்தார். உடன் பாவலர் நான் நூறு ரூபாய் தருகிறேன் எனக் கூறினார். வந்தவர் ஐந்நூறு தந்தால்...என இழுத்தார். உடன் பாவலர் ஐ நூறு ரூபாய் தருகிறேன் என உரைத்தார். வந்தவர் அறுநூறு ரூபாய் தந்தால்...என்றார். பாவலர் அறு நூறு ரூபாய் தருகிறேன் என்றார். வந்தவர் தொடர்ந்து எழுநூறு ரூபாய் தந்தால் நல்லது என்றார். உடன் பாவலர் நண்பரின் மகனாரை நோக்கி எழு (இருக்கையை விட்டு எழுந்திரு) நூறு ரூபாய் தருகிறேன் என்று பணத்தைக் கொடுத்தனர். வந்தவர் மேலும் தொடர்ந்து எண்ணூ று என்று இயம்பினார். பாவலரோ எண் (எண்ணிப்பார்) நூறு ரூபாய்

தந்திருக்கிறேன் எனக் கூறி முடித்தார்.[7] இது மாதிரி சிலேடை நயம் செறிந்த பாவலரின் சொல் விளையாட்டே எந்நேரமும் நண்பர் குழுவினரை ஈர்த்து வந்தது.

## பாவலர் பண்பு காட்டும் சிலேடை

பாவலர் சுருட்டுப் புகைக்கும் வழக்கம் உள்ளவர். அக்காலத்தில் பெருமை நாயகம் சுருட்டு புகழ் பெற்றது. அணைந்து விடுவதால் அடிக்கடி நெருப்புப் பற்ற வைத்துப் புகைப்பது வழக்கம். நண்பர்களோடு உரையாடுங்கால் அவர்கள் கூறுவதை உன்னிப்பாகக் கேட்கும் பாவலர் சுருட்டைப் பற்ற வைத்து விட்டால் அது பேச்சுத் தொடக்கத்திற்கு அடையாள மாகும். நண்பர் குழுவினர் இதனை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருப்பது வழக்கம். ஒருநாள் பலமுறை நெருப்பைப் பற்ற வைத்து இழுத்தும் சுருட்டுப் புகையவில்லை. உடனே பாவலர் பெருமைநாயகம் புகையிலை, பலமுறை பற்ற வைத்து ஊதியும் புகை இலை என்றார். கூடியிருந்த நண்பர் சிரித்து மகிழ்ந்தனர். நண்பர் தம் மகிழ்ச்சியில் பாவலரும் பங்கு பற்றிச் சிரித்து மகிழ்ந்தார். புகையிலை என்ற சொல்லைச் சிலேடை நயம் சேர்த்து உரைத்தது பாவலரது தமிழ்ப் புலமை காட்டும். திரும்பத் திரும்பப் பற்ற வைத்துத் தாம் படும் அவலத்தைக் கண்டு நண்பர் குழு அலுப்படைந்தது பாவலருக்கு வருத்தத்தை உண்டாக்கியது. உடன் தமக்கேயுரிய பாணியில் சொல் விளையாட்டுக் காட்டிச் சிரிக்க வைத்தது அவர் தம் உயர்ந்த உள்ளம் காட்டியது. நண்பர்களது மகிழ்ச்சியில் பங்கு கொண்டு தாமும் சிரித்து மகிழ்ந்தது பாவலரது சிறந்த பண்பைக் காட்டுகிறது. இத்தகைய சொல் விளையாட்டுக்கள் எல்லாம் தொகுக்கப்பட்டால் அதுவே தனி நூலாக மலர்ந்து விடும். பாவலரது உள்ளம், சொல், செயல் மூன்றும் உயர்ந்து விளங்கிய சிறப்பை நினைவு கூர்ந்து பண்பாளர் பாவலர் என்பதையும் உணர்ந்து மிகழலாம்.

---

## அடிக்குறிப்பு

1. குமரேசப்பிள்ளை, சி., செந்தமிழ் வளர்த்த செய்குத்தம்பி, பக்.146-147
2. பாலகாண்டம், பா.85
3. குமரேசப்பிள்ளை, சி., செந்தமிழ் வளர்த்த செய்குத்தம்பி, பக்.124-125

4. கம்பராமாயணம், நகர் நீங்கு படலம், பா.147
5. குமரேசப்பிள்ளை, சி., செந்தமிழ் வளர்த்த செய்குத்தம்பி, பக்.160
6. மு.நூ. பக்.130, 131
7. பசுலுமுகியித்தீன், செ., டாக்டர், மகாமதிப் பாவலர், பக்.53,54

# பாவலர் பாராட்டிய பைந்தமிழ் இலக்கியங்கள்

## மால்முருகனார் மதிப்பீடு

சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் தமிழ் இலக்கியங்கள் இலக்கணங்கள் அனைத்திலும் பெரும்புலமை பெற்றுத் திகழ்ந்தார். இன்று இலக்கியப்புலமை, இலக்கணப்புலமை இரண்டும் வேறுபிரித்துப் பார்க்கப்படுகிறது. இலக்கணத்திலுங் கூடச் சொல்லாய்வு, சொல்பிறப்பு ஆய்வு, ஒலி ஆய்வு எனப் பலதுறைகள் குறிக்கப்படுகின்ற காலம் இது. சதாவதானிப் பாவலரது இலக்கியப்புலமை, இலக்கணப்புலமை இரண்டுமே நிகரற்றதாக விளங்கியது. நாஞ்சில்நாட்டு நற்றமிழ்ப் புலவர்களுள் கவிராச பண்டிதர் இராமசுப்ரமணிய நாவலர் இராசாக்க மங்கலம்-மால் மருகனார் என்றும் குறிக்கப்பட்டார். ஒருமுறை பாவலரைச்சந்தித்து உரையாடிப் பாவலரது புலமையை உணர்ந்து கொண்டு தொடர்ந்து பலமுறையும் சந்தித்துப் புலமை விருந்து பருகியவர். முதன் முறையாகப் பாவலரை அவரது கோட்டாற்று நூற் கடையில் சந்தித்தார். ஒரு மணி நேரத்திற்கும் மேல் நீடித்த அச் சந்திப்பில் நாவலர் பாவலரிடம் நன்னூல் பற்றிய பல்வேறு இலக்கண ஐயங்களை எழுப்பித் தெளிவான விளக்கம் பெற்றார். விடைபெறும் போது நாவலர் 'சாமிநாத ஐயர் அவர்களையும் நாராயண ஐயங்கார் அவர்களையும் இராகவ ஐயங்கார் அவர்களையும் உலகம் இன்னும் அறியவில்லை; அதுபோலவே தங்கள் புலமை பற்றியும் உலகம் கண்களை மூடிக் கொண்டிருக்கிறது' எனக் குறிப்பிட்டார். இதுகேட்ட செய்குத் தம்பிப் பாவலர் அவர்கள் 'கூத்தாடியை யாவரும் அறிவார்; கொற்றவனை யார் அறிவார்? தகுதியுடைய ஒருசிலரே அறிவர்' எனக் குறிப்பிட்டனர்.

## கூத்தாடியை அனைவரும் அறிவர்

செய்குத்தம்பிப் பாவலர் பற்றிய மால்முருகனாரின் மதிப்பீடு ஆழ்ந்த சிந்தனைக்குரியது. அவர் குறிப்பிட்ட முப்பெரும் அறிஞர்களும் தமிழறிந்தார் யாவரும் அறிந்த தகுதியுடையார். அவர்கள் மூவரோடும் சேர்த்துப் பாவலரையும் மதிப்பிட்ட சிறப்பு பொருத்தம் மிக்கதாகும். இப்பேரறிஞர் நால்வருமே

இலக்கியம் இலக்கணம் சார்ந்த அனைத்துத் துறைகளிலுமே புலமைமிக்கோராவர். இப்பேரறிஞர் பெருமக்களை உலகம் உள்ளவாறு அறிந்து போற்றவில்லையே என்ற ஏக்கம் மால் முருகனார் பேச்சில் வெளிப்பட்டது. அதுகேட்ட பாவலரது விடை அவரது புலமை நிறைவைப் புலப்படுத்தி நிற்கின்றது. மக்கள் கூடும் அவைக்களங்களில் கூத்தாடுவோரைப் பார்த்து அனைவரும் அறிகின்றனர். புலமை வீறுமிக்க பெருமக்களை உணர வேண்டு மாயின் அத்துறைப் பயிற்சி வேண்டும். அப்பயிற்சி யுடையார் உலகத்துச் சிலரே. அவர்கள் மட்டுமே அறிஞர் பெருமக்களை உணர்ந்து போற்ற முடியும் என்ற தெளிவு பாவலருக்கு இருந்தது. ஆகவே உலகம் தம் தகுதிக்குத் தக்கவாறு அறிந்து போற்ற வில்லையே என்று பாவலர் ஒருபோதும் கருதியதில்லை. 'பாம்பின் கால் பாம்பறியும்' என்பது போலப் புலமை யுடையோரே புலவர் பெருமக்களை உணர்ந்து போற்ற முடியும். ஆகவே உலகமக்கள் எல்லோரும் தம்மை அறிந்து போற்ற வில்லையே எனக்கருதும் பிழைபாடு பாவலரிடத்துச் சிறிதும் இல்லை என்பதை அவரது புலமைமிக்க விடை உணர்த்திக் காட்டுகிறது.

## தலைமாணாக்கரது தகுதிமிக்க மதிப்பீடு

செய்குத்தம்பிப் பாவலரது இலக்கணப் புலமை போலவே இலக்கியப்புலமையும் போற்றத்தக்கதாகும். பாவலர் தெளிவு பெற்றிருந்த இலக்கியங்களைக் குறிப்பிடுவதென்றால் மிகச் சுருக்கமாக எல்லா இலக்கியங்களிலுமே புலமை பெற்றுப் பாராட்டிப் பேசும் தகுதி பெற்றிருந்தனர் எனக் குறிப்பிடலாம். பலரும் அறிந்து போற்றும் திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பர் காவியம், சிற்றிலக்கியங்கள் முதலிய நன்கு அறியப்பட்டுள்ள இலக்கியங்களில் எல்லாம் புலமை மிகப் பெற்று நயம் தேறி நயந்துரைக்கும் நலம் வாய்க்கப் பெற்றிருந்தனர். இதனினும் குறிப்பிடத்தக்கது பெயரளவில் கூடப் பலரும் அறிந்திராத பல்வேறு தமிழ் இலக்கியங்களில் பாவலர் பெற்றிருந்த பெரும் புலமையாகும்.

### கூளப்பநாயக்கன் காதல்

செய்குத்தம்பிப் பாவலரது மாணவர் நாஞ்சில் நாடறிந்த பெரும் புலவர் சாத்தாங்குட்டிப் பிள்ளையவர்கள் குறிப்பிடும் ஒரு கருத்து அறியத்தக்கதாகும். பழனி மாம்பழக் கவிச் சிங்க நாவலர் இயற்றிய சந்திரவிலாசம், உமறுப்புலவரின் தமிழாசானாக விளங்கிய கடிகை முத்துப்புலவர் இயற்றிய சமுத்திர விலாசம்,

திருமலைவேற் கவிராயர் இயற்றிய இரத்தினாகர விலாசம் முதலிய இலக்கியங்களுக்குப் பாவலரைத் தவிர வேறு யாரும் உரை விரிக்க நான் கேட்டதில்லை என்பார் சாத்தாங் குட்டிப்பிள்ளை.[1] தம் ஆசிரியர் பற்றி விரிவாக அறிந்த தலைமாணாக்கர் பிள்ளை அவர்களின் மதிப்பீடு பொருத்த முடையதாகும். பலரும் அறிந்திராத நூல்களைப் பற்றிப் பாவலர் பாராட்டி வழங்கிய திறனாய்வு நம்மை வியக்க வைக்கின்றது. ஒருநாள் தமிழ்ச்சுவை அறிந்த நண்பர்கள் குழு கூடியிருந்தபோது 'கூளப்ப நாயக்கன் காதல்' என்னும் நூலிலிருந்து இரண்டு அடிகளைக் கூறி ஓர் அன்பர் விளக்கம் வேண்டினர். உடன் பாவலர் விளக்கம் தந்தார். விளக்கம் தரும்போது சுருட்டைத் தவிரச் சுவடி எதனையும் கையில் வைத்துக் கொள்ளும் பழக்கம் பாவலரிடம் இல்லாதது. அதன்படியே நூலின் பாடல் கையில் இல்லாமலேயே பாவலர் விளக்கம் தந்தார்.

> ''காலா யுதக்கொடியோன் கையாயு தம்வழியே
> மாலா யுதம்ஈன்ற மாமணியைத் தானுகுத்தான்''

என்ற அடிகளுக்குப் பாவலர் விளக்கம் தந்தார். காலாயுதக் கொடியோன் = காலை ஆயுதமாகக் கொண்ட கோழிக்கொடியைக் கொண்ட முருகன்,

| | | |
|---|---|---|
| கையாயுதம் வழியே | = | கையிலிருக்கின்ற வேல்போன்ற கண்கள் வழியே, |
| மாலாயுதம் ஈன்ற | = | திருமாலின் ஆயுதமாகிய சங்கிலிருந்து தோன்றுகின்ற, |
| மாமணியைத் தான் உகுத்தான் | = | சிறந்த முத்துப்போன்ற கண்ணீரைச் சிந்தினான். |

காலாயுதம், கையாயுதம், மாலாயுதம் என அடுக்கி வந்த சொல்நயம் சிறப்பிற்குரியது. இப்பாடல் சொல் விளையாட்டையே உயிராகக் கொண்டது. புலவரது சொல் விளையாட்டின் பொருள்நயங்களை எல்லோராலும் காண இயலாது. பரந்த நூலறிவும் சிறந்த நுட்பமும் உடைய அறிஞர் பெருமக்களாலேயே பொருள்நுட்பம் கண்டு உரைக்கத் தக்கதாகும். இது போன்ற பழுத்த புலமை நலம் இல்லாத தேர்ந்த சொல்லாட்சித் திறங்களிலும் பாவலர் தெளிவு பெற்றிருந்தார்.

## மாம்பழக் கவிச்சிங்கர் மேற்கொண்ட காதல்

செய்குத்தம்பிப் பாவலர் ஒருமுறை உத்தமபாளையம் புரவலர் பெருந்தகை ஜனாப்.என்.கே.எஸ். முகம்மதுராவுத்தர்

அவர்களின் இல்லத்தில் தங்கியிருந்தார். பாவலர் வருகையறிந்து கா.சீ. முகம்மது இஸ்மாயில், சங்குப்புலவர், பீர்க்காளை உபாத்தியாயர் ஆகியோர் வந்து பாவலருடன் தங்கி இருந்தனர். அப்போது பாவலர் பழனி மாம்பழக் கவிச்சிங்க நாவலரின் கவித்திரட்டு கிடைக்குமா என்று கேட்டார். அந்நூல் அருகில் சின்னமனூரில் கிடைக்கும் என நம்பி ஒருவரை அனுப்பி மூன்று படிகள் பெற்றுப் பாவலரிடம் வழங்கப்பட்டன. அவற்றைப் பெற்ற பாவலர் அவற்றுள் ஒருபடியைத் தமக்கு எடுத்துக்கொண்டு எஞ்சிய இரண்டு படிகளை அந்நூலின் சுவைதேறும் தகுதியுடைய நண்பர்களிடம் வழங்கியது பாவலரது பண்பாட்டை வெளிப்படுத்தியது. தொடர்ந்து பாவலர் மாம்பழக் கவிச்சிங்க நாவலருடைய தமிழ்ச்சுவை மிகுந்த சொற்களுக்கு நயவுரை தந்து இறுதியாகப் பாடலை அனைவரும் கேட்குமாறு படித்தவரிடம் ஒரு வினா தொடுத்தார். புலவருக்குச் சேலம் மாவட்ட வேலுக் குறிச்சி ஜமீன்தார் வழங்கிய பரிசு என்ன எனப் பாவலர் கேட்டார். ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்பட்டது என விடை கூறப்பட்டது. இந்த நூலுக்கு ஆயிரம் கோடிப்பொன் அல்லவா பரிசு வழங்க வேண்டும் என்ற பாவலர் சொற்கள் அவரது பரந்து விரிந்த பேருள்ளத்தை விளக்கிநின்றது.

## பாவலரது பன்னூற் புலமை

பாவலரது வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், பாவலர்தம் பன்னூல் அறிவையும் புலமையையும் விளக்கி நிற்கும். கற்பனைக் களஞ்சியம் எனப் பாராட்டப் பெற்ற சிவபிரகாசசுவாமிகளுடைய பிரபுலிங் கலீலை என்ற நூல்பற்றிப் பாவலர் தந்த விளக்கம் அச் சிறப்புத் துறையில் தேர்ந்த அறிஞர்களையும் வியக்கச் செய்ய வல்லது. இங்ஙனம் பலரும் அறியாத - பரவாத - தமிழ் இலக்கியங்களிலும் கூடப் பாவலர் தெளிவு பெற்று விளக்கிய அருமை அறியத்தக்கதாகும். இராமலிங்க வள்ளலாரின் அருட்பாடல்கள் அறியப்பட்டவை. அப் பாக்களுக்குப் பாவலர் தந்த நுணுக்கமான விளக்கங்கள் இராமலிங்க வள்ளலாரையே வாழ்க்கை முழுதும் பேசி வந்த புலவர் பெருமக்களையும் வியப்படையச் செய்துள்ளன. அருட்பா மருட்பாப் போராட்டத்தில் பங்கு பற்றித் தமிழ் உலகத்திலும் பாவலர் பெற்ற மதிப்பு குறிப்பிடத்தக்கதாகும். பரவிய பரவாத எல்லா இலக்கியங்களிலும் பாவலர் பெற்றிருந்த தெளிவு போற்றத்தக்கது எனினும் திருக்குறளிலும் கம்பரது இராமாயணக் காப்பியத்திலும் பாவலர் கொண்டிருந்த ஈடுபாடு நிகரற்றதாகும். திருக்குறளிலும்

கம்பரது பாடல்களிலும் பாவலர் தெளிந்து பாராட்டிய இடங்கள் மிகப் பலவாகும்.

## திருவள்ளுவரது தனிச்சிறப்பு

திருவள்ளுவர் சமயக்கணக்கர் மதிவழி கூறாது பொது வகையில் வாழ்க்கை உண்மைகளை உணர்த்திய அறிஞர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வள்ளுவர் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் ஆகிய நான்கு சமயங்களை அறிந்திருக்கக் கூடும். சைவர்களும், சமணர்களும் திருவள்ளுவர் தம்முடைய சமயத்தைச் சார்ந்தவரே எனக் கூறினர். மற்ற சமயத்தார் வெளிப் படையாக உரிமை கொண்டாடி வாதிடவில்லை என்றாலும் அவர்களும் வள்ளுவர் கூறிய உண்மைகள் தம் சமயத்திற்கு ஏற்புடையன எனக் கூறவே செய்தனர். இதுவே வள்ளுவர் தம் தனிச்சிறப்பு. வள்ளுவர் கூறிய பொது வாழ்க்கை உண்மைகள் பெரும்பாலும் எல்லாச் சமயத்திற்கும் ஏற்புடையதாக இருக்கலாம். ஆனால் வள்ளுவர் தாம் ஒரு சமயவாதி எனக் காட்டவில்லை. உலகம் முழுமைக்கும் பொருந்தக்கூடிய வாழ்க்கை உண்மைகளைத் தமிழில் பேசிய வள்ளுவர் தம் நூலில் தமிழ் என்ற சொல்லையும் பயன்படுத்தவில்லை. ஆகவே தான் திருவள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது தமிழ்நாடு என்ற பாரதியின் பாராட்டுப் பொருந்தியது. பாரதியின் தாசனாரோ 'பொதுவானவராக விளங்கிய திருவள்ளுவரைத் தமிழர் உலகிற்கு அறிமுகப்படுத்தவில்லை; பிறநாட்டார் தமிழகம் வந்து வள்ளுவரைப் பெற்றுக் கொண்டனர்' என்று பாடினார். இந்த அடிப்படையிலேயே செய்குத்தம்பிப் பாவலர் அவர்கள் திருவள்ளுவர் மீது நிகரற்ற அன்பு கொண்டார். ஏறத்தாழ நூறு குறள்களுக்கு மேல் எடுத்தாண்டு, பொருள் நுட்பம் கூறி வாழ்க்கை விளக்கம் செய்தார். பாவலர் மிகுதியாகப் பாராட்டிய தமிழ் இலக்கியம் திருக்குறளே என்ற கருத்தில் சிறிதும் ஐயமில்லை. திருவள்ளுவரைப் பாவலர் முதன்மையானவராகப் போற்றி யதற்குத் திருவள்ளுவரது சமயச் சார்பின்மையும் உலக வாழ்க்கைப் பொது உண்மைகளைப் பொதுவில் நின்று உரைத்ததுமே காரணம் எனக் கருதலாம்.

## வள்ளுவர் கருத்தறிந்து குறளுரை கண்டவர்

திருக்குறளுக்கு உரைகண்ட பதின்மரில் பரிமேலழகர் உரையே சிறந்தது என்பது பாவலர் கருத்து. பரிமேலழகர் உரைவளத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர் பாவலர். அதற்குக் காரணம் திருவள்ளுவரது உள்ளமறிந்து உரைசெய்யும்

பரிமேலழகரது தகுதியே. இன்றைய சூழ்நிலையில் பரிமேலழகர் கூறாத உரையைத் திருக்குறளுக்குக் கூறக் கூடாது எனப் பாவலர் கூறவில்லை. பரிமேலழகரது உரை நுட்பத்தை ஏற்றுக் கொண்டு பாவலரே பல புதிய நுட்பங்களைக் கூறியுள்ளனர். ஆனால் உரைகாணுவோர் அனைவரும் தம் கருத்தை வள்ளுவர் மேல் திணிப்பதைப் பாவலர் ஏற்பதில்லை. மூல நூலாசிரியர் கருத்து, அவர் வாழ்ந்த காலம், அவர் அறிந்திருக்கக் கூடிய உண்மைகள் இவற்றைச் சார்ந்து நூலாசிரியன் கருத்துக்கு உடன்பாடான உரையைக் காண வேண்டும் என்பதே பாவலர் கருத்து.

## திருக்குறளுக்குச் 'சமய உறை' போடாத பாவலர்

ஒவ்வொரு சமயத்தைச் சார்ந்தவரும் தம்முடைய சமயத்தைச் சார்ந்தவர் திருவள்ளுவர் எனக் கூறுவதையும் ஒவ்வொரு அறிஞரும் தம் கருத்தே வள்ளுவர் கருத்து எனச் சாதிப்பதையும் பாவலர் ஏற்பதில்லை. சைவர்களும், சமணர்களும் உரிமை கொண்டாடியது போலப் பிற்காலத்துக் கிறித்தவ அறிஞர் ஒருவரும் திருவள்ளுவர் கிறித்தவரே என உரிமை கொண்டாடினார். அக்கருத்துக்கு அவ்வாய்வாளர் கூறிய அகச் சான்றுகளில் ஒன்று முதற் குறளாகும். கிறித்தவ சமயத்தைப் பரப்பிய தாமஸ் என்ற திருத்தொண்டர் சென்னை வந்து பணியாற்றிய காலமும் திருவள்ளுவர் காலமும் ஒன்றேயாகும். முதற்குறளில் திருவள்ளுவர் 'ஆதிபகவன் முதற்றே உலகு' எனக் கூறுவது கிறித்தவ ஆகமம் விவிலியத்தின் கருத்தே என அந்த ஆய்வாளர் சாதிப்பர். விவிலியம் குறிப்பிடும் ஆதம், ஏவாள் ஆகியோரே 'ஆதிபகவன்' என்பார் அந்த அறிஞர்.

## பள்ளி இஸ்லாமியர் தொழும் இடமா?

செய்குத்தம்பிப் பாவலர் திருவள்ளுவரைப் பல்வேறு சமயத்தாரும் உரிமை கொண்டாடுவதில் காய்ப்புக் கொள்ள வில்லை. இருப்பினும் திருவள்ளுவர் உளக்கருத்தறிந்து உரைகாண வேண்டும்; குறிப்பிட்ட ஒரு சமயத்திற்கு உரிமை உடையவர் திருவள்ளுவர் என்பது பெருமையில்லை. கிறித்தவமும் இஸ்லாமும் திருவள்ளுவர் அறியாச் சமயங்களாகும். திருவள்ளுவர் குறிப்பிடும் ஆதிபகவன். ஆதம் ஏவாள் எனக் கொள்ளப்படுமாயின் இஸ்லாமிய ஆகமமாகிய திருக்குர் ஆனுக்கும் அது பொருந்துவதேயாகும். ஆதம் ஏவாள் இருவரின் வழியே மனிதகுலம் பல்கிப் பெருகியது என்ற உண்மை கிறித்தவத் திற்கும் இஸ்லாத்திற்கும் உரிய பொது உண்மையாகும். திருவள்ளுவர் கிறித்தவம் இஸ்லாம் ஆகிய சமயங்களை முந்திய

பழந்தமிழர் கொள்கையாகும். இவ்வுண்மையைப் பேசுவதாலேயே திருவள்ளுவர் அச்சமயங்களை ஏற்றவராக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதுவே செய்குத்தம்பிப் பாவலரின் தெளிவான கொள்கையாகும். சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் மேடைப்பேச்சில் இரண்டு திருக்குறள்களை வேறு வேறு பேச்சுக்களில் எடுத்துக் கூறி இப்படி நான் உரைகூறுவதன் மூலம் திருவள்ளுவர் இஸ்லாமியர் ஆகிவிடுவாரா எனப்பெரு நகைப்புக்கிடையே கூறினார். ஒருசில சொற்களின் ஆட்சி கொண்ட திருவள்ளுவரை ஒரு சமயத்திற்குள் அடக்கிவிடக் கூடாது என்பதே பாவலர் கருத்து.

**'கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்**
**குழாஅத்துப் பேதை புகல்'.**

(குறள்-840)

என்ற குறளில் திருவள்ளுவர் சான்றோர் அவையகத்து அறிவிலா ஒருவன் புகுவது கழுவித் தூய்மை செய்யாத காலைப் பள்ளியுள் வைத்தது ஒக்கும் எனக் குறிப்பிடுவார். இக்குறள் கொண்டு வள்ளுவரை இஸ்லாத்துக்குள் அடக்க நான் முயல்வது முறையா? எனத் தமக்கேயுரிய நையாண்டி நயத்தோடு கேட்டார். பள்ளி என்ற சொல்லாட்சி இஸ்லாமியர்கள் இறைவனை வணங்குகின்ற மசூதிகளையே இன்று குறிக்கின்றது. மேலும் தொழுகைக்குச் செல்லும் முஸ்லிம்கள் காலைக் கழுவிய பிறகே பள்ளியினுள் காலை வைப்பார்கள். இந்நிலை கொண்டு திருக்குறளுக்கு உரைகாணல் பொருத்தமுடையதேனும் அது திருவள்ளுவர் கருத்தாகுமா? திருவள்ளுவருக்குப் பிறகு பல நூற்றாண்டுகள் கழித்தே இஸ்லாமியப் பள்ளிகள் தோன்றின. ஆகவே திருவள்ளுவர் குறிக்கும் பள்ளி இஸ்லாமியர் தொழுமிடம் ஆகாது என்பது தெளிவு. திருவள்ளுவர் குறிப்பிடும் பள்ளி படுக்கின்ற தூய இடமாகும். பரிமேலழகர் அச்சொல்லுக்கு அமளி எனப் பொருள் கொள்வார். வள்ளுவர் குறித்த பள்ளி சமணப் பள்ளியாகவும் இருக்கக்கூடும். இங்கு பாவலர் நோக்கம் இத்தகு சொல்லாட்சிகளைக் கொண்டு திருவள்ளுவரைக் குறிப்பிட்ட சமயத்தார் தன் சமயத்துள் அடக்கிவிடக்கூடாது என்பதேயாகும். பாவலர் எடுத்தாண்ட மற்றொரு குறள் கொல்லாமை என்ற அதிகாரத்துவரும் 'கொல்லான் புலாலை மறுத்தானை' எனத் தொடங்கும் (குறள்-260) குறளாகும். (இக்குறளுக்குப் பாவலர் தந்த வேடிக்கையான கருத்து பாவலரின் மனநலமும் நாநலமும் என்ற ஆறாவது அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.)

## பாவலர் திருமணத்துக்குக் காட்டிய வழி

செய்குத்தம்பிப் பாவலர் ஒரு சமயத்தில் தம்மாணவருக்கு வழிகாட்ட ஒரு திருக்குறளை எடுத்து விளக்கினார். பாவலரது மாணவர் பாவலரிடம் வந்து தன்னைத் திருமணம் செய்து கொள்ளத் தாய் வற்புறுத்துவதாகவும் தனக்குத் திருமணத்தில் பெரிய நாட்டம் இல்லை எனவும் கூறித் தனக்கு வழிகாட்ட வேண்டுகோள் விடுத்தார். அப்போது பாவலர், உன் தாயின் நாட்டத்தை நிறைவேற்றுதல் உனது கடமையாகும்; ஆகவே திருமணம் செய்து கொள்வதே நல்லது. ஆனால் மணப் பெண்ணைத் தேர்ந்தெடுக்கும்போது மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். உலக வழக்கப்படி பணம், அழகு, குணம் ஆகியவை பார்த்துத் திருமணம் செய்யப்படும். இது பொருத்தமுடையதே எனினும் பெண்ணின் பொருட் தகுதியை முதன்மையாகக் கொள்ளக்கூடாது. பணம் வாழ்க்கைக்கு இன்றியமையாதது எனினும் குறைவான பணத்தைக் கொண்டு கூட நிறைவான வாழ்க்கை வாழ முடியும். ஆகவே குணநிறைவுக்கு முதலிடம் தந்து அழகு, பணம் ஆகியவற்றிற்கு அடுத்த இடம் தந்து பெண்ணைத் தேர்ந்தெடுக்க வேண்டும்' எனப் பொருத்தமாக வழிகாட்டினார். தம் மாணவருக்கு விளங்கும்படியாக ஒரு குறளை எடுத்துக்காட்டி விளக்கினார்.

> **''இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
> **இல்லவள் மாணாக் கடை''.**

(குறள்-53)

என்பது திருக்குறள். இக்குறளில் இரண்டு முறை பயன்படுத்தப்பட்ட 'மாண்பு' என்ற சொல்லுக்கு 'நற்குண நற்செயல்' என்று பரிமேலழகர் உரை எழுதுவார். பரிமேலழகரும் பிறஉரையாசிரியர்களும் உடன்பட்ட உரைப்படி சிறந்த பெண் நற்குண நற்செயல்கள் பெற்றவளாக இருக்க வேண்டும். அழகிலும் பொருளிலும் சிறந்தவளாக விளங்கினால் அது இன்னும் சிறப்பே. ஆயினும் நற்குண நற்செயல்களில் சிறந்தவளாக விளங்க வேண்டியது இன்றியமையாத முதல் தகுதியாகும் எனத் திருவள்ளுவரையும் பரிமேலழகரையும் சான்றுகாட்டி விளக்கினார்.

## நபிகளார் நல்வழிகாட்டல்

செய்குத்தம்பிப் பாவலர் தம் மாணவரை நெறிப்படுத்திய நிகழ்ச்சியில் நபிகள் நாயகம் வலியுறுத்திய வழிகாட்டும் பொருள் மொழியின் நுட்பம் நிறைந்து கிடக்கிறது. ஆனால் தாம்

வழிகாட்டும் மாணவருக்கு நபிகள் நாயகத்தின் நல்வழிகாட்டல் தெரியாது; திருவள்ளுவரையும் பரிமேலழகரையும் தெரியும். ஆகவே அச்சூழ்நிலைக்குத்தக்க குறளைக்காட்டி வழிப் படுத்தினார். வழிப்படுத்திய முறையில் முழுக்க முழுக்க நபிகள் நாயகத்தைப் பின்பற்றினார். நபிகள் நாயகத்தின் குறிப்பிட்ட பொருள்மொழி உணர்த்தும் பொருள் அனைத்தையும் நுட்பமாக உரைத்துக்காட்டினார். ''நான்கு நோக்கங்களுக்காக ஒரு பெண் மணம் முடிக்கப்படுகிறாள்: 1. அவளது செல்வத்திற்காக. 2. அவளது குடும்பப் பாரம்பரியத்திற்காக. 3. அவளது அழகிற்காக. 4. அவளது நல்லொழுக்கத்திற்காக. ஆகவே நல்லொழுக்கம் உடையவளை மணந்து வெற்றி அடைந்துகொள்!''[2] என்பது நபிகளார் பொருள்மொழி, நபிகள் நாயகம் தமது பொருள் மொழி மூலம் உலக மக்களுக்கு எதனை உணர்த்த விரும்பினார்களோ அவற்றையே பாவலர் தம் மாணவருக்கு உணர்த்தினார். நபிகளார் பொதுவாக நான்கு காரணங்களின் அடிப்படையில் பெண் தேர்ந்தெடுக்கப்படுகிறாள்: ஆனால் நல்லொழுக்கத்திற்காகத் தெரிந்தெடுக்கப்படுவதே வெற்றிக்குக் காரணமாக அமையும் எனக் குறிப்பிட்டனர். பிற காரணங்களும் பின்பற்றத்தக்கனவே எனினும் நல்லொழுக்கத்திற்கு முதன்மை கொடுப்பதே வெற்றியைத் தரும் என்ற நபிகளாரின் வழிகாட்டலையே பெயர் குறிப்பிடாமல் பாவலர் எடுத்துக்காட்டினார் என்பது அறியத்தக்கதாகும். குறள் கூறும் வாழ்க்கை உண்மைகள் பின் பற்றப்பட வேண்டும் என்பதுவே பாவலரது பெரு விருப்பமாகும்.

## குறளறிஞர் போற்றிய பாவலர்

> **''இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்**
> **புணரின் வெகுளாமை நன்று''**
>
> (குறள்-308)

என்பது வெகுளாமை பற்றிய வள்ளுவர் குறளாகும். 'பல சுடரை உடைத்தாய பேரெரி வந்து தோய்ந்தா லொத்த இன்னாதவற்றை ஒருவன் செய்தானாயினும் அவனை வெகுளாமை ஒருவற்குக் கூடுமாயின் அது நன்று' என்பது பரிமேலழகர் உரை. இவ் வுரையினை அங்ஙனமே ஏற்றுக்கொண்டு மேலும் வேறொரு கருத்திற்கும் இக்குறள் இடம் தருகிறது எனப் பாவலர் கூறினார். மிகக்கொடிய தீமைகளைச் செய்த ஒருவரையும் கூடுமாயின் வெகுளாதிருத்தல் நலம் என்பது பரிமேலழகர் கருத்து. பாவலரோ அதனை ஏற்றுக் கொண்டு பரிமேலழகர் போலச் சொல் முறை மாற்றம் செய்யாது கிடந்தவாறே 'புணரின் வெகுளாமை நன்று'

எனவும் பொருள் கொள்ளலாம் என்றார். பலகொடிய தீமை செய்தவனே மீண்டும் வந்து நட்புக் கொள்வானாயின் வெகுளாமை நன்று என உரைக்கலாம் எனக் கூறுவார். மதுரைப் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆய்வுத்துறைத் தலைவராக விளங்கிய மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர் திருக்குறளை நிறைவாகக் கற்ற பேரறிஞர். திருக்குறளுக்குப் பின்னர் தோன்றிய எல்லாத் தமிழ் நூல்களும் இன்றுவரை திருவள்ளுவரைச் சொல்லாலும் பொருளாலும் ஏற்றுப் போற்றி யுள்ளன என வலியுறுத்தி எழுதிய பேரறிஞர். அவர் இக்குறளுக்குப் பாவலர் ஆற்றொழுக்காகப் பொருள் கொண்டு உணர்த்திய பொருள் தாமும் கருதியதே என உரைத்தனர். மேலும் பல குறள்களுக்குப் பாவலர் கூறிய உரை நுட்பங்களை ஏற்றுப் பாராட்டினர்.[3]

## பாவலரும் நாவலரும்

டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார் வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டே தமிழ்ப்பணியில் தலை நின்றவர். தமிழ் எல்லா நிலைகளிலும் பயிற்றுமொழியாக விளங்கித் தமிழ் மாணாக்கர்க்கு முழுப் பயன்தரவேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தி வந்தவர். எழுத்திலும் பேச்சிலும் நினைத்ததை அஞ்சாது வெளியிட்டு நக்கீரர் எனப்பெயர் பெற்றுப் புகழ் ஈட்டியவர். அப்பெரியார் 1938 அல்லது 1940-ஆம் ஆண்டில் நாஞ்சில் நாடு முழுமையும் பயணம் செய்து இலக்கியப் பொழிவுகள் ஆற்றினார். திருக்குறளில் ஆர்வம் கொண்டு பல பொழிவுகளைத் திருக்குறள் பற்றியே நிகழ்த்தினார். கோட்டாறு பட்டாரியர் நெடுந்தெருவில் பாவலர் தலைமையில் சோமசுந்தர பாரதியார் ஒரு குறளுக்குப் பரிமேலழகர் கூறிய உரையை மறுத்துப் புத்துரை கூறினார்.

> **"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**
> **கடையரே கல்லா தவர்"**

(குறள்-395)

என்ற திருக்குறளுக்குப் பரிமேலழகர், "செல்வன் முன் ஏழைகள் பணிந்து நிற்குமாறு போல் தாமும் ஆசிரியர் முன் ஏக்கற்று (ஆசையால் தாழ்ந்து) நின்றும் கற்றார், தலையாயினர். அந் நிலைக்கு நாணிக் கல்லாதவர் எஞ்ஞான்றும் இழிந்தாரேயாவர்" என உரை வழங்கினார். பாரதியார் இவ்வுரை பொருந்தாது என மறுத்துப் புத்துரை வழங்கினார். தம் கருத்துக்கு பாரதியார் பல காரணங்களைக் காட்டினார். கேட்டோர் கைதட்டி ஆர்ப்பரித்தனர். இக்குறள் இரண்டு தொடர்களாக அமைந்துள்ளன. இரண்டாவது

அடியில் இரண்டாவது தொடரில் கல்லாதவர் கடையரே எனக் கூறுகிறார். முதல் தொடரில் இதற்கு இயையக் கற்றார் தலையாயவர் என வந்திருக்க வேண்டும். தமிழ் வாக்கியத்தில் பயனிலை கூறாது விடுக்கும் மரபில்லை. பரிமேலழகர் உரைத்த உரையின்படி முதல் தொடர் பயனிலை இல்லாது பயனிலையை நாம் உய்த்துணரும் வண்ணம் விடுக்கப்பட்டுள்ளது. பயனிலை கூறாது பழியை வள்ளுவர் மேல் சுமத்தலாமா? எனக்கேட்டு வள்ளுவர் பயனிலையைக் கூறியிருக்கிறார் என்றார். உடையார் என்னும் சொல்லே பயனிலையாகும். இங்ஙனம் இக்குறளுக்குப் பொருள் கொள்வதே பொருத்தமும் சிறப்புமாகும் என்ற பாரதியார் சொற்பொழிவை முடித்துப் பாவலரது தலைமையுரை தொடங்கிய நேரம் மழை பொழியத் தொடங்கிவிட்டது. அவையோர் விருப்பத்திற்கிணங்க மறுநாள் அதே இடத்தில் பாவலர் தலைமையுரை ஆற்றினார். பாரதியார் கூட்டத்திற்கு வர இயலவில்லை.

## பரிமேலழகரைப் பாராட்டிய பாவலர்

தலைமையுரையில் பாவலர் பொதுவாக உரைகாண்பவர் தம்கருத்தை வள்ளுவர் மேல் திணிப்பதை மறுத்தார். சோமசுந்தர பாரதியார் புலமையில் பாவலருக்கு ஐயமில்லை. ஆனால் இக்குறளுக்குப் பரிமேலழகர் உரையை மறுத்துப் பாரதியார் இரண்டு காரணங்கள் கூறினர். ஒன்று பயனிலை இன்றிப் பாடல் அமையாது; அவ்வாறு அமைந்த பாடலே இல்லை என்பது. இரண்டாவது காரணம் உடையார் என்ற பயனிலைச் சொல் குறளில் உண்டு என்பது. இவ்விரு கருத்துக்களையும் நான் மறுக்கிறேன். தமிழில் பயனிலை இன்றித் தொடர் அமையாது என்பது உண்மையே. எனினும் பயனிலையை வருவித்துக் கொள்கின்ற வகையில் தமிழில் உலக வழக்கிலும் செய்யும் வழக்கிலும் தொடர்கள் அமையும். இதனை எடுத்தது யார்? என்ற வினாவிற்கு நான்தான் என்ற விடை பேச்சு வழக்கில் கூறப்படும். இங்கே எடுத்தேன் என்ற பயனிலை தொக்கி நிற்கின்றது. அதுபோலவே திருவள்ளுவரும் பயனிலையை அவாய் நிலையாக வருவித்துப் பாடலைப் பாடியுள்ளனர்.

**''மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை**
**என்னோற்றான் கொல்லெனும் சொல்''**

(குறள்-70)

இக்குறளில் பயனிலை அவாய்நிலையாக வருவித்துக் கொள்ள வேண்டிய நிலையில் வந்துள்ளது காண்க. தந்தைக்கு மகன்

செய்யும் உதவி இவன் தந்தை இவனைப் பெறுதற்கு என்ன தவம் செய்தானோ என்ற சொல்லை நிகழ்த்துதல் எனப்பரிமேலழகர் பொருத்தமாக உரை கொள்வார். இதபோலவே முன்னர் குறிக்கப் பெற்ற கல்வி அதிகாரக் குறளிலும் கல்லாதவர் கடையர் எனக் கூறியதற்கிணங்கக் கற்றார் தலையாயவர் என்னும் பயனிலையை வருவித்துக் கொள்ளும்படி வள்ளுவர் பாடியிருக்கிறார் எனத் தெளிவுபடுத்திப் பின்னர் பாரதியார் கூறிய புதுப்பொருளையும் மறுத்தார். இரண்டு பொருள்களைக் கையில் வைத்துக் கொண்டு ஒன்றைப் பெரியது என்று கூறும்போது மற்றது சிறியது என்பது கூறாமலே விளங்கும். அன்றிப் பிறவாறாகக் கொள்ளும் மரபில்லை. திருவள்ளுவர் பெருமை சிறுமை. பெரியார் சிறியார், அறிவுடையார் அறிவிலார் என இணைத்துப் பாடியிருக்கிறார். இக்குறளில் வலிந்து உடையார் என்ற சொல்லைப் பயனிலை ஆக்குவது ஏற்றுக் கொள்ள முடியாதது. மேலும் உடையார் என்ற சொல்லைப் பயனிலையாகக் கொள்ளின் 'முன்' என்னும் சொல் வறிதே நிற்கும் என எடுத்து விளக்கிப் பரிமேலழகர் உரையே சிறந்தது என்பதை உறுதிபட உரைக்கின்றேன் என முடித்தார் பாவலர்.[4]

உடையார் முன் எனத் தொடங்கும் குறளுக்குப் பரிமேலழகர் உரைத்த உரையே பொருத்தமானது எனப் பாவலர் கூறிய கருத்தை மதுரைப் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆய்வுத்துறைத் தலைவர் மகாவித்துவான் ச.தண்டபாணிதேசிகர் உடன்பட்டு உரைத்ததும் அறியத்தக்கதாகும்.[5]

## வள்ளுவர்போற்றிய வாய்மை

செய்குத்தம்பிப் பாவலர் தம் எழுத்திலும் பேச்சிலும் திருக் குறளைப் போற்றியுரைத்துப் புதுநுட்பம் நிறைந்த பொருள்களை உரைத்துக் கேட்டாரை மகிழ்வித்ததற்கு இறுதியாக ஒரு சான்று.

> **"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த**
> **நன்மை பயக்கு மெனின்".**

(குறள்-292)

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் பிரசங்கக் களஞ்சியம் பாவலர் அவர்கள் மேற்குறித்த குறளுக்கு மிகச்சிறந்த குறள்விருந்து படைத்தார். 'புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்'' என்ற தொடரில் உள்ள உம்மை பொய்ம்மை நன்மை பயக்காது என்ற கருத்தைத் தெளிவுபடுத்தும். ஒருவேளை பொய்ச்சொல் சொன்னவருக்கோ கேட்டவருக்கோ நன்மையைத் தந்தாலும் அவர்களுக்கு அது வேறுவகையில் தீமையைத் தருவது

ஆகலாம். அல்லது பிறருக்கு அதனால் தீமை விளையலாம். ஆகவே இச்சிறு நன்மையைக் கருத்தில் கொண்டு பொய்ச் சொல் நன்மை பயக்கும் எனக்கூற முடியாது என்பது திருவள்ளுவர் துணிவு. எங்கோ ஓரிடத்தில் செய்த சிறு நன்மையைக் கருதிப் பொய்ச் சொல்லை வாய்மைச் சொல்லாகச் சான்றோர் கருத மாட்டார்கள். வாய்மைச் சொல் போலப் பொய்ச் சொல் நன்மை தரும் சூழ்நிலைகளைக் கற்பித்துக் கூறிப் பொய்ச் சொல்லை வாய்மைச் சொல்லாக ஆக்க முனைந்தால் திருவள்ளுவர் அதற்கு ஒருக்காலும் உடன்படார். நன்மை தருகின்ற பொய்ம்மை வாய்மைக்கு இடத்த எனக் கூறலாமே தவிர வாய்மைக்கு வலத்த எனக் கூற முடியாது. இடப்பக்கத்தே ஒரு தனியிடம் ஒதுக்கி உண்மைக்குப் பக்கத்தில் வைக்கலாமே தவிர அதனை உண்மை ஆக்கிவிட முடியாது என நயவுரை தந்து திருவள்ளுவர் உள்ளத்தை உள்ளபடி உணர்த்திக் காட்டினார்.

## பாவலர் கம்பரைப் போற்றக் காரணம்

செய்குத்தம்பிப் பாவலர் பேச்சிலும், எழுத்திலும் சொற்பொழிவுகளிலும் கம்பர் காப்பியப் பாடல்களை மிகுதியாகக் கையாண்டு கம்பர் உளமறிந்து அவர் பாடல்களுக்கு உரை காண்பது அவரது பழக்கம். திருவள்ளுவரைப் போலவே கம்பரும் பாவலர் உளம் பிணித்த புலவர் ஆவார். அதற்கும் காரணம் உண்டு. வைணவக் காப்பியம் செய்தாலும் வைணவத் தளத்தில் நின்று கொண்டே உலகோரை நோக்கிப் பொதுவாகப் பேசும் இயல்பினர் கம்பர். கம்பரது கடவுள் வாழ்த்தின் முதல் பாடலே இதற்குச் சான்று. கம்பருக்கெனச் சமயக் கொள்கைகள் இருந்தாலும் மக்களைச் சமயங்கள் வழிப்பிரிக்காது ஒன்றுபடுத்தும் பல்வேறு செய்திகளைக் கம்பர் காப்பியத்துள் காணலாம். சமயப் பொதுநோக்கில் கம்பரை உடன்பட்ட பாவலர் சுவைதரும் கம்பர் காப்பியப் பாக்களின் பொருள் தேர்ந்து புது நுணுக்கங்களை புகுத்துவதில் நிகரின்றி விளங்கினார்.

'எண்ணிலா அருந்தவத்தோன்' என விசுவாமித்திரரைக் கம்பர் போற்றுவர். தயரதனிடம் வந்து தாம் செய்யப்போகும் வேள்வியைக் காப்பதற்காக நின் மக்கள் நால்வரில் கரிய செம்மல் ஒருவனைத் தருக என விசுவாமித்திரர் வேண்டி நிற்பார். தயரதனிடம் வந்த விசுவாமித்திரரைக் கம்பர் 'எண்ணிலா அருந்தவத்தோன்' எனக் குறிக்கின்றார். இத்தொடர் பல்வேறு நுணுக்கங்கள் கொண்டது. கம்பரது நுண்மாண் நுழை புலன் காட்டும் மிகப்பல தொடர்களில் இதுவும் ஒன்று எனக்கூறி,

இத்தொடருக்கு ஏழு பொருள்களைப் பாவலர் விரித்துரைத்தார். பாவலர் கண்ட ஏழு கருத்துக்களையும் கம்பர் கருதியிருப்பாரா என்ற எண்ணம் தோன்றலாம். எல்லாக் கருத்துக்களையும் கருதிக் கம்பர் அத்தொடரைப் படைக்காமல் இருந்திருக்கலாம். திறனாய்வாளர் என்ற நிலையில் கம்பர் காப்பியத்தில் வேறு வேறிடங்களில் விளக்கி உரைத்த பல்வேறு செய்திகளையும் திரட்டித்தந்து, படிப்பவர் கருத்தொருமைப்பாடு கொள்ள வைப்பது இங்குப் பாவலர் நோக்கம். கம்பனை முற்றும் கற்ற தெளிவும் கம்பர் கருத்துக்கு முரணானதைச் சொல்லாத சிறப்பும் வேறு வேறு இடங்களில் கம்பர் கூறிய கருத்துக்களையெல்லாம் ஒன்றுதிரட்டித் தரும் அருமையும் பாவலர் நயவுரைகளில் பொருந்தி நிற்கின்றன. 'எண்ணிலா அருந்தவத்தோன்' என்ற தொடரைக் கம்பர் மிக நெடுங்காலம் அருந்தவம் புரிந்து எண்ணிப் பார்க்க முடியாத தவநிலையில் சிறந்தவர் எனக் கருதியே விசுவாமித்திரருக்குச் சூட்டியிருப்பார். அக்கருத்துக்கு முரண்படாத வகையில் மேலும் அரண்சேர்க்கும் வகையில் பலப்பல நயங்களைப் பாவலர் எடுத்துக்காட்டுவது அவரது தனிச்சிறப்பு.

| | | |
|---|---|---|
| 1. எண்ணிலா + அருந்தவத்தோன் | = | அளவில்லாத காலம் அருந்தவம் செய்தவன். |
| 2. எண் + இலா + அருந்தவத்தோன் | = | எண்ணிப்பார்; யாரும் செய்யாத இயலாத அரிய தவத்தைச் செய்தவன். |
| 3. எண் + இலா + அருந்தவத்தோன் | = | எண்ணிக்கையில் அடங்காத அரிய தவத்தையுடையவன். |
| 4. எண் + நிலா + அருந்தவத்தோன் | = | அளவில் நிற்காத அருந்தவத்தையுடையவன். |
| 5. எண்ணில் + ஆ! + அருந்தவத்தோன் | = | எண்ணிப்பார்ப்பின் ஆச்சரியப்படத்தக்க அருந்தவத்தையுடையவன். |
| 6. எள் + நிலா + அருந்தவத்தோன் | = | இகழ்ச்சியில்லாத அருந்தவத்தையுடையவன். |

| | |
|---|---|
| 7. எண்ணில் + ஆ + வரும் + தவத்தோன் | விசுவாமித்திரர் வரலாற்றை எண்ணிப்பார்த்தால் காமதேனு எனும் பசுவால் வந்த பெருந்தவத்தை யுடையவர். |

## விசுவாமித்திரர் தனிப்பெருமை

ஒரே அடிப்படைக் கருத்தை மாறாது வலியுறுத்தும் வகையில் சொற்களைப் பிரித்து முதலில் ஆறு பொருள்களைக் கண்ட பாவலர் இச்சிறப்புக்களெல்லாம் தவசிகள் அனைவருக்கும் பொதுவாகும் எனக் கூறி விசுவாமித்திரர் தனிச்சிறப்பைக் கம்பர் எடுத்துக்காட்டியுள்ளபடி ஏழாவது பொருளைக் காண்பர். நண்பர் குழுவினர் ஏழுவகைக் கருத்துக்களையும் கேட்டறிந்து கம்பர் இவை அனைத்தையும் கருதியே பாடியிருப்பார் எனக் கூறினர். பாவலரோ முனிவோர் அனைவருக்கும் பொருந்தும் முந்திய குறிப்புக்களைவிட விசுவாமித்திரர் ஒருவரை மட்டும் குறிக்கும் இறுதிப்பொருளே கற்போர்க்கு மிகவும் துணைபுரிவதாகும் எனக்கருதினார். காமதேனு எனும் பசுவால் பெருந்தவ உள்ளத்தைப் பெற்ற விசுவாமித்திரர் என்ற குறிப்பு கம்பர் காப்பியத்தை முழுமையும் படிப்போர்க்குப் பேருதவி புரியும். இப்பாடல் பாடப்பெற்ற களம் முதல் இராமன் சீதை திருமணம் வரை இராமாயணக் கதை விசுவாமித்திரர் தவவலிமை பற்றியே வளர்கின்றது. அதனைக் கருத்தில் கொண்டே பாவலர் 'ஆ' என்பதற்குக் காமதேனு என்னும் பசு எனப்பொருள் உரைப்பார். அதுவரை அரச வாழ்வில் திளைத்திருந்த விசுவாமித்திரர் வசிட்டமுனிவரிடம் சென்று காமதேனு என்னும் பசுவின் பெருமையறிந்து அதனைப்பெற விரும்பிப் பெற முடியாமையால் தவவாழ்வின் பெருமையை உணர்ந்து அருந்தவத்தரானார் எனக்காட்டுவதே கம்பர் கருத்து. (மிதிலைக் காட்சிப் படலம். பா-90-136) இதனை விளக்கவே ஆ + வரும் + தவத்தோன் எனப்பிரித்துப் பசுவால் தவத்தின் பெருமையை முற்றும் உணர்ந்து தவவலிமை பெற்ற விசுவாமித்திரர் எனக் காட்டினார். அயோத்தியா காண்டத்தில் காப்பியவளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கும் விசுவாமித்திரர் பெருமை காட்டுவதும் வசிட்டரோடு உறவு கொண்டு துறவு போற்றும் தவ வாழ்க்கையின் பெருமை உணர்ந்த விசுவாமித்திரர் பெருமை காட்டுவதுமே இங்குப் பாவலர் கருத்தாகும்.

## பாவலரும் டிகேசியும்

ரசிகமணி எனப்பலராலும் பாராட்டிப் போற்றப் பெறுபவர் டி.கே.சி. என அன்போடு அழைக்கப்படுகிற சிதம்பரநாதர் ஆவர். கம்பன் காப்பியச்சுவை போற்றிப் பிறரும் சுவைக்குமாறு கம்பன் பாடல்களைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டுள்ளார். அந்நூலில் கம்பன் பாடல்களாகக் கருதப்படுவனவற்றுள் சில மாற்றங்களைச் செய்து (பாடபேதங்கள்) வெளியிட்டுள்ளார். இதனைப் பாவேந்தர் பாரதிதாசனார் போன்றவர்கள் ஏற்பதில்லை. பாவலர் டி.கே.சி. அவர்களையும் அவர்களது புலமையையும் மதிப்பவர். எனினும் ஒரு பாடலில் டி.கே.சி. அவர்கள் மேற்கொண்ட பாடபேதத்தை மறுத்துக் கூறினார். கம்பரது இராமாயணத் தாடகை வதைப்படலத்தில் தாடகை மீது இராமன் ஏவிய அம்பின் ஆற்றலை விளக்கும் ஒரு பாடல் அமைந்துள்ளது. அப்பாடல், 'சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம் கரிய செம்மல்' எனத் தொடங்குகிறது. இப்பாடலுள் 'கரிய செம்மல்' என்ற இறுதிச்சீரை 'ஒன்றை செம்மல்' என ரசிகமணி செய்த மாற்றதைப் பாவலர் ஏற்கவில்லை. 'கரியசெம்மல்' என்ற தொடர் கம்பன் விரும்பிக் காப்பியத்தில் பலமுறை ஆண்டது. தயரதன் மக்களுள் இராமனை மட்டுமே குறிப்பது. விசுவாமித்திர முனிவர் தயரதனைச் சந்தித்துத் தமக்கு உதவியாகக் கரியசெம்மல் ஆகிய இராமனைத் தருக எனக் கேட்டது காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. இராமன் விடுத்த அம்பு ஒன்று என்பது பாடலில் வேறு இடத்தில் குறிக்கப் பெறவில்லை. ஆதலால் சுடுசரம் ஒன்றைச் செம்மல் என ரசிகமணி மாற்றம் செய்தனர். இதனைக் கண்டு வியந்த பாவலர் அவர்கள் இராமன் விடுத்த அம்பு ஒன்று என வெளிப்படையாகக் குறிக்கப்படவில்லையாயினும் பாடல் இறுதியில் 'போயிற்று அன்றே' என முடிக்கும் போது குறிப்பில் காட்டப்படும். இதனைக் காட்டக் 'கரிய செம்மல்' என்ற தொடரை 'ஒன்றைச் செம்மல்' என மாற்றியது அவ்வாறு பாடபேதம் இருந்தாலும் சிறப்பாகாது. நின்று பயனின்மை என்று தமிழ் இலக்கணத்துக் கூறப்படும் குற்றத்திற்குச் சான்றாக இம்மாற்றம் அமைந்துவிட்டது எனக்கூறி வருந்தினார். டி.கே.சி. அவர்கள் செய்த மாற்றத்தை ஏற்காத அறிஞர் பாவலராக இருந்துவிட்ட காரணத்தால் நாஞ்சில் நாட்டு அறிஞர் பெருமக்கள் பாவலரது திருத்தத்தை ஏற்றுக் கொண்டனர்.

## ஆடவர் பெண்மையை அவாவும் தோளினான்

கம்பனது தாடகை வதைப் படலத்தில் (பா-24) இடம்பெறும்

மற்றொரு பாடலின் மூன்றாவது அடி மிகுந்த சர்ச்சைக்கு உள்ளானது.

> "சூடக அரவுறழ் சூலக் கையினள்
> காடுறை வாழ்க்கையள் கண்ணில் காண்பரேல்
> ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்!
> 'தாடகை' என்பதச் சழக்கி நாமமே'
>
> (பா-24)

என்பது பாடல். இப்பாடல் விசுவாமித்திர முனிவர் கூற்றாக வருவது; இராமனது தோள்வலிமை காட்டுவது. இராமனது அழகை வருணிக்கும் பாடல் ஆகாது. தாடகை மீது இராமன் அம்பு எய்யத் தூண்டுவது இப்பாடல். விசுவாமித்திர முனிவர் மணமாகாத இளைஞன் இராமனை நோக்கி எதிரே நிற்கும் அரக்கருள் கொடுமை மிக்க பெண்வடிவம் கொண்ட அரக்கியைக் கொல்லத் தூண்டி அவனது தோள்வலிமையைக் கூறும் பாடல் இது. இப் பாடலின் மூன்றாவது அடியில் 'ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்' என வரும் பகுதிக்குப் பொருள் காண்பவரெல்லாம் இராமனுடைய தோளின் அழகைக் கண்டு ஆண்களெல்லாம் பெண்ணாக விரும்புவர் எனப்பொருள் காண்பாராயினர். ஆடவர் பெண்ணாக விரும்புகின்ற தோள் அழகு முனிவரால் பேசப்பட்டது எனப்பொருள் கொண்டனர். பாவலர் இப் பொருளின் பொருந்தாமையை உணர்ந்தார். ராமனது அழகு நலத்தைக் கம்பர் காப்பியம் பல இடங்களில் பேசுகின்றது. இங்கு இராமனது தோள் அழகைப் பேசுவது பொருத்தமில்லை. முனிவர் பேசும் இராமனது தோள் நலம் தோள்வலிமையாகவே இருக்க வேண்டும். கதைப்போக்கு, களச்செய்தி, சொல்லைக் கூறுவார் தகுதி, சொல்லைக் கூறுவதன் நோக்கம் இவற்றை நோக்கி ஒரு சொல்லுக்குப் பொருள் காண வேண்டும் எனப் பாவலர் கூறிய போது இப்பாடற் பகுதியின் உண்மைப் பொருளை அறியும் அவா அனைவர் உள்ளத்திலும் எழுந்தது. அரக்கி தாடகை பெண் உருவில் இருந்தாலும் அவள் பெண் இல்லை; அவள் பெண் எனக் கருதி நீ அவளைக் கொல்லாதுவிட்டால் கொடிய ஆடவர்கள் எல்லாம் பெண் உருக்கொண்டு நின் அம்புக்குத் தப்பிவிட முயல்வர்; ஆகவே தாடகையைக் கொன்று அந்நிலை தோன்றாமல் காப்பது உன் கடமை என இராமனை நோக்கி விசுவாமித்ரர் கூறினார் எனப்பொருள் கொள்வதே பொருத்தம் மிக்கது எனப் பாவலர் அமைதியாகக் கூறி முடித்த போது, கேட்டோர் உண்மைப் பொருள் அறிந்து உவகை கொண்டனர். பலர் வாயில் கூறப்பட்டாலும் பொருந்தாப் பொருள் பொருந்தாப் பொருளே;

புலவனுக்கும் அப்பொருள் சிறப்புத் தராது. காப்பியத்தைக் கற்போர்க்கும் அறிவூக்கம் தராது நிற்கும் வறிய பொருளைப் புனைந்து கூறுவதைப் பாவலர் வெறுத்தார்.

## பொருத்தமாகப் பொருள் காணும் பாவலர்

பொருத்தமான இடத்தில் பொருத்தமான பொருளைத் தந்து, படைத்த புலவனுக்கும் படைக்கப்பட்ட பாத்திரங்களுக்கும் படிக்கும் மனிதர்களுக்கும் பெருமை சேர்ப்பது பாவலரது நுழைபுல மாண்பு. இச்சிறப்புக்கு மற்றொரு சான்றைக் கண்டு களிப்போம். இராஜகோபால அய்யர் என்ற பெயருடைய அழகிய பாண்டிபுரத்தைச் சேர்ந்த கம்பராமாயண விரிவுரையாளர் ஒருவர் பாவலரைச் சந்தித்தார். சந்திக்க வந்த நண்பர் சிந்தனையில் சிறப்பிடம் பெறும் பொருள் குறித்துப் பேசுவது பாவலர் வழக்கம். இராஜகோபாலரை நோக்கிப் பாவலர், கம்பன் பாடல் ஒன்றைக் காட்டிப் பொருள் வேண்டினார். வந்த நண்பரோ அனைவரும் தங்களிடம் விளக்கம் கேட்பர்; தாங்களோ என்னிடம் கேட்கிறீர்களே என வியந்தவராகப் பாடலை நோக்கி உரை பகர்ந்தார்.

**''என்றவன் இயம்பலும் எடுத்த சீற்றத்தள்**
**கொன்றன இன்னலள் கொதிக்கும் உள்ளத்தள்**
**நின்றநின் நிலையிது நெறியிற் றன்றெனா**
**வன்றறு கண்ணினள் வயிர்த்துக் கூறுவாள்''.**

(ஆரணிய காண்டம், இராவணன் சூழ்ச்சிப் படலம், பா-12)

இப்பாடல் இலக்குவனை நோக்கிச் சீதை சினந்து கூறியது. மாரீசன் மாயமான் வடிவில் வர அம்மானைப் பிடித்துத் தருமாறு சீதை வற்புறுத்த இராமன் மானின் பின்னே ஏக, இராமனது அம்பால் அடிபட்டுக் கீழே விழுந்து இறக்கும் மாரீசன் 'சீதா, இலக்குவா' என ஒலியெழுப்ப அது கேட்டு இராமனுக்கு ஆபத்து வந்துவிட்டது எனக் கருதிச் சீதை வருந்துகிறாள். அவள் வருத்தம் முதலிரண்டு அடிகளில் விளக்கப்படுகிறது. ஆனால் இராமனுக்கு ஆபத்து நேர முடியாது என்ற எண்ணத்தில் இலக்குவன் சீதையைத் தேற்றிய வனாகப் புறப்படாது நின்றான். இராமனுக்கு என்ன நேர்ந்ததோ என்று வருத்தங் கொண்ட சீதை சினத்தோடு 'இலக்குவன் உடன் புறப்படாது நிற்றல்' முறையின் பாற்படாது எனக் கூறினாள். சீதையின் இக்கூற்றுக்கு விளக்கம் தந்தோர் அனைவரும் இலக்குவனை ஐயுற்றுச் சீதை இவ்வாறு உரைத்தாள் எனக்கூறி வந்ததையொட்டி இராஜகோபாலரும் அவ்வுரையையே கூறினார். அதுகேட்ட பாவலர் சீதையின் சொற்களுக்கு இவ்வாறு பொருள் கூறுதல் எவ்வகையிலும் பொருந்தாது; சீதையைத் தாய் எனக்கருதி

இராமனைத் தந்தை முதலாக அனைத்தும் ஆனவன் எனப்போற்றி வந்த இலக்குவனுக்குப் பெரும் பழி தருவதாம். இராமனுக்கு ஆபத்து விளைவிக்கும் ஆற்றலர் உலகத்து யாருமிலர் என்று கருதிய காரணத்தால் மாரீசன் மயக்கச் சொற்கேட்டு இலக்குவன் மயங்கவில்லை. இலக்குவனின் எண்ணம் இராமன் மேல் கொண்ட நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்ததாகும். மேலும் இராமனுடன் காட்டுக்குச் செல்லச் சுமித்திரையிடம் அனுமதி பெற இலக்குவன் சென்றபோது அவன் தாய் சுமித்திரை கூறிய சொற்கள் அனைவரும் அறிந்தவை. இராமன் இருக்கும் இடமே அயோத்தி எனக்கருதி அவனுக்குக் கேடு வருமாயின் அதன் முன்னர் செத்து மடிய வேண்டும் என்ற தாயின் கட்டளையை ஏற்றுக் கானகம் வந்தவன் இலக்குவன். அவன் ஒழுக்க நெறியில் ஐயங்கொண்டு சீதை சினந்ததாகக் கருதுவது யாருக்கும் பெருமை தராது. மேலும் இலக்குவனை ஐயுற்றுக் கூறுவதாகக் கருதுவது சீதைக்கும் பெருமை தராது. அனைத்தையும் உரைத்த பாவலர் நிறைவாக 'நின்ற நினது நிலை நெறியிற்று அன்று' என்று கூறிய சீதை சொற்களில் இப்பொருள் இல்லை. உலக நடப்பைக் கருதி இங்ஙனம் பொருள் கூறுதல் பொருந்தாது என விளக்கியமைந்தார்.

## வள்ளுவரையும் கம்பரையும் சரியாக அளந்தவர்

திருவள்ளுவர், கம்பர் போன்ற புலவர்களது உளமறிந்து உண்மை உரை காணும் சிறப்பு பாவலருக்கு இருந்தது. தமிழ் நூல்கள் அனைத்திலும் நுணுக்கமாக நோக்கி உண்மைப் பொருள் காணும் போக்கைப் பாவலர் போற்றியமைக்கு இவை போன்ற எண்ணற்ற நிகழ்ச்சிகள் சான்றாக அமைகின்றன. தமிழ்ப்புலவோர் அனைவரையும் தம் தகுதியால் அளந்த பாவலர் சிறப்பாகத் திருவள்ளுவரையும் கம்பரையும் சரியாக அளந்து கண்டமை நாம் கண்டு இன்புறத்தக்கதாகும்.

## அடிக்குறிப்பு

1. சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் நினைவு மலர், 1961, பக்.25
2. நபிகளாரின்பொன்மொழிகள்,ஸஹீஹுல்புகாரி, அறிவிப்பாளர் அபூஹுரைரா, ஐந்தாம் பாகம், எண்-5900, பக்.879

3. சி.குமரேசபிள்ளை, செந்தமிழ் வளர்த்த செய்குத்தம்பி, இரண்டாம் பாகம், பக்.118
4. மு.நூ., பக்.109-119
5. மு.நூ., பக்.118

# பாவலர் படைத்த இலக்கியங்கள்

**பா**வலரது தமிழ்ப் புலமையையும் தமிழ்ப் புலவர் மத்தியில் அவர் பெற்றிருந்த தனிப் புகழையும் உணர்வோர் இன்று பாவலர் படைத்த இலக்கியங்களாக அறியப்படுபவைகளையும் அச்சில் வந்துள்ள நூல்களையும் அறியும்போது பெருவியப்புக் கொள்வர். புலமைச் செல்வமும் அறிவுச் செல்வமும் நிறைவாகப் பெற்றிருந்த பாவலர் பொருட்செல்வத்தை நிறைவாகப் பெற வில்லை என்பதே இந்நிலைக்குக் காரணம். பாவலர் வாய் திறந்து பேசினால் அது தமிழ் இலக்கியங்களின் ஆழ்ந்தகன்ற அரும் பொருட் செய்தியாக இருக்கும்; அல்லது எண்ணியெண்ணி இன்புறத்தகும் சொன்னயம்மிக்க பொருள் நயம் நிறைந்த கருத்தாக இருக்கும். அவற்றையெல்லாம் நூல் வடிவில் தருவதற்குப் போதுமான பொருட் செல்வம் பாவலரிடம் இருக்கவில்லை யென்பது தெளிவாகின்றது. பாவலருடைய நூல்களில் அச் சேறியவை அனைத்தும் அவர் சென்னையில் வாழ்ந்தபோது இட்டா பார்த்தசாரதியார் அன்பரவணைப்பில் பத்மநாப விலாச அச்சுக்கூடத்தில் வெளி வந்தவையே. சென்னையிலிருந்து கோட்டாறு திரும்பிய பிறகு நற்கருத்துக்கள் நாள்தோறும் அவர் நாவில் வெளிப்பட்டனவே தவிர, அச்சேறி நூலாகவில்லை. சென்னையிலிருந்த காலத்து இரண்டு இதழ்கள் நடத்தப்பட்டன; சீறா நாடகம் வெளி வந்தது. சீறாப்புராணக் காப்பியத்தின் நயவுரைகளாக அமைந்த சீறா வசனம் இரண்டு பாகங்களாக வெளி வந்தன. சுருக்கமாகச் சொன்னால் பாவலர் எழுதியவை அனைத்தும் அப்போது நூல் வடிவம் பெற்றன; அதன் பிறகு அந்நிலையில்லை.

பாவலர் படைத்தவற்றையெல்லாம் அச்சில் படைக்க வல்ல வள்ளல்கள் பாவலருக்கு வாய்த்திருந்தால் எண்ணற்ற நூல்கள் தமிழை வளப்படுத்தியிருக்கும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. பாவலர் திட்டமிட்ட பல .இலக்கியப்பணிகள் அச்சுருப்பெறவில்லை என்பதற்கு நமக்குப் பல சான்றுகள் கிடைக்கின்றன. அவற்றை அந்தந்த நூல்களைப் பற்றி உரைக்கும் போது கண்டறியலாம்.

## அ. கோவை நூல்கள் நான்கு

மகாமதிப் பாவலர் தம் கோவை நூற் படைப்புக்களாக நான்கை அறிகின்றோம். சம்சுத்தாசீன் கோவை என்ற நூல் அச்சிடப்பெற்றது; இன்று கிடைக்கவில்லை. அழகப்பக்கோவை; முழுமையாகக் கிடைக்கவில்லை. 184 பாடல்கள் கையெழுத்துப் படியாக இருக்கின்றன; கட்டளைக் கலித்துறையில் அமைந்த காப்புச் செய்யுள் ஒன்றும் கிடைக்கின்றது. பாவலர் அழகப்பருக்கு எழுதிய ஐந்து பாடல்கள் கொண்ட ஒரு சீட்டுக்கவியில் அந்நூல் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன. நூலின் பெயர் அழகப்பக்கோவை என்பது; 425 பாடல்கள் பாடப்பட்டன என அறிய முடிகிறது.

சசிஉத்தமக் கோவை என்பது திருவிதாங்கூர் அரசின் திவானாக இருந்த சர்.சி.பி. இராமசாமி அய்யர் மீது பாடப்பட்ட நூலாகும். நூல் கிடைக்கவில்லை, உத்தமபாளையம் ஜனாப் கா.சீ. முகம்மது இஸ்மாயில் மீது பாடப் பெற்றது முகம்மது இஸ்மாயில் கோவையாகும். கம்பம் பீர்முகம்மதுப் பாவலருக்குச் சதாவதானிப் பாவலர் எழுதியிருந்த ஒரு கடிதத்தில் இக்கோவை நூல் பற்றியும் அந்நூல் 425 பாடல்களைக் கொண்டிருந்ததும் அறிய முடிகிறது. வேறு செய்திகள் கிடைக்கவில்லை.

கோவைநூல் அகப்பொருள் பற்றியது; நானூறு கட்டளைக் கலித்துறைப் பாக்களால் பாடப்பெறுவது. 'யாவையும் பாடிக் கோவை பாடு' என்பது பழமொழி. இது பாடுதற்கரிய கட்டளைக் கலித்துறைப் பாக்களால் அமைவது. எழுத்து, அசை, சீர் முதலியவற்றில் வரையறை மிகுந்த அரிய பாவகை கட்டளைக் கலித்துறையாகும். பாண்டிக்கோவை, தஞ்சைவாணன் கோவை முதலான எல்லாக் கோவைகளும் நானூறு பாக்களுக்கு மேலாகவே பெற்று விளங்குகின்றன. பாவலர் பாடிய நான்கு கோவை நூல்களுமே அம்மரபு போற்றி நானூற்றுக்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்டு விளங்குகின்றன.

சம்சுத்தாசீன் கோவை மட்டுமே அச்சில் வெளிவந்துள்ளது. திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையத்தைச் சேர்ந்த பெருவள்ளலாக விளங்கியவர் சம்சுத்தாசீன் ஆவார். இந்நூலில் மொத்தம் 420 பாடல்கள் இடம் பெறுகின்றன. 1919-ஆம் ஆண்டில் சென்னை பத்மநாபவிலாச அச்சுக்கூடத்தில் இந்நூல் உரையுடன் அச்சிடப்பட்டது. மேலப்பாளையம் வித்வான் மல்கான் அலிசாகிபு அவர்களின் அரும் பதவுரையோடு கூடியது. களவியல்,

வரைவியல், கற்பியல் என்ற மூன்று இயல்களைக் கொண்டு நூல நடக்கின்றது.

இங்குப் பாவலர் பற்றிய ஒரு முக்கியமான செய்தி சிந்திக்கத் தக்கது. மனிதர்களைப் பாராட்டுவது இஸ்லாமிய மரபுப்படி வெறுக்கத்தக்கதன்று. ஒருவரைத் தன்னலத்திற்காகப் புகழ்வது அல்லது இல்லாத புகழைப் பேசுவது இஸ்லாமிய அடிப் படையில் வெறுக்கத்தக்கது. தற்புகழ்ச்சி நோக்கமில்லாமல் அறநோக்கத்தோடு ஆற்றப்படும் நற்செயல்களை இஸ்லாம் போற்றுகிறது. அவ்வகையில் செயல்புரிவோரைப் பாராட்டுவதும் உற்சாகப்படுத்துவதும் இஸ்லாத்திற்கு முரண்பட்டவை அல்ல. பாவலர் பாராட்டிய மனிதர்கள் பற்றிய ஆய்வை மேற்கொண்டால் ஒரு பேருண்மை விளங்கும். பாவலர் பாராட்டி பாடிய மனிதர்கள் வள்ளல்களாகவே விளங்கியுள்ளனர். சம்சுத்தாசீன் அவர்கள் உழைத்துப் பொருளீட்டியவர். அச்செல்வத்தைத் தமக்கும் தம் குடும்பத்துக்கும் மட்டுமே உரியது எனக் கருதி ஆடம்பரச் செலவு செய்யாது அறச்செயல்களில் பொருளைச் செலவிட்ட உத்தமர். அவரது நற்செயல்களை நன்கறிந்த பாவலர் அரிய கோவை நூல் ஒன்றினை அச்செல்வரின் சிறப்புத் தோன்றப் பாடி மகிழ்ந்தார். இந்நோக்கில் பாவலர் அறவழி வாழ்ந்த செல்வர்களைப் பாராட்டிப் பாடியது மனிதர்களைப் பாடும் குற்றத்தின் பாற்படாது; நற்செயல்களை ஊக்குவிக்கும் பாராட்டுக்குரிய செயலாகவே கருதப்படும்.

நான்கு கோவை நூல்களிலும் பாவலரால் பாராட்டப் பெற்ற மனிதர்கள் நால்வராவர். மேலப்பாளையம் சம்சுத்தாசீன், வள்ளல் அழகப்பர், திருவிதாங்கூர் அரசுதிவான் சர்.சி.பி.இராமசாமி அய்யர், உத்தமபாளையம் வள்ளல் கா.சீ.முகம்மது இஸ்மாயில் ஆகியோர் ஆவர். இந்நால்வரையும் பாராட்டிப் பாடுவதன் மூலம் பிற செல்வர்கள் தமது பொருட்செல்வத்தைப் பொது நன்மைக்காகப் பயன்படுத்துவர் எனப் பாவலர் நம்பினார்.

வள்ளல் அழகப்பரைப் பாவலர் அழகப்பக் கோவையில் மட்டும் பாராட்டவில்லை. வள்ளலுக்குச் சீட்டுக்கவி விடுத்துள்ளார். 'அழகப்பர் தரிசனப் பத்து' என்ற தலைப்பில் பத்து எண் சீர் விருத்தங்களும் பாடியுள்ளார். கற்றவர்க்கு ஆரமிழ்து, கலையுலகுக்கு அருஞ்சுடர், இன்பம் பெற்றவர்க்கு உள்ளொளி, பேருலகுக்கு அணிநலன் ஆகிய தொடர்களால் வள்ளல் அழகப்பரைச் சீட்டுக்கவியில் பாராட்டுவார். (பாடல்-4) பாவலரே

அச்சீட்டுக் கவியில் தம் கவிதைகளைப் பற்றி விளக்குகின்றார். சொல் நோக்கு, பொருள் நோக்கு, தொடை நோக்கு, நடைநோக்கு முதலிய நோக்கங்கள் உண்டென்றும் அந்நோக்குகளில் 'என்னோக்கும் நன்னோக்காய்' அமைந்துள்ள கற்பனைகள் கலந்துள்ளன என்றும் பாடுவார். (சீட்டுக்கவி, பா.3) இங்குப் பாவலர் மனிதர்களைப் பாராட்டுவதற்குரிய தமது நோக்கத்தைத் தெளிவாகப் புலப்படுத்துவார். 'என்னோக்கும் நன்னோக்காய் இயல'ப் பாடுவதே பாவலர் இயல்பு.

சம்சுத்தாசீன் கோவை என்னும் அகப்பொருள் நாடகம் நடக்கும் மலை 'சம்சுத்தாசீன் குளிர்சிலம்பு' ஆகும். இது பாவலர் கற்பனையில் கவின்பெறும் மலை எனக் கருதலாம். தமிழ் அகப்பொருள் நெறிமுறைப்படி காட்சி, தெளிவு என்ற முறைப் படி சிலேடை நயம் விளங்கப் பாவலர் இவ்வரிய நூலைப் படைத்துள்ளார். சிவப்பிரகாச சுவாமிகள் மீது பாவலருக்கு உள்ள பற்று இந்நூலில் புலப்படுகிறது. சிவப்பிரகாசருடைய திரு வெங்கைக் கோவையில் பாவலருக்குள்ள பயிற்சியும் தெரிகிறது. மடல் விலக்கு என்பது கோவை நூலில் பாடப்பெறும் ஒரு துறையாகும். தலைவன் தலைவி பால் கழிமிகு காமங் கொண்டு மடலேற முயல்வதைத் தோழி தன் அறிவுத் திறத்தால் விலக்க முயல்வது மடல் விலக்கு எனப்படும். இத்துறை சார்பாகக் கோவை பாடிய தமிழ்ப் புலவர் அனைவரும் தாம் மதித்துப் போற்றும் உயர் நூல்களைப் பாடுவது ஒரு மரபாகவே மாறி விட்டது. சிவப்பிரகாசர் தாம் பாடிய திருவெங்கைக் கோவையில் சிந்தாமணிக் காப்பியத்தின் மேலும் மாணிக்கவாசகர் பாடிய திருக்கோவையார் மேலும் தமக்குள்ள ஈடுபாட்டைப் புலப் படுத்துவார். அப்போக்கைப் பின்பற்ற விரும்பிய பாவலர் சம்சுத்தாசீன் கோவையில் பவணந்தியார் பாடிய நன்னூல் என்ற இலக்கண நூலின் மேல் தமக்குள்ள பற்றை வெளிப்படுத்துவார். பவணந்தியாரது நன்னூலில் பாவலர் பெரும் பயிற்சியும் பற்றும் கொண்டவர் என்ற செய்தி முன்னரும் உரைக்கப்பட்டுள்ளது. ''நன்னூல் தரும் இயலும் நடையும் உரையும் எழுதல் எவ்வாறு நவிற் றரசே'' எனப் பாவலர் பாடுவார்.[1] இங்குப் பாவலர் இரு பொருள்படச் சிலேடை நயத்தோடு பாடுவார். நன்னூல் என்ற இலக்கண நூலும் நூல் போன்ற இடையும் நடையும் சொல்லினி மையும் உடைய ஒரு பெண்ணின் அழகும் இங்கு வருணிக்கப் படுகிறது. நன்னூல் என்ற இலக்கண நூலின் எல்லா இயல்களிலும் பாக்களது நடையிலும் உரையிலும் தமக்கிருக்கும் நாட்டத்தைப் பாவலர் புலப்படுத்தும் இடம் இது.

## இரண்டு அந்தாதி நூல்கள்

பாவலர் பாடிய அந்தாதி நூல்கள் இரண்டு. திருநாகூர்த்திரிபந்தாதி, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி என்பன. இரண்டு நூல்களும் ஒரே தொகுதியாக 1900ஆம் ஆண்டில் சென்னை பத்மநாப விலாச அச்சுக்கூட்டத்தில் வெளியிடப்பட்டன. இந்நூலின் தொடக்கத்தில் பாவலரின் ஆசிரியரான சங்கர நாராயணரின் பாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது. அப்பாடலில் சங்கரநாராயண உபாத்தியாயர் செய்குத்தம்பிப் பாவலரது அந்தாதி நூலைத் திறனாய்வு செய்கின்றார். திருநாகூர்த்திரிபந்தாதியின் சொல்லழகையும் பொருளழகையும் கண்டு நாணிக் கலைமகள் ஓடி மலர் புகுந்தாள் என்றும் தமிழ்ச்சங்கம் தலை குனிந்தது என்றும் அகத்தியரும் நாணி மலையடைந்தார் என்றும் தம் மாணவரது தமிழ்த்திறத்தைப் பாராட்டுவார்.

முதல்பாட்டின் இறுதியில் வரும் சீரோ அசையோ அடுத்த பாட்டின் தொடக்கமாக வருவது அந்தாதி ஆகும். பன்னிரு பாட்டியல் என்ற இலக்கண நூல் வெண்பா, கட்டளைக் கலித்துறை என்ற இரண்டு பாவினங்களிலும் அந்தாதிநூல் அமையும் எனக்கூறும்.[2] ஒவ்வொரு அடியிலும் முதல் எழுத்து நீங்க அடுத்து வரும் எழுத்துக்கள் ஒத்திருக்க ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் விளங்கித் தோன்றப்பாடுவது திரிபு ஆகும். யமகமாகவும் திரிபாகவும் பாடப்படும் அந்தாதி நூல்கள் யமக அந்தாதி, திரிபந்தாதி எனப்பெயர் பெறும். பாவலர் பாடிய தரிபந்தாதி நாகூர்நாதர் ஷாஹுல் ஹமீது ஆண்டகையின் புகழைப் பாடுவதாதலின் திருநாகூர்த்திரிபந்தாதி எனப்பெயர் பெறும். இந்நூலில் நாகூர்நாதரின் நற்புகழ் நூறு கட்டளைக் கலித்துறைப் பாக்களால் பாடப் பெறுகின்றன. நாகூரின் சிறப்பும் நயமாக நவிலப்படுகிறது. இங்கு ஒரு செய்தி சிந்திப்பதற்குரியது. பாவலர் அந்தாதி நூல்களில் நாகூர் நாதரையும் கோட்டாறு நகர்தந்த தம் குலத்து முன்னோர் ஞானியார் அப்பா அவர்களையும் தம் ஞானாசிரியராகக் கருதிப் போற்றிப்பாடுவார். இங்ஙனம் மெய்ஞ்ஞான வழியில் உயர்வு பெற்ற சான்றோர்களைப் புகழ்ந்து பாடிய பல நூல்கள் தமிழில் தோன்றியுள்ளன.

திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதியில் கோட்டாறு ஞானியாரப்பா அவர்களைப் போற்றிப் பாடியுள்ளார். பத்து வகைப் பாவினங்களில் அந்தாதித் தொடையில் நூறு பாடல்கள் கொண்டு இது விளங்குவதால் இப்பெயர் பெற்றது. நூலின்

தொடக்கத்தில் விருத்தப்பாவில் அமைந்த காப்புச் செய்யுள் ஒன்றும் இந்த அந்தாதி நூலில் காணக் கிடக்கின்றது.

**'மாமேவு கோட்டாற்றில் மன்னுமுயர்**
**மெய்ஞ்ஞான வள்ளல்'.**

என செய்குமுகியித்தீன் மலுக்கு முதலியார் என்ற ஞானியாரப்பா அவர்களைப் பாராட்டுவார். 'கோட்டாற்றின் கண்ணுறைந்த கற்பகம்' (பா.20), 'அடியார்க்கு அருளரசு' (பா.60) போன்ற தொடர்களால் ஞானியாரப்பா அவர்களது பெருமை பேசப்படுகிறது. 'தவமிலங்கிய நபிகள் நாயகர் சபையில் ஏகும் நற்றகைய' (பா-91) எனப்பெருமானார் வழியில் இஸ்லாமிய ஞானமார்க்கத்தைப் போற்றிய பெருந்தகை என ஞானியாரப்பா அவர்களைப் போற்றிப் பாராட்டுவார். இவ்வந்தாதி நூலில் மடக்குச் சொல்லணி நயம் பெற்ற பாடல்கள் பல சிறந்து விளங்குகின்றன. உவமையணி நலமும் வருணனைத் திறமும் சிறந்து விளங்குகின்றன.

## நீதிவெண்பா

மக்கள் வாழ்வு தூய்மையடைந்து இம்மை மறுமை வெற்றிகளை ஈட்டித்தருதற்குரிய பொது நீதிகளை வெண்பாவில் பாடிய நூல் நீதிவெண்பாவாகும். இது நூறு வெண்பாக்களைக் கொண்ட நீதிநூல் என்பது பாவலரோடு நெருங்கி உறவு கொண்டிருந்த கா.சீ.முகம்மது இஸ்மாயில் அவர்களது கருத்து.[3] நீதிவெண்பா என்ற நூலில் எட்டு வெண்பாக்கள் மட்டுமே கிடைத்துள்ளன. எல்லா வெண்பாக்களுமே பழைய தமிழ் நீதி நூல்களில் காணப்படும் வெண்பாக்களுக்கு நிகரான சொற்சுவை பொருட்சுவை பெற்றுப் பாவலரது தனித்தன்மையைக் காட்டி நிற்கின்றன. பாவலரது மாணவராக விளங்கிய தா.சாத்தாங்குட்டிப் பிள்ளையவர்கள் இவ்வெண்பாக்களைக் கற்று மகிழ்ந்து புகழேந்தியே மீண்டும் மகாமதிப் பாவலராய்ப் பிறந்து வந்தாரோ என மகிழ்ந்து போற்றுகின்றார்.[4] புகழேந்திப் புலவர் வெண்பாவிற் புகழேந்தி எனத் தமிழிலக்கிய விமர்சகர்களால் பாராட்டப் பெற்றவர். எட்டு வெண்பாக்களையும் காணும்போது நூறு வெண்பாக்களும் கிடைத்திருந்தால் பாவலரது புலமைத்திறம் குன்றின் மேலிட்ட விளக்காகத் தோன்றிச் சிறந்திருக்கும் என எண்ண முடிகிறது.

'அந்திமுல்லை தன் மணத்தைத் தந்தருள்வதன்றி மற்றோர் புன்மணத்தை நல்கிடுமோ பூத்து' (வெண்பா-5) என்ற உவமையின் வாயிலாகப் பண்பில் உயர்ந்த பெருமக்களின் உள்ளப்

பெருமையை உரைத்துக் காட்டுவர். பழைய பாரம்பரிய வெண்பாக்களில் தோய்ந்த தமது புலமை வெளிப்படுமாறு 'ஓட்டைக் குடத்தில் ஊற்றிய நீர் அங்கு நிலைக்குமா?' என உவமைப்படுத்தி நீதியை நிறைவுபெற விளக்குவர். (வெண்பா-7) பாலில் ஊற்றப்பட்ட நீரும் பாலாகும் என்ற உவமையில் நட்பாராய்தல் என்ற பொருள் பற்றி நுணுக்கமாகப் பாடுவார். (வெண்பா-6)

## தனிப்பாடல்கள்

பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் பிறர் வேண்டிக் கொண்டதாலும் தன் விருப்பத்தின் அடிப்படையிலும் பாடப் பட்டவை இவை. அவதானப் பாடல்கள், பாராட்டுப் பாடல்கள், சாற்றுக்கவிகள், சீட்டுக் கவிகள், புகழ்ப்பாக்கள், வாழ்த்துப் பாக்கள், அறிவுரைப்பாக்கள், கையறுநிலைப்பாக்கள் முதலியன தனிப்பாடல்களில் அடங்கும். உரைநடை நூல்களும் உள.

## அவதானப் பாடல்கள் (1)

கோட்டாற்றில் 1906ஆம் ஆண்டிலும் சென்னையில் 1907ஆம் ஆண்டிலும் நிகழ்ந்த அவதான நிகழ்ச்சிகளின்போது பாடப்பட்ட பாடல்கள் இவை. இவ்வகையில் குறள் வெண்பா ஒன்று, கலிவிருத்தம் ஒன்று, கட்டளைக் கலித்துறை இரண்டு, நேரிசை வெண்பா மூன்று; இவையல்லாது கடவுள் வாழ்த்துப்பாடலும் பாடப்பெற்றது. பாவலருடைய சமூக நல்லிணக்கப் பண்பினைப் பேசும் போது 'சிரமாறுடையான்' எனத் தொடங்கும் பாடலை விளக்கியுள்ளோம்.

## பாராட்டுப்பாக்கள் (2)

சேரநாட்டுச் சித்திரைத் திருநாள் மன்னர் தீண்டாமையை ஒழித்துப் பெருமை கொண்டவர். உயர்வு தாழ்வு இல்லாது எல்லா பக்தர்களும் கலந்து இறைவனை வழிபட்டு மகிழக் கோயில் களைத் திறந்துவிட்டவர். இந்நற்செயலுக்காக அவரைப் போற்றிக் கவிதை பாடினார் பாவலர். நற்செயல்புரிந்த நல்லோரை மட்டுமே - அவர் எச்சமூகஞ் சார்ந்தவரானாலும் - பாராட்டிப் பாடுவது பாவலர் மரபு.

> ''மண்முழுதும் போர்த்து மறிகடலும் தான்போர்த்து
> விண்முழுதும் போர்த்துமிக மிஞ்சியதே - உண்முழுதும்
> கோபால மாயனடி கொண்டுவக்கும் சித்திரைப்பேர்
> பூபாலன் பெற்ற புகழ்''

சித்திரைத் திருநாள் மன்னர் வைணவ பக்தர். எல்லோரும் வழிபடுவதற்குக் கோயில்களைத் திறந்துவிட்டுத் தீண்டாமையை

ஒழித்துக் தொண்டு ஆற்றிய அருஞ்செயலைப் பாராட்டினார். அந்த அருஞ்செயல் காரணமாகச் சித்திரைத் திருநாள் மன்னருடைய புகழ் நிலவுலகம் முழுவதும் பரவிக் கடலகத்தும் பெருகி விண்ணகத்தும் விரிந்தது எனப் பாடுவார். பாவலர் பாடிய பாராட்டுப்பாக்களில் இது குறிப்பிடத்தக்கதாகும்.

## சாற்றுக்கவிகள் (3)

நாள்தொறும் பாவலரை நாடிச் சாற்றுக்கவிக்காகவும் பிற பாடல்களுக்காகவும் வரும் அறிஞர் பலர். பாவலருடைய மாணவர் சாத்தாங்குட்டிப்பிள்ளை இதுபற்றிக் குறிப்பிடுவார்.[5] சாற்றுக்கவி என்பது இக்காலத்தில் முன்னுரை அல்லது அணிந்துரை என அழைக்கப்படுகிறது. தமிழ்ப்பாக்களில் படைக்கப்பட்ட நூல்களுக்குப் புகழ்பெற்ற புலவர்களிடமிருந்து பெறப்படுபவை சாற்றுக்கவிகள் எனப்படும். சாற்றுக்கவி வேண்டிப் பாவலரிடம் வந்த புலவர்களை உடன் பாடலை எழுதிக் கொள்ளுமாறு வேண்டிப் பாடலைக் கூறுவது பாவலர் வழக்கம். சாற்றுக்கவி வேண்டி வந்த யாரும் பாடல் பெறாமல் திரும்பியது இல்லை. இவ்வகையில் அமைந்த சாற்றுக்கவிகள் பல பாவினங்களில் அமைந்தவை ஏறத்தாழ இருபத்து மூன்று. இப்பாடல்களில் பாவலரின் கற்பனை ஆற்றலும் வருணனைத் திறமும் மேலோங்கி நிற்கின்றன.

கவிஞர் தே.ப.பெருமாள் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராக இருந்தவர். நாஞ்சில் நாட்டுக்காரர். பாவலர் புலமையறிந்து அவரோடு நெருங்கிய உறவு கொண்டு, தமிழ்ப் பசி தணித்து வாழ்ந்தவர். ஒருநாள் அவர் பாவலரை அணுகித் தம் கவிதை நூலுக்குச் சாற்றுக்கவி வேண்டினார். உடன் பாவலர் வழக்கப்படி எழுதிக் கொள் எனப் பணித்தவாறு நேரிசை வெண்பா ஒன்றைப் பாடினார். கவிஞர் பெருமாள் எழுதிக் கொண்டார்.

**''பொன்மாலை தேயுமலர்ப் பூமாலை வாடுமணிக்**
**கன்மாலை துண்டுபடுங் காரணத்தால் - சொன்மாலை**
**என்மாலை என்றொரு நூல்ஈந் துதவினான்**
**வன்மாலை நீத்து மகிழ்ந்து''.**

கவிஞர் பெருமாள் அவர்களுடையது கவிதைத் தொகுப்பு நூலாகையால் சொல்மாலை' எனப்பட்டது. திரும்பத் திரும்ப அணியும்போது பொன்னால் செய்யப்பட்ட மாலை தேய்ந்து எடை குறையும்; மலர்களால் ஆக்கப்பட்ட பூமாலையோ சில நாட்களில் வாடிவிடும்; இரத்தினங்கள் பதிக்கப்பட்ட மணிக்கல் மாலை

விலை உயர்ந்தது என்றாலும் காலம் செல்கின்ற போது கல்விழுந்து துண்டுபடும். ஆனால் பெருமாள் ஈந்த சொல்மாலை அக்குறைகள் இல்லாத பெருமைக்குரியதாகும். ஈற்றடியில் உள்ள 'வன்மாலை' என்ற சொல்லுக்கு மயக்கந்தருகின்ற விரும்பத் தகா மயக்கத்தை நீத்து மகிழ்ச்சி பொங்க வழங்கிய கவிதை மாலை எனப் பொருள்படும். பல அறிஞர் பெருமக்களுக்கும் இவ்வாறே நூலைப் படிக்கக் கேட்டுச் சாற்றுக்கவியை உடன் பாடிவிடுகின்ற வழக்கம் பாவலருக்கு உண்டு.

## சீட்டுக்கவிகள் (4)

தமிழில் சீட்டுக்கவிகள் என வழங்கப்படுபவை கடிதங்களே. பழந்தமிழ்ப் புலவர்கள் தம் விருப்பங்களையும் தேவைகளையும் புரவலர்களுக்குத் தெரிவித்து எழுதுபவை சீட்டுக்கவிகள் எனப்படும். பாவலர் புதிய வீட்டில் குடிபுகுந்தபோது தம் நண்பர் சிவதாணுப்பிள்ளை அவர்களுக்குச் சீட்டுக் கவியொன்று விடுத்தார். அப்பாடலில் பாவலர் தம் இல்லத்தில் என்றென்றும் இருந்து பணியாற்றுதற்கு உரிய வகையில் 'தாயும் மகவும் தருவாய்; உரிய விலையை நான் தருவேன்' என வேண்டி எழுதினார். பாவலரது நண்பர் சிவதாணு அவர்கள் மனைவியோடு நல்லறஞ் சிறக்க இல்லறத்தில் ஈடுபட்டு வாழ்ந்தவர். ஆகவே புதிய இல்லத்தில் பயன்படும் அம்மி குழவியைப் பாவலர் நண்பரிடம் வேண்டி அவற்றையே 'தாயும் மகவும்' எனக் குறித்தார்.

தமது ஊரைச் சேர்ந்த நண்பர் ஒருவருக்குச் சீட்டுக்கவி எழுதினார் பாவலர். தமிழ்ப் பெரும்புலவர்கள் நண்பருக்கு விடுக்குங்கடிதங் கூடச் சீட்டுக் கவிகளாகக் கருதப்படுவது தமிழ் மரபு. அக்கடித்ததில் நேரே நண்பரைக் கண்டு பேசி மகிழ்வதைப் போலப் பாவலர் எழுதக் காண்கிறோம். மேலும் பாவலர் தம் பரந்து விரிந்த நோக்கம் எல்லோருடைய வாழ்வும் வளம்பெற வேண்டுமென்ற பெரிய உள்ளமும் வெளிப்படக் காண்கின்றோம்.

> "ஆகஞ் சுகமா அடுத்தவர்கள் சேமமா
> மேகம் வழங்கியதா மேலுமிந்தப் - போகம்
> விளையுமா இன்னுமழை வேண்டுமா செல்வம்
> வளையுமா ஊர் செழிக்குமா?"

இக்கடிதத்தில் எல்லோர் நலவாழ்விலும் நாட்டங்கொண்டு, மழைபொழிந்ததா? பயிர் விளையுமா? ஊர் செழிக்குமா? எனவெல்லாம் பாவலர் விடுக்கும் வினாக்கள் பாவலர் தம் பரந்த உள்ளங்காட்டும். எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வமும் பெற வேண்டும் என்ற பாவலரின் ஆசையும் பெறப்படுகின்றது.

## வாழ்த்துப்பாக்கள் (5)

இவ்வகைப் பாக்களில் திருமண வாழ்த்துப்பாக்கள் பல. இஸ்லாமியப் புலவராகிய பாவலர் வாழ்த்தப்படுபவரது நோக்கில் அரனும் உமையும், மாலும் கமல மாதும், கந்தன் வள்ளி, மதன் ரதி எனக் கடவுளர் பெயர்களை இப்பாக்களில் குறித்தல் நோக்கத் தக்கது. திருமணல்லாது சிறப்பு நிகழ்ச்சிகளிலும் பாவலர் வாழ்த்துப்பாக்கள் பாடியுள்ளார். 'காஜாமியான் தரிசனப்பத்து' என்ற பெயரில் பாடப்பெற்ற பத்துப்பாடல்களில் இரண்டே கிடைக்கின்றன. திருச்சி நகரத்துக் கல்வித்தொண்டு செய்து வாழ்ந்த பெருந்தகை காஜாமியான் அவர்கள். கல்வித்தொண்டு செய்த வள்ளல் அழகப்பர் மீது ஒரு கோவை நூல், ஓர் ஆற்றுப்படைப் பாடல், ஒரு தரிசனப்பத்து, உவமை விலக்கு என நான்கு வடிவங்களில் பாவலர் வாழ்த்துப் பாக்கள் பாடியுள்ளார். கல்வித் தொண்டர் நிலைத்த புகழைப் பெற்று நீடுவாழ்தல் உலகுக்குப் பயன்படுமாதலான் பாவலர் கல்வித் தொண்டர் களையே வாழ்த்திப் பாடியுள்ளார். வள்ளல் அழகப்பர் மீது பாடப்பட்ட உவமை விலக்கு என்ற பெயருடைய வாழ்த்துப்பா பல புகழ் மிக்கோரையும் வள்ளல் அழகப்பரோடு உவமை செய்து, பின்னர் அழகப்பர் பெரும் புகழுக்கு அவர் ஈடாகார் என்ற பொருளில் அமைந்ததாகும். செத்துங்கொடுத்த சீதக்காதி எனப்புகழ் பெற்ற வள்ளல் சீதக்காதியையும் பாவலர் வாழ்த்திப் பாடியுள்ளார்.

## அறிவுரைப் பாக்கள் (6)

'நோன்பை மறவாதே' 'கள்ளைக் குடியாதே' என்னும் தலைப்புக்களில் இரண்டு பாக்களைப் பாவலர் பாடியுள்ளார். இப் பாக்களும் சரணம், பல்லவி என அமைந்து இசைப்பாக்களாகவே விளங்குகின்றன.

## கையறுநிலைப் பாக்கள் (7)

இவ்வகைப் பாக்கள் மூன்று கிடைக்கின்றன. ஒவ்வொரு கையறு நிலைப்பாவும் பல ஆசிரிய விருத்தங்கள், கலிப்பாக்கள், வெண்பாக்களைக் கொண்டன. சென்னையில் வாழ்ந்த செல்வர் ஜமால் முகம்மது அவர்கள் மறைந்தபோது பாடப்பட்ட கையறு நிலைப் பாடல் அறியத்தக்கதாகும். அத்திருமகனார் பெயராலேயே திருச்சியில் புகழ்பெற்ற ஜமால் முகம்மது கல்லூரி அமைந்துள்ளது. இங்கும் கல்வித் தொண்டு செய்தவர்களையே புகழ்ந்து பாடும் பாவலரது இயல்பு வெளிப்படும்.

## VI. ஆ. கல்வத்துநாயகம் இன்னிசைப் பாமாலை

பாவலரது படைப்புக்களில் 'கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை' ஒன்றே இரண்டு பதிப்புக்களைப் பெற்றுள்ளது. 1940-ஆம் ஆண்டில் நாகர்கோவில் எம்.எஸ்.எம். அச்சகத்தில் முதன்முதலாகப் பாவலராலேயே பதிப்பிக்கப் பெற்றது. பாவலர் இறப்புக்குப் பத்தாண்டுகளுக்குப் பிறகு சென்னைப் பாவலர் பதிப்பகம் இப்பாமாலையின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டது. பாவலர் பாடிய சில நூல்கள் பெயரளவிலேயே கிடைக்கின்றன. சில படைப்புக்கள் பகுதியாகவே கிடைக்கின்றன. சில இலக்கியங்கள் கையெழுத்துப் படிகளே கிடைக்கின்றன. பாவலர் படைத்த நூல்களைச் சமுதாயம் வெளியிட்டுப் போற்றிப் பாதுகாவாமை ஒரு பெருங்குறையே. பாவலரது படைப்புக் களைத் தம் டாக்டர் பட்ட ஆய்வுப் பொருளாக ஆக்கிக் கொண்ட டாக்டர் பசுலுமுகியித்தீன் அவர்களுக்கும் இக்குறை உண்டு. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பாவலர் பற்றிய பொழிவு நூலை 1986-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது.

இன்னிசைப் பாமாலை என்ற நூலின் பெயரே இந்நூலின் பாடல்கள் இன்னிசைப் பாடல்களாகச் சிறக்கின்றன என்பதைக் காட்டுகின்றன.

> **'பண்ணெடுத்த செந்தமிழில் பாடிவரும் என்றனையும்**
> **கண்ணெடுத்துங் காணீரோ கல்வத்து நாயகமே'**

என்ற இந்நூற் பாடல் பாவலரது இசைப்பாடல் விருப்பைக் காட்டும். இந்நூலில் இடம் பெறும் தரவு கொச்சகக் கலிப்பாக்கள் நூறும் இன்னிசைப் பாக்களாகவே அமைந்திருக்கக் காண்கிறோம். பாடல்களின் இசைநயம் நம் உள்ளத்தை ஈர்த்துத் தமிழிசைப் பாடல் வரிசையில் இந்நூலைச் சேர்க்கின்றது. டாக்டர்.செ.ஜதர் அலி அவர்கள் பாவலரது இன்னிசைப் பாமாலையை 'மற்றுமொரு திருவாசகம்' எனக் கருதுவார். மேலும் 'ஒரு பக்தி நூலுக்கு வேண்டிய தகுதிகள் அனைத்தும் கொண்டிலங்குகிறது' எனக் குறிப்பிடுவார்.[6] திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் எனப் பாராட்டுவர். சைவ மாணிக்கவாசகர் படைத்த திருவாசகம் இறையன்பைப் பேசும் பெட்டகமாகும். ஓர் உருவமும் இல்லாத இறைவனுக்கு ஆயிரம் திருநாமம் பாடிப் பரவசம் அடைபவர் மாணிக்கவாசகர். ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பது வள்ளலாருக்கு மட்டுமன்று; எச் சமயத்தாரும் இப்பனுவலைப்பாடி இறையருளில் கலக்க இயலும். பாவலரும் திருவாசகத்தில் தெளிந்த பயிற்சி பெற்றிருந்தார்.

ஆகவே இப்பாமாலையை மற்றுமொரு திருவாசகம் எனத் திறனாய்வு செய்வது பொருத்தமுடையதாகும்.

இறையருட் கவிமணி பேரா. அப்துல்கபூர் அவர்கள் இப்பாமாலையைப் பற்றிக் குறிப்பிடும் கட்டுரையில் ''அறிவுக் கடல், இலக்கியப் பொருப்பு, கவிக்கொண்டல், கற்பனை ஊற்று, உவமைக் களஞ்சியம்... நல்லாசான் அவர்களின் தன்னிகரற்ற தமிழ்ப்புலமையும் தேர்ந்த ஞானமும் தெவிட்டாத சொல்லாட்சியும் இப்பாமாலையை'' இசைப் பாமாலையாக மாற்றுவதைப் பாராட்டுவர். தேன்பிலிற்றும் சொல்லிதழ்கள் ஒவ்வொன்றும் உள்ளத்தைச் சொக்க வைத்துப் பக்திச்சுவையைப் பெருக்கி நிற்கின்றன என ஆய்வுரை வழங்குவார்.[7]

'கல்வத்' என்பது இஸ்லாமிய மெய்ஞ்ஞானத் துறை அறபுச் சொல். பசித்தும் தனித்தும் விழித்தும் ஒதுங்கித் தனியிடத்தில் இறைவனிடம் உள்ளம் போக்கியிருத்தல் 'கல்வத்' எனப்படும். தனித்திருக்கும் தவநிலை என்பது கருத்து. இஸ்லாமிய உலகில் மாபெரும் ஞானியாக விளங்கிய மாப்பிள்ளை ஆலிம் அவர்களுடைய புதல்வர் அப்துல்காதிர் என்பார். அவர்கள் பிறந்த ஊர் கீழக்கரை. கல்வத் எனப்படும் தனித்திருந்து தவஒழுக்கம் மேற்கொண்ட தகைமையால் அப்துல்காதிர் அவர்களுடைய இயற்பெயர் மாறிக் 'கல்வத்து நாயகம்' என்ற புகழ்ப்பெயர் நிலைத்தது. அப்பெருந்தகையை ஞானாசிரியராகக் கொண்டு அவர்களைப் போற்றிப் புகழ்ந்த பாமாலையே இது.

கோட்டாற்றில் பிறந்த ஞானியார் சாகிபு அவர்கள் மேல் பேரன்பு கொண்டு அந்தாதி நூல் ஒன்றும் பாடிச் சிறப்பித்தவர் பாவலர். அவர்களுடைய பெயர்த்தியைப் பாவலர் மணந்து கொண்டார். அந்தாதி நூலில் ஞானியார் சாகிபு அவர்களைப் பெருமதிப்போடு பாராட்டுவார். எனினும் தம் ஞான குருவாகக் கல்வத்து நாயகம் அவர்களையே கருதிப் போற்றினர் என இந்நூலில், அறிய முடிகிறது. 'கற்பூர தீபமொத்த கல்வத்து நாயகம்' என இன்னிசைப் பாமாலையில் பாராட்டும் பாவலர், அடுத்த பாடலில் 'கண்கண்டசற்குருவே' (2) எனப் பாராட்டுவார். கைகண்ட மாமருந்தே (15), கலை வைத்த மாமதியே (21), கான்கண்ட கற்பகமே (95) எனவெல்லாம் கல்வத்து நாயகத்தைப் பாராட்டுவதன் மூலம் தம் சற்குருவாக அவர்களைக் கருதிய பாங்கு அறியக்கிடக்கிறது.

பாவலரது புதல்வரும் அகில இந்திய வானொலி நிலை யத்தின் துணை இயக்குநராகவும் விளங்கிய கே.பி.எஸ்.ஹமீது

அவர்கள் 'சதாவதானி செய்குத்தம்பிப் பாவலரின் தமிழிசைப் பாடல்கள்' என்ற தலைப்பில் ஒரு விரிவான கட்டுரை எழுதியிருக்கின்றார். அக்கட்டுரையில் 'திருப்பாவை, திருவெம்பாவை, திருவாசகத்தின் சொல்வளமும் இசைவளமும் பாவலரின் கல்வத்துநாயகப் பாடல்களின் மூலம் பக்திக்கனல் எழுப்பிப் பாடுவோர் நெஞ்சங்களை நெக்குருக வைக்கின்றன'' எனக் குறிப்பிடுவார்.[8] மாணிக்கவாசகர், தாயுமானவர், பட்டினத்தார், வள்ளலார் போன்ற பக்தி இலக்கியம் பாடிய பெருமக்களைச் சொல்லாலும் பொருளாலும் இசையாலும் போற்றிப் பாடியுள்ளதைக் காண முடிகிறது. உலகத்தார் குறைபாடுகளைத் தம்மேல் ஏற்றி அவற்றிலிருந்து விடுபட அருளுமாறு இறைவனை வேண்டிப் பாடுதல் தமிழ்ப் பக்திப் பாசுரங்களைப் பாடிய பெரும் புலவரது இயல்பு. இப்போக்கைப் போற்றிப் பாவலர் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை முதலியவற்றில் சிக்கித் தவிக்கின்ற அல்லலிலிருந்து அகற்றியருளுமாறு தம் ஞான குருவாகிய கல்வத்து நாயகத்தார் மூலம் இறைவனை வேண்டுகின்றார்.

உலகத்தார் குறைபாடுகளைத் தம் மேல் ஏற்றிப் பாடும் முறையில் மிகப்பல நுட்பமான உவமைகளை இன்னிசைப் பாமாலைப் பாடல்களில் பாவலர் ஆளுவர். ஆட்டி வைத்த பம்பரம் போல் அல்லலுற்று (6), துள்ளுண்ட செம்மறி போல் (32), எனவெல்லாம் உவமை மூலம் தம் சிறுமையை வெளிப் படுத்துவர். இங்ஙனம் தம் நிலையை விளக்கும் உவமைகளில் ஒன்று 'கக்கிவிட்ட தம்பலொத்தேன்' (19) என்பதாகும். தம்பல் என்பது வாயிலிட்டுமென்ற பிறகு வெளியில் துப்புகின்ற தாம்பூலச் சக்கை. இது நாஞ்சில் நாட்டு வட்டார வழக்கு. ஒன்றுக்கும் உதவாத வீண் பொருள் இது வாதலின் தம் இழிநிலை குறிக்க இந்த உவமையை ஆள்வர். 'உள்ளுடைந்து மெய் மயங்கிக் கக்கிவிட்ட தம்பலொத்தேன்' (19) என்ற அடியில் ஒன்றுக்கும் உதவாத - பயன் ஏதும் இல்லாத - நிலையில் உள்ளமும் உடம்பும் மயங்கி வருந்துவதாகப் பாடுவது உணரத்தக்கதாகும்.

**''பேணுவது நும்மருளே பேசுவது நும்நாமம்**
**பூணுவது நும்மலர்த்தாள் போற்றுவது நும்புகழே**
**நாணுவது நும்மறதி நண்ணுவது நுஞ்சமுகம்**
**காணுவது நுங்காட்சி கல்வத்து நாயகமே''**

(10)

இப்பாடல் 'பக்தி அமுதவலைப் பின்னலாக' அமைந்து தம் சற்குருவிடத்துப் பாவலருக்குள்ள மதிப்பை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

''கூட்டுவிப்பீர் சன்மார்க்கம் கொள்ளுவிப்பீ ரன்பொழுக்கம்
ஊட்டுவிப்பீர் பொன்னருளை யோங்குவிப்பீ ரின்பநலம்
சூட்டுவிப்பீர் நும்மலர்த்தாள் தோற்றுவிப்பீர் ஞானநெறி
காட்டுவிப்பீர் முத்திநிலை கல்வத்து நாயகமே'

(99)

இப்பாடலில் பாவலர் மிகத் தெளிவாகச் சன்மார்க்கம் எனும் இறைவழியைக் காட்டி அன்பொழுக்கம் கைவரச் செய்தவர் கல்வத்து நாயகரே எனப் பாடுகின்றார். இரண்டாவது அடியில் இறையருளில் ஊட்டுவிப்பவர் எனத் தம் குருவைப் போற்றித் தமக்கு இன்ப நலமும் ஊட்டுவிக்க வேண்டுகின்றார். மூன்றாவது அடியில் 'சூட்டுவிப்பீர் நும் மலர்த்தாள்' என வேண்டுகின்றார். அதன் பொருள் இறைவனையுணர்ந்து இன்புறச் செய்தவர் தம் ஞான குருவே என்பதாகும். தொடர்ந்து தோற்றுவிப்பீர் ஞான நெறி, காட்டுவிப்பீர் முத்தி நிலை என்ற தொடர்களால் சற்குருவின் பெருமையை விளக்குவர். ஞான நெறியில் தம்மைத் தோய்வித்தவரும் முத்தி நிலையைத் தமக்குக் காட்டியவரும் கல்வத்து நாயகமே எனப்பாடுகிறார். இப்பாடல் வழி மிகத் தெளிவாகச் சற்குருவின் செயல்பாடுகளும் சிறப்புகளும் விளக்கப்படுகின்றன. இவ்வாறே இன்னிசைப் பாமாலையின் பாக்கள் அனைத்தும் ஓசைநயத்திலும் பக்திப் பரவத்திலும் விஞ்சி நின்று ஞானப் பாடல்கள் வரிசையில் முன்னிலையில் நிற்கின்றன. மேற்காட்டிய பாடலின் நான்கடிகளிலும் முதற்சீர்கள் 'பீர்' என முடிவது அறியத்தக்கதாகும். இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியில் ஞானாசிரியர் 'பீர்' எனக் குறிக்கப் பெறுவர். இவ்வறபுச் சொல்லை ஒலியால் போற்றிக் கூட்டுவிப்பீர், ஊட்டுவிப்பீர் எனப்பாடும் பாவலரது திறம் உணர்ந்து போற்றத்தக்காதகும்.[9]

## 6. இ. நபிகள் நாயக மான்மிய மஞ்சரி

பாவலரது நூல்களில் 1976-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அருமையான படைப்பு நபிகள் நாயக மான்மிய மஞ்சரியாகும். மான்மியம் என்பது பெருமை. இறுதித் தூதர் நபிகள்நாயகம் அவர்களின் பெருமைமிக்க வாழ்க்கை வழிகாட்டல்களின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. ஒரோவழிமிக்கு வந்த கொச்சகக் கலிப்பா 102 பாடல்களைக் கொண்டது இந்நூல். சென்னையிலிருந்து வெளியிடப்பட்ட 'முஸ்லிம்' எனப் பெயரிய நாளேட்டில் வெள்ளிக்கிழமை தோறும் தொடர்ந்து இந்நூலின் பாடல்கள் வெளிவந்தன. பாவலரது புலமையில் விருப்பங் கொண்ட ஆர்வலர்கள் அப்போதே இந்நூலை முழுமையாகக்

கண்டு கற்று எழுதி வைத்துப் பேணிக் கொண்டனர். பின்னர் பாவலரோடு தொடர்பு கொண்டிருந்த அவர்களது மாணாக்கர் வள்ளல் கா.சீ. முகம்மது இஸ்மாயில் (உத்தமபாளையம்) அவர்களால் இந்நூல் முதன்முறையாக வெளியிடப்பட்டது; பதிப்பித்தவர் நாஞ்சில் ஆ.ஆரிது அவர்கள்.

இந்நூலின் தொடக்கமாக நேரிசை வெண்பா ஒன்று காப்புச் செய்யுளாகப் பாடப்பட்டுள்ளது. இவ்வெண்பாவின் முதலடியில் 'வையமெலாம் வாழ்த்தெடுப்ப வந்த நபிநாயகம்' எனப் பாவலர் குறிப்பிடுகின்றார். இந்நூலின் முதலடியே மிகுந்த சிறப்பும் பொருத்தமும் உடையதாகும். இறைத்தூதராக வையகத்தில் ஆற்றிய அரும்பணி காரணமாகப் பலமொழி சார்ந்த - பல சமயஞ்சார்ந்த அறிஞர்கள் அனைவரும் ஒருமித்து வாழ்த்தியுள்ளமை அறியத்தக்கதாகும். பெருமானார் பெருமையைப் பேசுவதற்கு இறையருள் வாய்க்க வேண்டுகிறது இக்காப்புச் செய்யுள்.

இந்நூலின் 102 பாடல்களிலும் நபிகள் பெருமானார் ஆற்றிய வழிகாட்டும் 102 அருஞ்செயல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. நிகழ்ச்சிகள் காலவரையறையில் அமையவில்லை. இன்றைய சமுதாய வாழ்விற்கு வழிகாட்டக் கூடிய நிகழ்ச்சிகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. முந்திய வேதங்களும் முந்திய இறைத்தூதர்களும் ஒரே செய்தியையே பேசினர். இறைவன் ஒருவன்; மக்களினம் ஒன்று; வாழும் நெறிமுறையும் ஒன்று என்ற செய்தியையே எல்லா மறைகளும் பேசின என இறுதித் திருமறை திருக்குர்ஆன் பலமுறை உரைக்கின்றது. (5:48). இவ்வுண்மையை உரைத்துக் காட்டிப் பெருமானார் பெருமை பேசும் இப்பாடல் அனைவரும் அறிந்து போற்றத் தக்கதாகும்.

"ஒன்று தெய்வம் ஒன்றுமதம்
ஒன்று மக்கள் சாதியென
நன்றுபெறக் கூறி அவை
நாட்டி நவில் நான்மறையும்
குன்றுபெற தீபமெனக்
கோத்தளித்துக் காத்தவுங்கள்
துன்றுமுயர் மாபெருமை
சொல்லற் கெளிதேயோ
சோதி நபி நாயகமே
சொல்லற் கெளிதேயோ!"

(பா-2)

இந்நூலின் எல்லாப் பாடல்களும் நீண்ட விளக்கத்திற்குரிய பெருமையுடையனவே. மகாமதிப்பாவலர் என்ற நூலை வெளியிட்டுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இந்நூலைத் 'தமிழ் உலகுக்குப் பாவலர் அளித்த ஒரு தங்கப் பனுவல்' எனவும் இந்நூல் 'கலிப்பாவால் ஆக்கப்பட்ட கனிப்பா' எனவும் பாராட்டுகிறது.[10]

நபிகள் பெருமானார் அனைத்து உலகத்திற்கும் அழகிய முன்மாதிரியாக விளங்கிய அருமையைத் திருக்குர்ஆன் இயம்பும் (33:21). பாவலர் இவ்வுண்மையை 'முதன் மாதிரியா முன்னின்ற வள்ளன்மை' (பா.3) எனப்பாடுவார். முன்மாதிரியாக விளங்கிய பெருமானாரது வழிமுறை முதன் மாதிரியாகவும் விளங்கியது என்பது பாவலர் கருத்து. பொருளாதார ஏற்றத் தாழ்வை நீக்கி ஏழை எளியோரும் வாழ்க்கையின் அடிப்படை வசதிகளை அடைந்து நிம்மதிபெற நபிகளார் சட்டமாக்கிய 'ஜகாத்' எனும் கட்டாயக் கடமையை 'ஞாயமிகு ஏழை வரி' எனக் குறித்தல் உணரத் தக்கதாகும். மேலும் அதனை

**'எல்லோரும் நன்மை பெறும் ஓர் சமமாம்**
**ஞாயமிகு ஏழைவரி'**

(பா-44)

எனக் குறித்தல் பொருத்தம் நிறைந்ததாகும்.

இறை மார்க்கத்தை நிலைநாட்டப் பெருமானார் உற்ற எல்லையற்ற அல்லல்களையும் அவற்றை இன்முகத்தோடு ஏற்ற பொறுமையையும் தமக்கு அளவற்ற இடையூறு செய்தோரையும் மன்னித்து அவருக்காக இறைவனிடம் இறைஞ்சிய இயல்பையும் ஒரு பாடலில் உரைத்துக் காட்டுவர்.

"கல்லால் எறிந்திருகால்
காயமுறக் கண்டகொடும்
பொல்லாப் புலையருக்கும்
புத்திவரக் கையேந்தி
அல்லாத் திருச் சமுகத்
தானது ஆக் கேட்டு வந்த
நல்லார் உமைப்போலும்
நானிலத்தி லுண்டேயோ
நாதநபி நாயகமே
நானிலத்தி லுண்டேயோ!"

(பா-11)

நபிகள் பெருமானார் போற்றிய ஆன்ம நேய ஒருமைப் பாட்டினை ஒரு பாடலில் விளக்கிக் காட்டுவார். ஒருநாள் யூதருடைய உடலம்

ஒன்று நபிகளார் இருந்த இடத்தைக் கடந்து எடுத்துச் செல்லப்பட்டது. அதுகண்ட நபிகளார் எழுந்து மரியாதை செய்தனர். பக்கத்திலிருந்த தோழர் ஓரிறை நம்பிக்கையில்லாத ஒருவருடைய சவம் எடுத்துச் செல்லப்படுகிறது எனக் கூறினார். அப்போது நபிகளார் அவரை நோக்கி அவர் உடலின் உள்ளேயும் இறைவனது உயிரே இருந்தது எனக் கூறினர்.

'கொள்கை நலம்' எனப் பாவலர் குறிக்கும் பெருமானாரது உயர் கொள்கை இங்கு விளக்கப்படுகிறது. மனிதர்கள், உயிரினங்கள் எல்லாவற்றிலும் இறைவன் படைத்த உயிரே உறைகின்றது. ஆகையால் எது காரணமாகவும் அவரை இகழ்ந்து வெறுத்து ஒதுக்குதல் இறை நம்பிக்கைக்கு மாறுபட்டது என்பது நபிகளால் கொள்கை. இக்கொள்கையின் மூலமாகப் பெருமானார் உலகில் சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் நிலை நாட்டினர். இவ்வாறே அனைத்துப் பாடல்களிலும் பெருமானார் வையகத்திற்கு முன் மாதிரியாக விளங்கி ஆற்றிய அருஞ்செயல்கள் பாடப் பெறுகின்றன.

## அடிக்குறிப்பு

1. சம்சுத்தாசீன் கோவை, பா-108
2. பன்னிருபாட்டியல், பா-212
3. டாக்டர்.செ.பசுலு முகியித்தீன் அவர்களது பேட்டி, மகாமதிப்பாவலர், பக்.86
4. சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் நினைவுமலர், 1961, பக்.25
5. மு.நூ., பக்.25
6. மு.நூ., பக்.149-151
7. அப்துல் கபூர், கா., இஸ்லாமிய இலக்கியம், 1978, பக்.108
8. ஹமீது, கே.பி.எஸ்., கருத்தரங்கக் கோவை, பக்.148
9. பசுலு முகியித்தீன், செ., டாக்டர். மகாமதிப்பாவலர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பக்.81
10. மகாமதிப் பாவலர், பக்.83

# புலமை நலம்

## கல்வியின் பெருமை

**பா**வலரது படைப்பிலக்கியங்கள் பற்றி முழுமையாகப் பார்த்தோம். அவ்விலக்கியங்களின் தோற்றம், இயல்புகள், சிறப்புக்கள் முதலியவற்றையும் குறிப்பிட்டோம். இப்பகுதியில் பாவலரது இலக்கியங்களில் இருந்து பெறப்படும் அவரது புலமை நலம் குறித்து விரிவாக நோக்குவோம். பாவலர் தம்மிடம் பாடங்கேட்ட மாணாக்கர்களுக்குக் கல்வியின் அருமை பெருமை களை அடிக்கடி எடுத்துக் கூறுவதுண்டு. சங்கப் புலவர் தொடங்கி இக்காலப் புலவர் வரை பேசும் கல்விப் பெருமையை விளக்கமாக எடுத்துக் கூறுவர். கல்வியின் சிறப்பைப் பற்றி விளக்கிக் கூற நேர்ந்த ஒருபொழுதில் கல்வியின் சிறப்புக் கூறும் வெண்பா ஒன்றினைப் பாவலர் பாடிக்காட்டினார்.

> *''அருளைப் பெருக்கி யறிவைத் திருத்தி*
> *மருளை யகற்றி மதிக்குந் - தெருளை*
> *அருத்துவதும் ஆவிக் கருந்துணையா யின்பம்*
> *பொருத்துவதுங் கல்வியென்றே போற்று''.*

ஒருவனது அறியாமையை அகற்றி உணரும் ஆற்றலைப் பெருக்கி உள்ளத்தை நல்வழியில் திருத்தி இறையருளைப் பெருக்கி உயிருக்கு அருந்துணையாக ஆன்மிக இன்பம் விளைவிப்பது கல்வி என்பது பாவலர் கருத்து. மனிதனை மாண்புறுத்துவதில் கல்விக்குரிய பங்கினை மாணவர்களிடம் விளக்கிய பாவலர் அக் கருத்துக்களையெல்லாம் ஒரு வெண்பாவில் பொருத்தி வைத்துக் காட்டிய வெண்பா இது. தாளும் எழுதுகோலும் எடுத்து அடித்துத் திருத்தி உருவாக்கப்பட்ட வெண்பா அன்று. பாடல்களை நாவால் சொல்லப் பக்கத்தில் இருப்பவர் எழுதிக் கொள்வதே வழக்கம். அதுபோன்றே மாணவர்கள் எழுதிக் கொள்ளப் பாவலர் பாடிய வெண்பா இது.[1]

## தாய்மொழிப் பெருமை

சோறும் பருப்பும் காய்கறிகளும் உடலை வளர்ப்பன; உயிரை வளர்ப்பது தமிழே என்பார் பாவேந்தர் பாரதிதாசன். அனைத்தையும் துறந்த ஞானிகளுங்கூடத் தாய்மொழிப் பற்றில் தலைநின்றதற்குக் காரணம் ஒருவருடைய உணர்வையும்

உயிரையும் மொழிக்கல்வி வளர்க்கிறது. கல்வியால் வளம் பெற்றவர் உற்ற கண்களையே கண்கள் எனவும் கல்வி பெறாதவர் கண்களைப் புண்கள் எனவும் திருவள்ளுவர் பேசுவார்.

**''கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்''.**

(குறள் - 393)

என்பது திருக்குறள். இவையெல்லாம் கல்வியின் பயன்களை விளக்கக் காண்கிறோம். கல்வியால் கண்பெற்று உணர்வையும் உயிரையும் வளர்த்து உயர்ந்தோரையே மனிதர் எனவும் அந்நிலை பெறாத மக்களை உடல் வளர்த்து உயிர் வளர்க்காத மிருகம் போன்றவர் எனவும் புலவர் பேசுவர். இவ்வடிப்படையை விளக்கிய பாவலர் கல்வி அருளைப் பெருக்க வேண்டும் என்பார். அருள் உணர்வு மனித இயல்பில் இழையோடி நிற்கிறது. உண்மையான கல்வி அந்த உணர்வைப் பெருக்க வேண்டும் என்பது பாவலர் கருத்து. அடுத்துக்கல்வி அறிவைத் திருத்த வேண்டும் என்பார். மனிதக்குழந்தை அறிவோடு பிறக்கிறது. ஆகவே மனிதப்பிறவி அறிவுடைப் பிறப்பு எனப்படும். கல்வி இருக்கும் அறிவைத் திருத்தம் பெறச் செய்து நல்வழி காட்டுகிறது. சென்ற இடத்தில் செலவிடாது...நன்றின் பால் உய்ப்பது அறிவு என்பார் திருவள்ளுவர். (குறள்-422). கல்வியே அறிவைத் திருத்தும் என்பது பாவலர் கருத்து. அறியாமையை - பிழைபட உணர்தலை - உண்மையற்ற கருத்தை - அகற்றுவது கல்வியே ஆதலின் 'மருளை அகற்றி' என்றார். தெருள் என்ற சொல்லுக்குத் தெளிவு என்று பொருள். கேட்டறிந்து உணர்ந்துள்ள கருத்தைத் தெளிவாக்குவது கல்வி. ஆதலின் 'தெருளை அருத்துவதும்' என்றார். 'ஆவிக்கு அருந்துணையா இன்பம் பொருத்துவது' கல்வியே என்று கருதி அதனைப் போற்ற வேண்டும் என்றார். கல்வி விளக்கம் தருகின்ற சிறந்த நூல்களைச் சிறந்த நண்பர் என அறிஞர் கூறுவர். நல்லது செய்யும்போது உடனிருந்து ஊக்குவதும் அல்லது செய்யும் போது தடுப்பதும் சிறந்த நண்பர்க்கு இலக்கணமாகும். உடனிருந்து உறுதுணையாகி உயிருக்கு இன்பந் தருவது கல்வி என்ற பாவலர் கருத்து பொருத்தம் மிக்கதாகும். மேலும் 'ஆவிக்கு' என்ற சொல்லை நின்று நோக்க வேண்டும். உயிர் என்று சொல்லும்பொழுது இம்மை வாழ்வு மட்டுமின்றி அது மறுமைக்கும் துணைபுரிவதைக் காட்டும். மறுமை வாழ்வு இம்மையிற் செம்மையையே அடிப்படையாகக் கொண்டது. மறுமை வாழ்வு இம்மையின் பயனை அனுபவிக்கின்ற இன்ப

வாழ்வேயாகும். கல்வி காரணமாகச் செம்மையான இம்மை வாழ்வை வாழ்ந்தவரே மறுமை இன்பத்தை எய்த முடியும். திருவள்ளுவர் போன்ற தமிழ் அறிஞர்களும் இக்கருத்தை உடன்படுவர்.

**''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி யொருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து''.**

(குறள் - 398)

இம்மை வாழ்வுக்கு மட்டுமின்றி மறுமைக்கும் கல்வி பயன்படும் என்ற கருத்தே கல்வியின் சிறப்பை முழுமையாகக் காட்டுவதாகும்.

## ஆசானிடம் அன்பும் மரியாதையும்

கல்வியின் பெருமையை எல்லா நோக்கிலும் பேசிய பாவலர் கற்றோர் சிறப்பையும் உரிய வகையில் காட்டத்தவறவில்லை. கல்வியிற் சிறந்த கம்பரை வாழ்நாள் முழுதும் விளக்கம் செய்த பாவலர் கற்றோர் பண்பு நலன்களை வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் பாராட்டிப் பேசத் தவறியதில்லை. பாவலர் கல்வியின் சிறப்பைப் பேசியவர் மட்டுமல்ல, கல்வியைப் பெற்று உயர்ந்து உயர் வாழ்வு வாழ்ந்தவர். ஆகவே தாம் கல்வி விளக்கம் பெறுவதற்கு ஊக்கந்தந்த ஆசான் சங்கரநாராயண உபாத்தியாயரை வாழ்நாள் முழுதும் மறவாது போற்றிப் பாதுகாத்தனர்.

**''உள்ளபடி பல்கலையு மோகையுட னெந்தனக்குக்**
**கள்ளமற வோதுவித்த கண்மணியை - எள்ளளவும்**
**நீங்காமல் நேசம் நெகிழாமற் பக்கம்விட்டு**
**வாங்காமல் நீயிருத்தி வை''.**

பாவலர் சென்னையில் தங்கியிருந்த காலத்தில் கோட்டாற்றில் இருந்த தம் நண்பர் பாக்கியப் பண்டாரம் அவர்களுக்கு விடுத்த சீட்டுக்கவி இது. தம் ஆசிரியருக்கு உற்றுழி உதவுமாறு நண்பர் பாக்கியப் பண்டாரம் அவர்களை அடிக்கடி கடிதம் எழுதித் தூண்டுவது பாவலர் வழக்கம். கடிதங்களையெல்லாம் பாடல்களாக எழுதுவதே பாவலர் வழக்கம். இவ்வெண்பாவின் சொல்லோட்டமும் ஓசைநயமும் இயல்பாகப் பாவலருக்கு வெண்பா கைவந்திருந்த நிலையைக் காட்டும்.

## விளங்க முடியாத புதிர்

தனக்குக் கலைகளைக் கற்பித்த நல்லாசானிடம் பாவலர் கொண்டிருந்த பரிவையும் மதிப்பையும் இவ்வெண்பா இனிது காட்டும். இக்காலத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் கற்கும் மாணவர் இருவருக்குமிடையே உள்ள உறவை நினைத்தால் இது

புதுமையாகவே இருக்கும். கல்வியை யந்திரப் போக்கில் கற்றுத்தரவும் கற்கவும் படுகின்ற இக்காலத்தில் பாவலர் ஆசானிடத்துக் கொண்டிருந்த அன்பு விளங்க முடியாத ஒரு புதிராகவே தோன்றும். கல்வியில் மாணவர்களும் ஆசிரியர்களுமே முக்கியம். கல்வியின்றி வாழ்வில் வளம் காண முடியாது; ஆகவே ஒருவருக்குக் கல்வி அவசியம்; கல்வி கற்கும் ஒருவருக்கு ஆசான் மிக முக்கியமானவர்; ஆகவே மாணவர், ஆசானை மதிப்பது கல்வி உலகத்தில் உயிரான செய்தி. செய்குத்தம்பிப் பாவலர் தம் இறுதி மூச்சு வரை தமக்குக் கல்வி கற்றுத்தந்த ஆசிரியரை மதித்தார்; போற்றினார்; உதவினார்; உதவும்படி நல்ல உள்ளம் படைத்த செல்வர்களை ஊக்கினார். அந்த முயற்சியின் விளைவே சென்னையில் தாம் வாழ்ந்திருந்தாலும் கோட்டாற்றில் வாழ்ந்த பாக்கியம் பண்டாரம் என்ற தமது நண்பருக்குக் கடிதம் எழுதித் தம் கண்மணியனைய ஆசிரியரை எப்போதும் உடன் இருந்து பக்கத்தில் வைத்து உற்றுழி உதவி வரவிடுத்த வேண்டுகோள் ஆகும்.

## கல்விக்கண் தந்த கண்மணி

மனித உறுப்புக்களுள் கண் நுண்ணியது; கல்விக்கும் நட்புக்கும் காதலுக்கும் உயிராய் விளங்குவது. காமத்துப்பாலில் திருவள்ளுவர் 'கண்ணின் கருமணி' என்ற சொல்லை ஆள்வார். (குறள்-1123) கண்ணின் கருமணியே சுருக்கமாகக் கண்மணி எனப்படும். கண்மணியே கண்ணுக்குப் பார்வை தருவது. ஆகவே உயிர் போன்று விளங்குகின்ற காதலர்களையும் ஆசிரியர்களையும் கண்மணி எனப் பேசுவது மரபு. இம்மரபு போற்றியே எனக்குக் கற்றுத் தந்த கண்மணி எனச் சங்கரநாராயண உபாத்தியாயரைப் பாவலர் போற்றினார். ஆசிரியர் ஓகையுடன் கள்ளமற ஓதுவித்தல் வேண்டும் என்கின்றார் பாவலர். மகிழ்ச்சியோடு கற்பித்தல் கள்ளமில்லாது கற்பித்தல் இவையிரண்டும் ஆசிரியருக்கு அடிப்படையான இலக்கணங்கள்.

## கள்ளமறக் கற்பித்தல்

ஆசிரியரும் மனிதரே யாதலின் அவருக்குப் பல்வகைக் கவலைகள் இருக்கலாம். மாணவர் முகங்கண்டதும் ஆசிரியர் கற்பிக்கும் கருத்தில் தனை மறந்து மிகழ்ச்சியோடு கற்பித்தல் வேண்டும். அடுத்தது கள்ளமறக் கற்பித்தல். கருத்தை விளக்கும் போது ஆசிரியன் அக்கருத்தை மாணவர்கள் முழுக்க உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையோடு கற்பிக்க வேண்டும். தன்னை விஞ்சிய அறிஞன் ஆகிவிடுவானோ என்று கள்ள நினைவு

கொள்ளாது மாணவர் முன்னேற்றமே கருத்தாகக் கொண்டு கற்பிக்க வேண்டும். இது மிகமிக முக்கியம். சங்கர நாராயண உபாத்தியாயர் கற்றமறக் கற்பித்த நல்லாசான். ஆகவே அவர் போற்றிய ஆசிரியப் பண்புகள் இரண்டையும் ''ஓகையுடன் எந்தனுக்குக் கள்ளமற ஓதுவித்த கண்மணி'' எனப் போற்றினார். பாடலின் பிந்திய பகுதி பாவலர் ஆசிரியரிடத்துக் கொண்ட பாசத்தைக் காட்டுகின்றது. எந்நேரமும் அன்போடு பக்கத்தில் இருத்தி ஆசிரியரைப் பாதுகாக்க வேண்டும் என வேண்டுகின்றார்.

## மாணவனை நெறிப்படுத்தும் நல்லாசான்

செய்குத்தம்பிப் பாவலர் தம் மாணவர் வேலாயுதம் முதலியார் அவர்களுக்கு விடுத்த சீட்டுக்கவி ஒன்றும் பாவலரது புலமை நலத்தைக் காட்டுவதோடு ஆசிரியரின் இலக்கணத்தையும் தெளிவுபடுத்துகின்றது. தம் ஆசிரியரைப் போற்றியது போலவே தம் மாணவரையும் போற்றும் பாவலரது இயல்பு பாராட்டத் தக்கது. நல்ல ஆசிரியரைப் பெற்றுயர்ந்த பாவலர் தாமும் நல்லாசிரியராகத் திகழ்ந்து தம் மாணவர் வேலாயுத முதலியாரின் கல்வி வளர்ச்சியில் கருத்துக் கொண்டிருந்தார் என்பதை இப்பாடல் கவினுறக் காட்டுகின்றது. தம்மைத் தம் ஆசிரியர் சங்கர நாராயணர் கருதியது போலத் தம் மாணவர் வேலாயுதத்தைத் தாமும் கருத வேண்டும் எனக் கருதிய பாவலரின் பண்பாடு எல்லோரிடத்தும் நிலை பெற வேண்டும் என்ற பாவலரது ஆசையையும் இப்பாடல் காட்டி நிற்கின்றது.

> **''கற்றுவரும் பெருந்தொழிலைக் கனவிடையும்**
> **மறவாமல் கருத்துட் கொண்டு**
> **முற்றுறவே யாய்ந்துணர்ந்து முடித்தவந் நூல்**
> **ஏதினிநீ முடிக்கப் போகும்**
> **கொற்றமுறு நூலேது மேல்விளங்கு**
> **நூலென்ன? குணம தாக**
> **வெற்றிதரு மிலக்கணங்க ளேதேனும்**
> **பயின்றனையோ விள்ளு வாயே''.**

என்பது பாவலர் தம் மாணவருக்கு எழுதிய சீட்டுக்கவியாகும்.[2]

இப்பாடல் ஒரு ஆசிரியன் தம்மாணவருக்கு நினைவுபடுத்த வேண்டிய எல்லாச் செய்திகளையும் இணைத்துப் பேசுகின்றது. பாவலரது மாணவர் வேலாயுத முதலியார் மிகச்சிறந்த நண்பராகவும் திகழ்ந்தவர். வணிகத் துறையில் ஈடுபட்டு வளமாக வாழ்ந்தவர். பாவலர் பாக்கியம் பண்டாரம் என்ற நண்பருக்கு எழுதிய கடிதத்திலும் இவரை நினைவு கூர்ந்து வணக்கம் தெரிவித்துள்ளார். வேலாயுத முதலியார் பாவலர் மீது மிகுந்த

பரிவும் பற்றும் மரியாதையும் கொண்டவர். சிறந்த மாணவராக விளங்கிப் பல நேரங்களில் தம் ஆசிரியர் பாவலருக்கு உதவியவர். ஆகவே தம் மிகச்சிறந்த மாணவரின் கல்வி நலத்தில் நாட்டங்கொண்டு அவர் பின்பற்ற வேண்டிய கல்வி ஒழுகலாறுகளை நினைவுபடுத்துகின்றார்.

## சிறந்த ஆசிரியரது இலக்கணம்

கற்றுவரும் பெருந்தொழிலைக் கனவிலும் மறவாமல் போற்றி வரவேண்டும் என்பது முதல் கட்டளையாக அமைந்த வேண்டுகோள். காரணம் தம் மாணவர் தொழில் துறையில் வருகின்ற இடர்ப்பாடுகளால் கல்வி நோக்கத்தில் தளர்ச்சி வருதல் இயல்பென அறிந்து கல்வியில் கருத்துக் கொள்ள வேண்டும் என முதற்கண் நினைவுபடுத்துகின்றார். கல்வியில் கருத்துக் கொண்டு நூல்களை ஆய்ந்து வரும்போது முழுக்க ஆய்ந்த நூல் எது? இனி ஆய்ந்து முடிக்கப்போகும் நூல் எது? மேலும் என்னென்ன நூல்களையெல்லாம் ஆயும் திட்டம் உளது? இலக்கணத்தில் புதிதாகப் பயின்ற நுட்பம் எது? எல்லாவற்றையும் எனக்குத் தெரிவிக்க வேண்டும் எனத் தம் மாணவருக்குக் கடிதம் எழுதினார். இக்கடிதம் சிறந்த நல்லாசிரியர் டாக்டர். வ.சுப. மாணிக்கனாரை நினைவுபடுத்தியது. கோடைவிடுமுறையில் இரண்டு மாத விடுப்பில் வெளியூர் செல்லும் தம் மாணாக்கரிடம் விடுப்பில் இரண்டு நூல்களைக் குறிப்பிட்டுச் சொல்லி அவற்றைக் கற்றுத் தெளிந்து திரும்பி வரவேண்டும் எனவும் வந்தவுடன் அந் நூல்களில் சிறப்பாக அறிந்த நுட்பங்களை எனக்கு எடுத்து விளக்க வேண்டும் எனவும் அப்பேராசிரியர் கூறி விடுப்பார். ஜூன் மாதத்தில் விடுமுறை முடிந்து திரும்பும் மாணவர்களை நோக்கி விடுமுறையில் கற்றுத் தெளிந்த பகுதிகளை வினவுவார். சிறந்த ஆசிரியரது இலக்கணம் சிறந்த நூல்களைக் கற்கத் தூண்டுவதும் கற்றறிந்த நூல்களின் நுட்பங்களை வினவியறிதலுமாகும். பாவலர் அவர்களிடம் கற்ற மாணவர் எல்லார் பாலும் இப் பண்பினைச் செயல்படுத்தினார்கள். செய்குத்தம்பிப் பாவலர் ஆசிரியர் தொழில் புரிந்தவர் அல்லர். ஆனால் எதிர்காலத்தில் பெரும்புலவர்களாக வளர்ந்த பல மாணவர்களுக்குத் தமிழ் கற்றுத் தந்த சிறந்த ஆசிரியராக விளங்கினார். பாவலரிடம் தமிழ் பயின்ற சுசிந்தரம் வித்வான் சி.குமரேசப்பிள்ளையவர்கள் தம் ஆசிரியர் பாவலரது பல்வேறு தகுதிகள் குறித்தும் விரிவான நூலை எழுதியவர். நூல் எழுதாவிட்டாலும் பாவலரை நல்லாசானாக ஏற்றுப் பாவலர் புகழ் பரப்பிய மாணவர் பலராவர்.

## புலமை என்பது எது?

இதுவரை புலமைக்கு ஆணிவேராக அமைகின்ற கல்வியின் பெருமை, கற்கும் மாணவனின் நன்றியுணர்வு, கற்பிக்கும் நல்லாசிரியனின் நற்கடமைகள் ஆகிய மூன்றையும் பாவலர் பார்வையில் விளங்கிக் கொண்டோம். புலமைநலத்திற்கு முறையான கல்வியும் சிறப்பான உள்ளமும் தெளிந்த சிந்தனையும் அடிப்படையானவை. இங்கு புலமை பற்றிய சில விளக்கங்கள் இன்றியமையாதன. புலன் என்ற சொல்லுக்கு அறிவு என்பது பொருள். ஐம்புலன்களின் உணர்வினால் கல்வியும் அறிவும், விளக்கம் பெறுதலின் புலன் அறிவு எனப்படும். 'புலன் உழுது உண்மார்' 'புலன் அறிவார்' 'புலனல்லார்' எனவரும் பழந்தமிழ் இலக்கியச் சொற்கள் இவ்வாய்வில் நமக்குத் துணைபுரியும். புலமை என்ற சொல் அறிவு நுட்பத்தை மட்டும் குறிப்பதில்லை. கூர்த்த மதியும் கேட்போர் உள்ளத்தில் பதியுமாறு பளிச்செனக் கூறும் திறமும் புலமையின் கூறுகளே தவிரப் புலமை ஆக மாட்டாது. திருவள்ளுவரையும் கம்பரையும் புலமையுடையார் என்று நாம் கூறும்போது அவர் கூர்த்த மதிநோக்கிக் கூறவில்லை. தம்கூர்த்த மதியைப் பயன்படுத்தி மக்கள் நல்வாழ்விற்கு உதவும் நிலையான செய்திகளைக் கூறி மக்கள் வாழ்வை நெறிப்படுத்திய காரணத்தால் அப்பெருமக்களைப் புலவோர், அறிஞர் எனப் புகழ்கிறோம். ஆகவே கூர்த்த அறிவுடைமையும் நுட்பமான அறிவும் மட்டும் புலமை ஆகாது. மக்கள் நல்வாழ்வுக்கு வழிகாட்டி நெறிப்படுத்தும் அறிவே புலமை எனப்படும்.

## சொல்விளையாட்டுப் புலமை ஆகாது

செய்குத்தம்பிப் பாவலரது புலமை நலங்குறித்து நோக்கு கின்ற நமக்கு இக்கருத்துத் தெளிவு அடிப்படையானதாகும். ஒருமுறை பாவலர் நண்பர்களோடு உரையாடிக் கொண்டிருக்கின்ற போது கொல்லாமை பற்றிய விவாதம் தொடங்கியது. கொல்லாமை என்றால் பசுக்களையும் செம்மறியாடுகளையும் கொல்லுங்கள் என்று பொருள் எனக் கூறினார் பாவலர். இது கேட்டோரில் சிலர் திடுக்கிட்டனர்; சிலர் வியப்பில் ஆழ்ந்தனர். வேறு சிலர் நல்லல இலக்கிய விருந்து கிடைக்கப்போகிறது என எதிர்பார்த்துப் பொருள் பூத்த சிரிப்பினை வழங்கினர். பாவலர் பேசத் தொடங்கினார். கொல்லாமை என்ற தொடர் கொல் + ஆ + மை எனப்பிரிபடும். ஆ என்றால் பசு; மை என்றால் செம்மறியாடு; இவை இந்நிகழ்ச்சியைப் படிக்கும் நாம் பாவலருடைய கூர்த்த மதியை, தமிழறிவை, சொல் விளையாட்டை உணர்கிறோமே

தவிரப் பாவலருடைய இக்கூற்று அவரது புலமைகாட்டும் எனக் கூறுவது பொருந்தாது. புலமை வெளிப்படுகிறது எனச் சொல்வது பொருந்தாது. இன்றைக்கு இலக்கிய உலகத்தில் மதிநுட்பமும் கூர்த்த சொல்லாட்சியும் சிறந்த வெளிப்பாடும் மட்டும் கொண்டாடப்படுகிறது. இவையெல்லாம் புலவர்க்கு வேண்டுவனவே தவிரப்புலமை ஆகிவிடாது. மக்கள் வாழ்வை நெறிப்படுத்தும் நல்லகருத்து வளம் மிக்க வெளிப்பாடுகளே புலமை எனக் குறிக்கப்படும்.

## கற்பனை கூடப்புலமை ஆகாது

இன்னும் ஒருபடி மேலே சென்று கூர்த்தமதியும் ஆழ்ந்த கற்பனையும் சிறந்த வெளிப்பாடும் கூடப்புலமை ஆகிவிடாது; அவை புலமையின் அடையாளங்களே எனல் பொருந்தும். இக்கருத்தை விளங்கிக் கொள்வதற்கும் பாவலர் பாடல் களிலிருந்து ஒரு சான்று காண்போம். சொல்லையும் தொடரையும் சேர்த்தும் பிரித்தும் வேறு வேறுபட்ட பொருள்களை உணர்த்துவது தமிழில் சிலேடை எனப்படும். தமிழ்ப்புலவர்கள் தம்திறம் காட்டச் சிலேடை நயம்படப் பாடினர். இவ்வாறு பாடுவதில் வல்லவர் கவிகாளமேகப் புலவர் ஆவார். பாவலரது மாணவர் சாத்தாங்குட்டிப் பிள்ளை அவர்கள் பாவலரது வெண்பாக்களைக் கற்கிற போது கவிகாளமேகமே மீண்டும் வந்து பாவலராகப் பிறந்தாரோ என்ற எண்ணம் ஏற்படுவதுண்டு எனப் பாராட்டுவார். பாவலருடைய வெண்பாக்களைப் பார்க்கும்போது இப்பாராட்டு உண்மையே, புகழ்ச்சி ஆகாது எனத்தோன்றும்.

## பேனாவும் யானை ஆகியது

பன்னிருகைப்பெருமாள் என்ற பெயருடைய ஒருவர் பாவலருடைய மாணவர் ஆவார். ஒருமுறை பாவலர் கூறிய கருத் தொன்றை அவர் குறிக்கத் தொடங்கி எழுதுகோலால் தாளில் எழுதினார். இதைப்பார்த்த பாவலர் உள்ளத்தில் கவிதை ஊற்றுப் பெருக்கெடுக்க ஒரு வெண்பாவைப் பாடினார்.

> **"அங்கை யிருப்பதனால் ஆகங் கருத்ததனால்**
> **வெங்கண் முனைநோக்கும் வெம்மையினால் - எங்களுயிர்**
> **பாநாறும் வாயான்நல் பன்னிருகைப் பெம்மான்கைப்**
> **பேனாவும் யானையெனப் பேசு".**

இவ்வெண்பாவின் மூன்றாவது, நான்காவது அடிகளில் பன்னிருகைப் பெருமாள் என்ற மாணவர் கையிலிருக்கும் பேனாவும் யானையாகும் எனக் கூறப்படுகிறது. யானையும் பேனாவும் வேறு வேறு பொருள்கள் மட்டுமல்ல, அளவுப்

பெருமைக்கும் சிறுமைக்கும் உரிய வேறுபட்ட பொருள் களுமாகும். யானையும் பேனாவும் மூன்று தன்மைகளில் ஒன்றாகின்றன. அத்தன்மைகள் முதலிரண்டு அடிகளில் விளக்கப் படுகின்றன. யானை, பேனா இரண்டிற்குமே 'அங்கை' இருக்கிறது. அங்கை என்ற சொல்லுக்கு யானையின் துதிக்கை என்றும் அழகிய கை என்றும் பொருள்படும். மாணவரது கையகத்து இருக்கிறது அழகிய பேனா. யானையிடத்து இருக்கிறது துதிக்கை. இரண்டாவது ஒப்புமை உடல் கருத்திருப்பது. யானையின் உடலும் கருத்துக்கிறது; பேனாவும் கருப்பு வண்ணம் பெற்றிருக்கிறது. மூன்றாவது ஒப்புமை வெங்கண் முனை நோக்கும் வெம்மை ஆகும். கண்ணோட கூடிய முனை பேனாவுக்கு இருக்கிறது; வெம்மையான போர்க்களத்தை யானை நோக்குகிறது. இம்மூன்று ஒப்புமைகளும் இருப்பதனால் பேனாவும் யானையெனப் பேசு என அமைகிறது வெண்பாப் பாடல்.

## புலமை என்பது வாழ்வை வளப்படுத்துவதே

இவ்வெண்பா பாவலரது சமயோசித புத்தியை, கூர்த்த மதியை, பளிச்செனக் கேட்போர் உள்ளத்தில் நிலைக்குமாறு கூறும் திறத்தை சுருக்கமாகப் பாவலர் சிலேடைத் திறத்தைக் காட்டுமேயல்லாது பாவலர் புலமைத் திறம் காட்டியது எனக் கூற முடியாது. காரணம் பேனாவும் யானையும் ஒன்றெனப் பேசிய நுட்பம் நிலையான மக்கள் நல்வாழ்வை நெறிப்படுத்தும் புலமை ஆக மாட்டாது. பாவலரது அறிவு நுட்பமும் தமிழ்ச் சொற்றிறமும் சிலேடை நயமும் காட்டும் உண்மை புலமை ஆக மாட்டாது என விளங்கிக் கொண்டோம். இதனால் புலமை என்பது நிலையான எல்லோருக்கும் நலம் பயக்கின்ற வாழ்க்கையை வளப்படுத்து கின்ற கருத்துக்களை வெளிப்படுத்துவதே ஆகும் என விளங்கிக் கொண்டோம். இத்தெளிவோடு பாவலர் புலமை நலங்காணுவது சமுதாய நலம் படைக்கும் ஆற்றல் பெறும். பாவலர் சில பெருமக்களைப் பாராட்டிப் பாடியுள்ளனர். பாவலர் பாராட்டிய பெருமக்கள் எல்லாம் சமுதாய நலம்நாடிச் சிறந்த கருத்துக்களைப் பாடிய புலவர் பெருமக்கள், மக்கள் நலம் நாடி அவர் தேவை யுணர்ந்து வாரி வழங்கிய வள்ளற்பெரு மக்கள், கல்விக் கழகங் கண்டு அறிவுநலம் பெருக்கிய அருமையுடையோர் எனப் பலராவார். இவர்களைப் பாராட்டும் வகையில் பாவலர் காட்டும் அறிவு நுட்பம், சொல்லாற்றல், சிலேடை நயம் ஆகியன மக்கட்

சமுதாய நல்வாழ்விற்குப் பெருந்துணை புரிவதால் பாவலரது புலமையெனக் கருதப்படும் தகுதி பெற்றுச் சிறக்கிறது.

## கவிமணியை வாழ்த்திய வெண்பாக்கள்

செய்குத்தம்பிப் பாவலரது சமகாலப் புலவர் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, பாவலர் பாராட்டிப் பாடிய புலவர் பெரு மக்களுள் கவிமணி குறிப்பிடத்தக்கவர். சமகாலப் புலவராக விளங்கியதோடு நாஞ்சில் நாட்டுப் புலவராகவும் விளங்கிய கவிமணி பாவலரோடு கருத்து உடன்பாடும் உடையவர். கவிமணி அவர்களுடைய எழுபதாம் ஆண்டு நிறைவு விழாவின் போது அவரைப் பாராட்டிப் பாவலர் இருவெண்பாக்கள் பாடினார். இவ்வெண்பாக்கள் புலமை நயம் மிக்கதாக விளங்கிப் பெருமை பெருகின்றன.

**''ஓரெழுபா னாண்டு உனையுவந்த வையகந்தான்**
**ஈரெழுபா னாண்டும் இனிதுவப்பச் - சீரெழுபாச்**
**சிந்தும் பெருமுகிலே தேசிகவி நாயகனே**
**சந்ததமும் வாழ்க தழைத்து''.**

**''புதுமைத் துறையினில் புத்தமுதம் சொட்டப்**
**பொதுமைக் கவிமலரே பூத்த - நொதுமையிலாத்**
**தேன்றருவாய் வீற்றிருக்கும் தேசிகவி நாயகநீ**
**வான்றருவாய் வாழ்க மகிழ்ந்து''**

இவ்விரண்டு நேரிசை வெண்பாக்களுமே எளிமையும் இனிய ஓசையும் மிக்கன. இரண்டு வெண்பாக்களுமே கவிமணி அவர்கள் எக்காலமும் இன்புற்று வாழ்க என வாழ்த்திப் பாடிய பாக்கள். ஒரு கவிஞர் மற்றொரு கவிஞரை உளமாரப் பாடிய வாழ்த்துப் பாக்கள்.

## புலமைநலத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்

இவ்வெண்பாக்களில் அமைந்துள்ள கவிமணி பற்றிய புலமைத் திறனாய்வே நாம் காணத்தக்கதாகும். 'சீர் எழுபாச்சிந்தும் பெருமுகில்' என்பதும் 'புதுமைத் துறையினில், புத்தமுதம் சொட்டப் பொதுமைக் கவிமலர்' என்பதும் கவிமணியின் பாடல் திறத்தைப் பாராட்டி எழுந்த புகழுரைகள். மேகம் மழைபொழிவது போலக் கவிமுகிலாகிய தேசிகவிநாயகன் சீர்மிகு பாடல்களைப் பொழிந்தான் எனப் பாராட்டுவார். எழுபதாண்டுகள் உன்னால் மகிழ்ச்சி பெற்ற இவ்வுலகம் இன்னும் எழுபதாண்டுகள் நீ இனிது வாழ்ந்திருக்க விரும்புகிறது எனப் பாடப்பட்ட நோக்கத்தையும் புலப்படுத்துவார். இரண்டாவது பாடலில் கவிமணி தேசிக விநாயகம் அவர்களுடைய புதுமைச் சிறப்பும் பொதுமைச் சிறப்பும் பாராட்டப்படும். புதுமைத்துறையினில் பாடியது

கவிமணியின் தனிச்சிறப்பு. பழங்காலப் புரியாத அருமை நடையை நீக்கி, யாரும் புரிந்து கொள்ளும் இனிய எளியநடையில் பாடியது கவிமணியின் புதுமைத் துறையாகும். மேலும் பாவலர் 'பொதுமைக் கவிமலரே' எனக் கவிமணியைப் புகழ்வர். இப்புகழ் மொழிகளில் கவிமணியின் பொது நோக்குப் பாராட்டப்படும். கவிமணியின் கவிதைகளைக் கற்றார் இப்பாராட்டு உண்மை என உணர்வர். பழமையாயினும் புதுமையாயினும் சிறந்தவர் எக் கொள்கையை உடையவராயினும் அவர் சிறப்பு நோக்கிப் பாராட்டுவது கவிமணியின் இயல்பு. 'சீரிய செந்தமிழ்ச் செல்வன்' எனவும் 'செய்குத்தம்பிப் பாவலன்' எனவும் பாவலரைப் பாராட்டியவர் கவிமணி. கவிமணியின் எழுபதாம் ஆண்டு நிறைவைப் பாராட்டி நிகழ்ந்த விழாவுக்குத் தம் தோழர்களோடு பாவலர் சென்று ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்தார். மேடைக்கு வந்த கவிமணி பாவலரைப் பார்த்தவுடன் எழுந்து வந்து வற்புறுத்திப் பாவலரை மேடைக்கு அழைத்துச் சென்றார். மேடையில் ஏறிய பாவலரே அவ்விழாவுக்குத் தலைமையும் ஏற்றுக் கவிமணியைப் பாராட்டினார். பாராட்டும் போதும் சிறந்தவற்றைச் சிறந்த முறையில் பொதுநலம் நாடிப் பாராட்டுவதே புலமைத்திறம் என்பதற்குப் பாவலர் எடுத்துக்காட்டாக விளங்கினார்.

## மக்களும் அவர்க்கு வழிகாட்டும் நெறிமுறைகளும்

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மிகப்பல மெய்ஞ்ஞான நூல்களைத் தந்து, தலையாய தமிழ்ப்பணி ஆற்றிய பெருந்தகை ஆர்.பி.எம். கனி அவர்கள். பாவலர் படைத்த நூல்களைத் திறனாய்வு செய்யும்போது பாவலர் படைப்புக் களிலேயே மிகச்சிறந்த நூல் 'நபிகள் நாயக மான்மிய மஞ்சரி'யே ஆகும் எனக் கூறுவார். ஆயும் அறிஞர் நோக்கில் அஃது மிகச் சிறந்த திறனாய்வாகும். பாவலர் படைப்புக்களில் மான்மிய மஞ்சரி தனி இடம் பெறுகின்றது என்றது உண்மையே. நபிகள் நாயகம் அவர்களுடைய முன்மாதிரியாக அமைந்த முழு வாழ்வை நோக்கிப் பாவலர் பாடிய 102 பாடல்களின் தொகுதி அந்நூலாகும். (இந்நூல் பற்றிப் பாவலர் படைத்த இலக்கியங்கள் என்ற பகுதியில் காண்க). இந்நூலில் பெருமானார் வாழ்வில் பாவலர் தெரிந்தெடுத்துக் கொண்ட நிகழ்ச்சிகள் நூற்றிரண்டு. அவை காலமுறைப்படி தொகுக்கப்படவில்லை. இக்கால நடை முறையில் பொதுமக்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கமாக விளங்கும் நிகழ்ச்சிகளைப் பாவலர் தெரிந்தெடுத்துள்ளார். நபிகள் நாயகத்தின் தனி பெருமை பேசும் இந்நூலில் இக்கால மக்களே -

அவர்க்கு வழிகாட்டும் நோக்கமே முந்தி நிற்கிறது. நபிகளாரின் பெருமை பேசி முடியாதது. தாம் புகழ்வதால் அவர்களது புகழ் கூடிவிடப் போவதில்லை. நபிகளாரின் நற்புகழ் அவர்களைப் போற்றிச் செயல்படும் விதத்திலேயே நாட்டப்படும் என்று துணிந்து பொதுமக்கள் பின்பற்றுவதற்குரிய வகையில் நூலைப் படைத்துள்ளார்.

## மக்கள் பின்பற்றுவதே நபிகளார் பெருமையாகும்

நபிகள் நாயக மான்மிய மஞ்சரியில் 7 முதல் 24 வரை உள்ள 18 பாடல்கள் ஒரே பொருள் பற்றி அமைந்தன. இப்பாடல்கள் அனைத்திலும் மக்கமாநகரத்து மக்களிடம் நபிகளார் உற்ற துன்பங்களும் துயரங்களுமே பேசப்படுகின்றன. ஒரு மனிதர் தம் சமுதாயத்தார் திட்டமிட்டுச் செய்கின்ற இத்தனை அல்லல் களையும் பொறுமையோடு தாங்கிக் கொள்ளுதல் இயலுமா என்ற ஐயத்தை அனைவர் உள்ளத்திலும் தோற்றுவித்துவிடும். பாவலர் பாடியுள்ள 18 நிகழ்ச்சிகளும் வரலாற்று அடிப்படையில் பேசப் பட்டவை. இத்தனை இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் பொறுமையோடு சகித்துக் கொண்டதோடு இன்னல் விளைத் தோருக்கு இடையூறு செய்யாமல், அவர்களுக்காக இறைவனிடம் கையேந்தி நல்லதை வேண்டிய நயத்தகு பண்பாளரை மக்கள் போற்றி வாழ வேண்டும் என்பதே பாவலர் நோக்கம். இறை யாலயத்தில் இறைவனைத் தொழுது கொண்டிருக்கும்போது ஒட்டகத்தின் ஊன் குடல் தோல் அத்தனையையும் கொண்டு வந்து அவர்கள் மேல் கொட்டிய கொடுமை நிகழ்ந்தது. அக்கொடியவன் பாலும் சினக்காது சிந்தை காத்த அன்புடைமை வியப்புக் குரியதாகும்.

> **"ஏய்ந்ததசை கொண்டெறிந்த**
> **ஈனனுக்கு மின்னருட்சீர்**
> **ஆய்ந்தளித்துக் காத்தவுங்கள்**
> **அன்புடைமை நன்றேயோ**
> **ஆலநபி நாயகமே**
> **அன்புடைமை நன்றேயோ!"**

(பா-12)

## உலகமக்களுக்கு வழிகாட்ட வந்த நபிகளார்

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு? (குறள்-987) என்ற திருக்குறளைப் படிக்கின்ற போது சால்புடைமை இது என உணர்கிறோம். நபிகள் நாயகம் வாழ்வில் காட்டிய பொறுமை சால்புடைமைக்கு விளக்கம் தருகிறது. 7 முதல் 24 வரை உள்ள பாடல்களில் ஈற்றடியை நோக்க

வேண்டும். உலகநபி நாயகம், பெருமை நபி நாயகம், நாதநபி நாயகம், வேதநபிநாயகம், ஆதிநபிநாயகம், போத நபிநாயகம் என ஈற்றடிகளில் நபிகளாரின் பெருமை குறிக்கப் பயன்படுத்தும் சொற்கள் அவர்களின் தகுதி காட்டுவன. உலகத்துக்கு வழிகாட்ட வந்த அண்ணலார் வாழ்வின் நிகழ்ச்சிகள் உலக மக்கள் அனைவராலும் போற்றத்தக்கவை எனக் காட்டிச் செல்வார். நபிகளார் பேரருள் காட்டி மன்னித்த மாண்புகளையெல்லாம் அடுக்கிப் பேசுகின்றார். அவை அத்தனையிலும் நபிகளார் காட்டிய பொறுமையே பெருமையாகப் பேசப்படுகின்றது.

## கொற்ற நபிநாயகத்தின் கொள்கை நலம்

நபிகள் நாயகம் தோழர்கள் சூழ வீற்றிருந்த போது யூதர் ஒருவரின் சவம் எடுத்துச் செல்லப்பட்டது. அது கண்ட நபிகளார் எழுந்து மரியாதை செய்தனர். அப்பொழுது பக்கத்தில் இருந்த தோழர், 'எடுத்துச் செல்லப்படுவது யூதருடைய உடல்' எனக் கூற நபிகளார் அவர் உடலின் உள்ளும் இறைவனது உயிர் உறைந்திருந்தது என்று கூறினர். இந்நிகழ்ச்சியைப் பாடும் பாவலர் கொற்றநபி நாயகத்தின் கொள்கை நலத்தைப் பெருமைப்படுத்திப் பாடுகின்றார்.

***''மாண்டசவம் ஒன்றெடுத்து***
***வந்திடக்கண் டங்கெழும்பி***
***வேண்டமரி யாதைசெய***
***வீற்றிருந்த நண்பர் 'இவர்***
***திண்டரிய காபிர்' எனச்***
***செப்ப 'அவர் உள்ளுமுயிர்***
***கூண்டதுண்'டென் றோதியநும்***
***கொள்கைநலம் மேலேயோ***
***கொற்றநபி நாயகமே***
***கொள்கைநலம் மேலேயோ!''***

(பா-25)

## நிகரற்ற சமூக ஒதுக்கலையும் சகித்துக்கொண்டமை

மக்கா நகரத்து மக்கள் நபிகளார் பேசிய புதுமார்க்கம் அளவற்ற இடையூற்றுக்குப் பிறகும் வளர்ந்து வருதல் கண்டு பொறுமையை இழந்தனர். மக்கமாநகரத்தின் பக்கத்திலிருந்த மலைப் பொதும்பரில் நபிகளாரையும் அவர் சுற்றத்தினரையும் தள்ளி உணவு ஏதும் அங்கு கொண்டு செல்லப்படாதவாறு தடுத்து அளவற்ற அல்லலுக்கு ஆளாக்கினர். நபிகளார் பிறந்த 'பனீஹாஷிம்' குலத்தோர் அனைவரையும் ஒதுக்கி வைத்தனர். அங்குக் கிடைத்த இலை, தழைகளை உண்டு மூன்றாண்டு காலம் பொறுமையோடு காத்திருந்து பின்னர் நகரத்து மக்களே வந்து

அழைத்துவர நபிகளார் நகருக்குத் திரும்பினர். உலக வரலாற்றிலேயே இதுபோன்றதொரு சமூக ஒதுக்கல் நடந்ததாகக் கூறமுடியாது. அந்நிலையிலும் குடும்பத்தார் அனைவரும் நபிகளாருக்காக ஏற்ற இன்னல்கள் உலகில் நிகரற்றவை. இந் நிலையிலும் பொறுமைகாத்த புண்ணிய நபியுடைய பொறுமையும் மனவலிமையும் போற்றற்குரியதாகும். (பா-69)

## வியர்வை உலருமுன்னர் கூலியைத் தருக

நபிகள் நாயகத்தின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் அத்தனையும் பொதுமக்கள் தம்முடைய நலத்திற்காகப் பின்பற்றுதற்குரியவை. ஆகவே பாவலர் எந்த நிகழ்ச்சியைப் பாடினாலும் அது மக்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகவே அமைய முடியும். உழைப்பாளர்கள் ஒப்பந்தப்படி பணியை முடித்ததும் அவர் உடல் வியர்வை உலரும் முன்னர் உரிய தொகையினைத் தவறாது கொடுத்து விடுதல் மிகச்சிறந்த நற்செயலாகும் என்பது பெருமானார் பொருள்மொழியாகும். இதனைத் தாமும் போற்றித் தம்மைச்சார்ந்தவர்களையும் போற்றுமாறு தூண்டியது நபிகளாரது பெருமையாகும்.

> **"நற்றவ'மென் றோதுமுங்கள்**
> **ஞாயமுறை ஆயேமோ**
> **ஞாலநபி நாயகமே**
> **ஞாயமுறை ஆயேமோ!"**

(பா-30)

எனப்பாவலர் நபிகள் நாயகம் உரைத்துக்காட்டிய நல்லொழுக்கத்தைப் பாராட்டுவார். வியர்வை உலரு முன்னர் உழைத்தோர்க்குக் கூலியை வழங்கி விடுதல் 'நற்றவம்' என நபிகளார் நவின்றார்கள். நல்லொழுக்கம் இதுவென விளக்கம் தரவந்த நபிகளார் அதனை 'நற்றவம்' எனக்குறிப்பிட்டது சிந்தனைக்குரியது.

## தவவொழுக்கம் இதுவே

தவம் என்ற சொல்லுக்கு ஒழுக்கம் என்று உரை சொல்ல முடியும் என்றாலும் இறைவன் பாராட்டும் ஒழுக்கமே தவ ஒழுக்கம் என்று காட்டவே இச்சொல்லாட்சி முயல்கின்றது. திருவள்ளுவருடைய நடையினை ஆய்ந்தார் இதனை உணர முடியும். இறைப்பாராட்டுக்குரிய ஒழுக்கங்களைத் திருவள்ளுவர் தவவொழுக்கம் என்பார். (குறள் 261-270). இதனைப் பாவலர் 'ஞாய முறை' எனவும் ஞாலம் அனைத்திலும் செல்லுபடியாகும் ஞாயமுறை எனவும் பாராட்டுவார். ஞாலம் முழுமைக்கும்

இறைத்தூதராக விளங்கிய நபிகளாரை 'ஞாலநபி' எனப் பாராட்டுவது நினைக்கத்தக்கது. நபிகளார் ஞாலத்தின் எப் பகுதிக்கும் பொருந்தி வரக்கூடிய ஞாயமுறைகளையே வலி யுறுத்தினர் என்ற உண்மையைப் பாவலர் உரைக்க முந்துவது உணரத்தக்கதாகும்.

## மனித மனம் நோக்கும் மாண்பு

'நோன்பை மறவாதே' என்ற தலைப்பில் நபிகளார் நானிலத்திற்கு உரைத்துக்காட்டிய நோன்பின் மாண்பினை மனிதமனத்திற்கு உரைத்துக் காட்டுவர்.

**'நோன்பை மறவாதே, நெஞ்சே நீ**
**நோன்பை மறவாதே'**

என மனித நெஞ்சை நோக்கி நோன்பின் சிறப்பினைச் செப்புவர். றமலான் (றம்ஜான்) நோன்பின் மகத்துவத்தை முஸ்லிம்களுக்கு மட்டும் உரைக்காது நெஞ்சுடைய மனிதர் அனைவருக்கும் உரைத்துக்காட்டுவதே இங்கு உணரவேண்டிய செய்தியாகும். மேற்குறித்த தலைப்பின் முதற்பாடலில் 'புர்கான்' என்ற அறபுச் சொல்லைப் பாவலர் ஆள்வர். இறுதித் திருமறையின் ஒரு பெயராகும் இது.

**"வான்புகழுந் தேவர்பிரான்**
**வந்தளித்த வண்புர்கான்"**

எனப்பாடுவார். ஹிராக்குகையில் தனித்தும் பசித்தும் விழித்தும் இருந்து தவம் இயற்றி இறையருளை நிறைவுறப் பெற்று வானவர் தலைவர் ஜிப்றீல் திருமறையின் சிலவசனங்களை நபிகளாருக்கு ஓதிக்காட்டினார். இவ்வசனங்கள் மூலம் இறைவன் நபிகளாருக்குத் திருமறையை வழங்கத் தொடங்கினான். இந் நிகழ்ச்சியைப் பேச வந்த பாவலர், 'வான் புகழும் தேவர் பிரான்' என வானவர் தலைவர் ஜிப்றீலைக் குறிக்கின்றார். 'தேவர் பிரான்' என அனைவருக்கும் விளங்கும் வண்ணம் வானவர் தலைவர் குறிக்கப் பெறுதல் நோக்கத்தக்கது. வானவர் தலைவர் நபிகளாரிடம் வந்து அறிவித்த வண்'புர்கான்' என்க. அனைத்து நூல்களுக்கும் தாய் எனக் கருதப்படுவது புர்கான் எனப்படும் இறுதித் திருவேதமாகும். அதன் சொல்வளம், கருத்து வளம், ஞான வளம் அனைத்தும் விளங்குமாறு வண்'புர்கான்' என உரைத்தார்.

## சமத்துவத்தில் மக்களெல்லாம் வாழ

நோன்பை மறவாதே என்ற தலைப்பின் எட்டாவது பாடலில்

**"வாய்ந்தசமத் துவத்தில்**
**மக்களெல்லாம் வாழ..."**

'நெஞ்சே நீ நோன்பை மறவாதே' எனப் பாடுவார். நோன்பை மறக்க வேண்டாம் என வலியுறுத்துவதற்கும் பாவலர் கூறும் காரணம் சமத்துவ நெறியில் மக்களெல்லாம் சிறந்து வாழ வேண்டும் என்பதேயாகும். மக்களெல்லாம் சமத்துவ நெறியில் சிறந்து வாழ வழிகாட்டுவதே பாவலர் பாக்களின் நோக்கம் என்பதை இங்குப் பாவலர் தெளிவுபடுத்துவார். செய்தி ஒன்று யாரால் சொல்லப்பட்டதாயினும் அது விளக்கிச் சொல்லப் படுவதற்குக் காரணம் மக்கள் வாழ்வே என்ற பாவலர் கருத்து ஆழ்ந்த சிந்தனைக்குரியது. பாவேந்தர் பாரதிதாசன் அறிஞர் பெருமக்களுக்கு அறிவுரையாக ஒரு கருத்தை வலியுறுத்துவார். எக்கருத்தைச் சொல்லும் போதும் 'பொதுமக்கள் நலம் நாடி' அக்கருத்துப் பேசப்பட வேண்டும் என்பது பாவேந்தர் கருத்து. இக்கருத்தைப் பாவேந்தர் வலியுறுத்திப் பாடும்போது அவருக்கு நாற்பதாண்டுகளுக்கு முன்னர் பாவலர் அக்கருத்தை வலியுறுத்திப் பேசியது காணத்தக்கதாகும். இப்போக்கு பாவலர் வலியுறுத்திய அனைத்துக் கருத்துக்களுக்கும் பொருந்துவதாகும்.

## நாம் இருவரல்லர்; மூவர்

நபிகள் பெருமானாரும் நாயகத் தோழர் அபூபக்கர் அவர்களும் மக்காவிலிருந்து இடம் பெயர்ந்து மதீனா நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். இடையில் 'தௌர்' என்ற குகையில் தங்கி ஓய்வு எடுக்கின்றனர். அக்குகையின் சிறுவழி சிலந்தி வலை பின்னப்பட்டுள்ளது; புறாகூடு கட்டியுள்ளது. அக் குகையினுள்ளே நபிகளாரும் நாயகத் தோழரும் இருக்கின்றனர். குகைக்கு வெளியே பகைவர் பலராகி வந்து தேடுவது தெரிகின்றது. அப்போது தோழர் நபிகளாரை நோக்கி நாமோ இருவர்; பகைவரோ மிகப்பலர்; என்ன செய்வது? என அச்சம் தோன்ற உரைத்தார். அப்போது நபிகளார் தோழரை நோக்கி அமைதியாக உரைத்தனர். 'நாம் இருவரல்லர்; மூவர், இறைவனும் நம்மோடு உறைகின்றான் அஞ்ச வேண்டாம்' என்றனர். இது போன்று இறைவனுக்கு மட்டுமே அஞ்சி நபிகளார் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிய நிகழ்ச்சிகள் மிகப்பல, நேருபெருமகனார் 'தௌர்' குகை நிகழ்ச்சியைப் படித்து வியந்து நபிகளாருடைய இறை நம்பிக்கையின் ஆழத்தையும் அகலத்தையும் பாராட்டுவார். இந்நிகழ்ச்சியைப் பாவலர் பாடுகிறார்.

**''ஒன்னலரோ பற்பலர்நாம்**
**ஓரிருவர் உற்றடர்ந்தால்**
**என்ன செய்வ' தென்றழுங்க**
**'இல்லையில்லை :யாம் மூவர்**

பன்னரிய ஈசனும் நம்
பக்கமுளன் அஞ்சலிர்'என்
றுன்னரிய வாய்மைசொற்ற
ஊக்கநிலை நோக்கேமோ
ஓகைநபி நாயகமே
ஊக்கநிலை நோக்கேமோ!''

(பா-79)

## பொதுமக்கள் நலம்நாடிப் பொதுச்சொல்லை ஆளல்

அப்பாடலில் நபிகளாரின் ஊக்கநிலை நினைத்துப் பார்க்க முடியாத பெருமையுடையது எனப் பாராட்டுகின்றார். உன்னரிய.. ஊக்கநிலை என்ற சொற்களை நோக்குக. தோழர் கொண்ட அச்சத்தை நீக்க நாம் இருவர் அல்லர்; இறைவனும் நம்பக்கம் உளன் என உரைத்தார்கள். தோன்றாத் துணையாக எப்போதும் இறைவன் நம் பக்கத்து உளன் என உணர்வதே இறை நம்பிக்கையாளர் பெறுகின்ற பெருவலிமையாகும். அவ் வலிமையை நபிகளார் தாம் பெற்றிருந்ததோடு தம் தோழருக்கும் ஊட்டினர். இங்குப் பாவலர் 'ஈசன்' என்ற சொல்லை ஆளுவர். தமிழ் அகராதி 'ஈசன்' என்ற சொல்லுக்கு இறைவன், சிவபெருமான், திருமால், பிரமன் என எல்லாச் சமயங்களும் போற்றி இறைவனைக் குறிக்கும் சொற்களைப் பொருளாகக் குறிக்கும். பாவலர் பாடலையும் உட்கொண்டு அகராதிப் பொருள் உரைக்கப்படுமாயின் 'அல்லா' என்ற பெயரும் இப்பட்டியலில் இணைந்துவிடும். ஈசனும் நம் பக்கம் உளன் என்ற நபிகளாரின் சொற்களுக்கு இறைவனாகிய அல்லாவும் நம்மோடு உளன் என்றே பொருள். இஸ்லாம் அல்லாத பிற சமயத்தார் இப்பாடலைப் படிப்பராயின் ஈசன் என்ற சொல்லுக்கு இறைவன் என்ற பொருள் கொண்டு இறைவனைக் குறிக்கத் தாம் பயன்படுத்தும் சொல்லைக் கருத்தில் கொள்ள இயலும். பொதுமக்கள் நலம்நாடி இறைவனைக் குறிக்க ஈசன் என்ற பொதுச் சொல்லைப் பாவலர் ஆள்வர். பொதுமக்கள் நலம்நாடி இறைவனைக் குறிக்க ஈசன் என்ற பொதுச் சொல்லைப் பாவலர் ஆள்வர். இக் கருத்தோட்டத்தைப் பாவலர் பாடல்கள் அனைத்திற்கும் பொருத்திப் பார்க்க முடியும். பொதுமக்கள் நலம் நாடிப் பொதுச் சொல்லை ஆள்வதே பாவலர் போற்றும் புலமை நலம் எனத் தெளிந்து போற்றுவோம்.

# அடிக்குறிப்பு

1. சி. குமரேசப்பிள்ளை, செந்தமிழ் வளர்த்த செய்குத்தம்பி, பகுதி II பக்.42
2. மு.நூ., பக்.63
3. டாக்டர், செ. பசுலுமுகியித்தின், மகாமதிப் பாவலர், 1986, பக்.60

# நிறைவுரை

செய்குத் தம்பிப் பாவலரது சமூக நல்லிணக்கப் பண்பு, இலக்கியங்களை - அவை எச்சமயச் சார்புடையவாக இருந்தாலும் - அவற்றை இந்தியாவின் பொதுச் சொத்தாகக் கருதும் பொது நோக்கு, இலக்கியப் படைப்பாற்றல், பழுத்த இலக்கியப் புலமை, சதாவதானம் ஆற்றும் அளவு மீறிய நினைவாற்றல், சிலேடை நயமும் இலக்கியச் செறிவும் நிறைந்த பேச்சாற்றல் ஆகிய பன்முகப் பண்புகளையும் ஆற்றல்களையும் இதுவரை கண்டோம். செய்குத்தம்பி எனப் பெற்றோரால் கனிவோடு அழைக்கப்பட்ட பாவலர் தமிழ்ச் சமுதாய மக்களால் பாவலர், மகாமதி, சதாவதானி, தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் என்றெல்லாம் புகழ்ப் பெயர்களால் பாராட்டப் பெற்றார்.

'தனிப்பெரும் பாவலர், நாவலர், பன்னூலாசிரியர், பதிப்பாசிரியர், பத்திரிகை ஆசிரியர், போதக ஆசிரியர், உரையாசிரியர், சொற்பொழிவாசிரியர், அவதான ஆசிரியர், இலக்கண இலக்கிய விமர்சகர், பல்துறை பயிற்சி ஆய்வான வித்தகர்' எனவெல்லாம் அவரை நன்குணர்ந்த அவரது புதல்வராலேயே பாவலர் புகழப்படுகிறார்.[1] பாவலர் பற்றிய இம்மதிப்பீடு பாவலரது பழுத்த பல்துறைப் புலமையையும் தொண்டையும் வெளிப்படுத்தும்.

'அவதானத் திறமை தந்த அதி அபூர்வ நினைவாற்றல், ஆழ்ந்த புலமை தந்த கூர்த்த மதியாற்றல், அதிசயிக்க வைக்கும் அற்புதப் பிரசங்க ஆற்றல் யாவுமாக இணைந்து ஓருருப் பெற்று ஆற்றலின் மொத்த உருவமாகப் பாவலர் விளங்கினார்.[2]

பாவலர் வாழ்வை உற்று நோக்கினால் ஓர் உண்மை விளங்கும். மிகப்பல நூல்களைப் படைத்துத் தந்திருந்தாலும் அன்னாரது புலமையளவுக்கு அவர்களது நூல்கள் பெருக்கம் இல்லை என்று ஒருவர் நினைக்கக் கூடும். சாதாரணப் புலமை யுடையவர்கள் கூட அரை நூற்றுக்கணக்கான நூல்களைப் பட்டியல் போட்டுக் காட்டும் இக்காலத்து வாழும் நமக்கு இத்தகு எண்ணம் தோன்றுதல் இயல்பு. பாவலரைப் பற்றி முழுமையாக அறிந்தவரும் பாவலர் வாழ்ந்த காலத் தமிழகம் பற்றித் தெரிந்து வரும் பாவலரது படைப்பிலக்கியங்களின் எண்ணிக்கைக் குறைவுக்கு உரிய காரணத்தை எளிதில் உணர முடியும்.

பாவலரது படைப்புக்கள் பேரளவில் அச்சாகி வெளிவந்தது அவர்கள் சென்னையில் வாழ்ந்த காலத்தில் மட்டுமே. அதற்குக் காரணம் பாவலரது நண்பர் இட்டா பார்த்தசாரதியவர்களே. சென்னையிலிருந்து கோட்டாறு திரும்பிய பிறகு பாவலர் ஒரு நூலை மட்டுமே வெளியிட்டார். இம்மென்னும் முன்னம் எண்ணூறு கவிதைகளைத் தருகின்ற படைப்பாற்றல் மிகுந்தவர் என்றாலும் பல நூல்களை அச்சிடுவதற்கு வறுமை தடையாக இருந்தது. பாவலரது பொருளாதார நிலை வாணிகம் தந்த வருமானம் அவர்களது குடும்பத்தை நடத்துவதற்கே போதுமானதாக இருந்தது. புலமை மிக்கோருக்கேயுரிய வறுமை பாவலரையும் பற்றி நின்றது. அன்றியும் பாவலர் உடல்நலம் குன்றியவராகவே வாழ்நாளெல்லாம் வருந்தினர். அன்றையத் தமிழகத்துப் பல ஊர் மக்கள் பாவலர் பொழிவைக் கேட்கப் பெரிதும் விரும்பியும் பாவலரது உடல் நலக்குறைவு காரணமாக அவர்களால் கேட்க முடியவில்லை. பாவலரது வறுமையும் உடல்நலக் குறைவுமே அவர்கள் மிகப்பல படைப்பிலக்கியங்களை வெளியிடாமைக்குக் காரணம். நூல்களை வெளியிடும் வள்ளற்பெருமக்களும் பாவலருக்கு வாய்க்கவில்லை என்பது நினைக்கத்தக்கதாகும்.

பாவலரது புலமையைத் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களது புலமையோடு ஒப்பிடலாம். ஆனால் எண்ணற்ற பாடல்களைப் பாடிக் குவித்த மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களுக்கு இருந்த பொருள் வசதி பாவலருக்கு இல்லை என்பது வெளிப்படை. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களது புகழ்வாய்ந்த மாணவர்களைப் போலப் பலரையும் பாவலர் பெற்றிருந்தார். முதுபெரும் புலவர் சாத்தாங்குட்டிப் பிள்ளையவர்கள், குமரேசப்பிள்ளை அவர்கள் போன்ற மிகப் பல மாணவர்கள் நாஞ்சில் நாட்டிலும், தமிழகத்திலும் சிறந்த தமிழ்த் தொண்டாற்றினர். இன்றுவரை தென்தமிழ் நாட்டார் தமிழ்த் தொண்டில் தலை நிற்பதற்குப் பாவலரும் காரணம் என்ற கருத்து உண்மையாகும்.

திருவள்ளுவரது திருக்குறள், கம்பரது இராமாயணம், சீறாப்புராணம், இராமலிங்க வள்ளலாரது திருவருட்பாக்கள் ஆகியன பாவலரது புலமையை வெளிப்படுத்திய களங்கள் எனலாம். தமிழ் இலக்கண இலக்கியங்கள் அனைத்திலும் பயிற்சியும் புலமையும் மிக்க பாவலருக்கு மேற்குறித்த நான்கு இலக்கியங்களும் புலமை வெளிப்பாட்டிற்கு வாய்ப்புத் தந்தன எனக் கருதலாம்.

அறிஞர் ம.பொ.சிவஞானம் அவர்கள் தமது வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்னும் நூலின் முன்னுரையில் இராமலிங்க வள்ளலார் உருவாக்கிய மூன்று வகை ஒருமைப் பாடுகளைப் பேசுவார். அவை பாரத தேசிய ஒருமைப்பாடு, மனித சமுதாய ஒருமைப்பாடு, ஆன்மநேய ஒருமைப்பாடு என்னும் உயிர்க்குல ஒருமைப்பாடு ஆகியவையாகும். சதாவதானிப் பவா்லர் இம் மூவகை ஒருமைப்பாட்டையும் விரும்பிப் பேசியவர். வள்ளலாரது அருட்பாக்களில் உளம்போக்கி உணர்ந்தவர். அவை அருட் பாக்களே என வாதிட்டு நாட்டியவர். ஆதலின் பாவலர் சமயம் பார்க்காது இலக்கியத்தரம் பார்த்த திறனாய்வாளர் என்பது உணரத்தக்க உண்மையாகும். 'என் ஆசான் பாவலரே' எனக் கூறிய திரு.வி.க.வும் 'என் இலக்கிய ஆசான் பாவலரே' எனப்பகர்ந்த ஜீவானந்தமும் இக்கருத்துக்கு உரிய சான்றுகளாவர்.

இந்திய விடுதலை வேட்கை கொண்டு காந்தியடிகள் வழி நின்று விடுதலைப் போரில் பாவலர் பெரும்பங்கு பற்றினார் என்பதும் அறியத்தக்கதாகும்.

பாவலரது பரந்துபட்ட பல்வேறுபட்ட சமுதாயப் பணிகளுக்குள்ளே தலையானது அவர்களது சமூக நல்லிணக்க உணர்வேயாகும். தமிழ்மொழி, இந்தியநாடு, உலக உயர்வு இவற்றையன்றிச் சமய, இன, குல, நிற, மொழி வேறுபாடுகளை அறவே நினையாதவர் பாவலர். இன்றைய இந்திய நாட்டின் வளர்ச்சிக்கும் நல்வாழ்வுக்கும் அடிப்படையான சமூக நல்லிணக்கப் பண்பு பாவலர் எண்ணத்திலும் கருத்து வெளிப் பாட்டிலும் பணியிலும் உயர்ந்து ஓங்கி நின்றது. இன்றைய இந்திய மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் இப்பண்பே பாவலர் வலியுறுத்திய தலைப்பண்பு எனலாம்.

---

## அடிக்குறிப்பு

1. ஹமீது, கே.பி.எஸ்., கருத்தரங்கக்கோவை, ஐந்தாம் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு, கீழக்கரை, 1990, பக்.143
2. மு.நூ., பக்.142

# முக்கிய நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| பிறந்த நாள் | : | 31.7.1874<br>புதன் கிழமை |
| தந்தையார் | : | பக்கீர் மீறான் |
| தாயார் | : | ஆமினா அம்மையார் |
| ஆசான் | : | சங்கரநாராயண அண்ணாவியார் |
| ஊர் | : | கோட்டாறு |
| திருமணம் | : | 1907 |
| மனைவி | : | முகம்மது பாத்திமா பீவி |
| மக்கள் | : | ஆண் மக்கள் நால்வர்,<br>பெண் ஒருவர் |
| தலைமாணாக்கர் | : | தெங்கம்புதூர் தா. சாத்தாங்<br>குட்டிப் பிள்ளை |
| நடத்திய இதழ்கள் | : | யதார்த்தவாதி (1898)<br>இஸ்லாமியமித்திரன் |
| சோட சாவதானம் | : | 1906, கோட்டாறு |
| சதாவதானம் | : | 1907, மார்ச்சு 10,<br>விக்டோரியா அரங்கு,<br>சென்னை. |
| மறைவு | : | 13.2.1950 |

# படைத்த நூல்கள்

**அச்சேறியவை** — **உரைநடை**

1. தேவலோகப் பழிக்குற்ற வழக்கு
2. வேதாந்த விவகாரப் பழிக்குற்ற வழக்கு
3. சீறா நாடகம்
4. சீறாப்புராணப் பொழிப்புரை
5. நபிகள் நாயகத்தின் ஜீவிய சரித்திரம்

**செய்யுள்**

6. கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ்
7. கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி
8. நபிகள் நாயக மான்மிய மஞ்சரி
9. கல்வத்து நாயக இன்னிசைப் பாமாலை
10. சம்சுத்தாசீன் கோவை
11. நாகூர்த் திரிபந்தாதி

**அச்சேறாதவை**

12. நாகைக் கோவை
13. அழகப்பக்கோவை
14. உத்தமபாளையம் முகம்மது இஸ்மாயில் கோவை
15. சசிவோத்தமக் கோவை
16. நீதிவெண்பா
17. தனிப்பாடல்கள்

## பெற்ற பட்டங்கள் — வழங்கியோர்

| பெற்ற பட்டங்கள் | வழங்கியோர் |
|---|---|
| **சதாவதானி, மகாமதி** | சதாவதான அரங்கச் சான்றோர், விக்டோரியா ஹால், சென்னை (1907) |

| | |
|---|---|
| | தலைமை: மகாவித்வான் கண்ணப்ப முதலியார் |
| **தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்** | காஞ்சிபுரச்சான்றோர் - அருட்பா மருட்பாப்போராட்டத்தில் வெற்றி பெற்றபோது காஞ்சி வரதராசப் பெருமாள் கோயில் பூரண கும்ப மரியாதையோடு வழங்கப்பட்டது. |
| **கலைக்கடல்** | தொண்டி நகரச் சான்றார் |
| **அல்லாமா (டாக்டர்)** | திண்டுக்கல் நகரச் சான்றோர் |
| **தமிழ்ப்பெரும் புலவர்** | நாஞ்சில் நாட்டவர் |
| **பாவலர்** | சென்னைச் சான்றோர் வட்டம். |

# துணை நூற்பட்டியல்

1. இஸ்லாமிய இலக்கியம், அப்துல்கபூர், கா., 1978
2. கம்பராமாயணம், கம்பன் கழகம், சென்னை, 1976
3. கருத்தரங்கக் கோவை, ஐந்தாம் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு, கீழக்கரை, 1990
4. சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் நினைவு மலர், 1961
5. செந்தமிழ் வளர்த்த செய்குத்தம்பி, குமரேசப்பிள்ளை, சி., குமரன் பதிப்பகம், தெற்குத்தெரு, சுசீந்தரம், 1986
6. திருக்குறள், திருக்குறள் அறநிலையம், திருவள்ளுவர் ஆலயம், மைலாப்பூர், சென்னை, 1954
7. நபிகள் நாயக மான்மிய மஞ்சரி, சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர், இலவச வெளியீடு, 1976
8. மகாமதிப் பாவலர், பசுலுமுகியித்தீன், செ., டாக்டர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ., தரமணி, சென்னை-600 113
9. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, சிவஞானம், ம.பொ., இன்பநிலையம், மைலாப்பூர், சென்னை-4, 1971

**சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர்** (1874 - 1950) இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்ப் புலவர். பாவலர் என்றால் அவரையே குறிக்கும், அரிய பாவினமாகிய கட்டளைக் கலித்துறை பாடியவர்; கோவை நூல்கள் செய்தவர். நூற்றுக் கணக்கான சீட்டுக்கவிகள் தந்து தமிழ்ப்புலவர்களை ஊக்குவித்தவர். கல்வித் தொண்டு செய்து சாகாது வாழும் பெருமக்களைப் பாடியவர். இன்றைய சமுதாய வாழ்வுக்கு இன்றி யமையாத் தேவையான சமூக நல்லிணக்கத்தைப் பேணிப் பாதுகாத்தவர். நூற்றி யொரு அவதானம் செய்து அறிஞர்களின் பாராட்டைப் பெற்றவர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வாழ்நாள் முழுதும் கதராடை அணிந்து மகிழ்ந்தவர்.

**மு. அப்துல்கறீம்:** இப்புலவர் பெருந்தகையின் பாட்டுத் திறத்தையும் நினைவாற்றலையும் உயர் பண்புகளையும் சான்றுகளோடு வழங்கியுள்ள இவர் , அதிராம்பட்டினம், காதிர்முகியித்தீன் கல்லூரியின் முதல்வராகவும் தமிழ் த்துறைத் தலைவராகவும் விளங்கிக் கல்விப் பணியாற்றியவர். முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ்த் திறனாய்வு நூல்களையும் உரை நூல்களையும் படைத்தவர். பல இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்களைப் பதிப்பித்தவர். சதாவதானிப் பாவலரின் தமிழ்ப் பணியை இந்நூலில் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

*Seighuthambi Pavalar* (Tamil) Rs.25

ISBN-81-260-1248-X